யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Years of Academic Pursuits

1974 - 2024

University of Jaffna

# ஆய்வடங்கல்

## [ஆய்வுச்சுருக்கம்]

## இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு 2023

"இந்துக்கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்"

இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**21 March 2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

# CONFERENCE PROCEEDINGS
## [Abstracts]

## Second International Hindu Conference (IHC) - 2023

" The Traditions of Hindu Studies and Sri Lankans "

Faculty of Hindu Studies
University of Jaffna

JUICE - 2024
" Striving for Excellence "

Under the Sphere of
Jaffna University International Research Conference - 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Conference Proceedings
Second International Hindu Conference

IHC - 2023
Faculty of Hindu Studies
University of Jaffna

Editors : Dr.S.Muhunthan (Chief Editor)
Ms.P.Thuhaya
Ms.T.Kishanthiny

All rights reserved

ISBN : 978-624-5901-24-1

Email - ihc2023jfn@gmail.com

Published by :
Faculty of Hindu Studies
University of Jaffna

Printed by: Mathi Colours Nallur Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Conference Committee Members

| | |
|---|---|
| General Chair | : Prof.S.Srisatkunarajah |
| | Mr.S.Padmanaban |
| Conference Chair/Convener: | Mr.S.Ramanarajah |
| Secretary | : Prof (Mrs) V.Pavanesan |
| Finance Chair | : Dr.(Mrs)S.Srimuralitharan |
| Editorial Committe | : Dr.S.Muhunthan (Chief Editor) |
| | Ms.P.Thuhaya |
| | Ms.T.Kishanthiny |

**List of Reviewers**

| | |
|---|---|
| 1. Prof. K. Arunthavarajah | University of Jaffna |
| 2. Prof. P. Gopalakrishna Iyer | University of Jaffna |
| 3. Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| 4. Prof. (Mrs.). A.N. Krishnaveni | University of Jaffna |
| 5. Prof. V. Maheswaran | University of Peradeniya |
| 6. Prof. (Mrs.). V. Pavanesan | University of Jaffna |
| 7. Prof. M. Ragunathan | University of Jaffna |
| 8. Prof.S.Raguram | University of Jaffna |
| 9. Prof.J.Rasanayagam | University of Jaffna |
| 10. Prof. S.Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 11. Prof. A. Shanmugadas | University of Jaffna |
| 12. Prof. N. Shanmugalingan | University of Jaffna |
| 13. Prof. S. Sivalingaraja | University of Jaffna |
| 14. Prof.S.Sivasubramaniyam | University of Jaffna |
| 15. Prof. M. Vethanathan | University of Jaffna |
| 16. Prof. K. Vishakaruban | University of Jaffna |
| 17. Dr. M. Balakailasanathasarma | University of Jaffna |
| 18. Dr. V. Gunapalasingam | Eastern University, Sri Lanka |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. Dr.I.Jeyandran — University of Jaffna
20. Dr. S. Muhunthan — University of Jaffna
21. Dr.A.Nithilavarman — University of Jaffna
22. Dr.S.Sabaananth — University of Jaffna
23. Dr.S.Sooriyakumar — University of Jaffna
24. Dr. (Mrs.) S. Srimuralitharan — University of Jaffna
25. Dr.G.Sritharan — Herbal Health Care Centre, Kokuvil
26. Dr. (Mrs.) T. Thileepan — University of Jaffna
27. Dr.(Mrs).M.Visakaruban — University of Jaffna
28. Mr. S. Padmanaban — University of Jaffna
29. Mr. R. Rajeshkannan — University of Jaffna
30. Mr. S. Ramanarajah — University of Jaffna
31. Mr. N. Subaraj — South Eastern University of Sri Lanka
32. Mr. N. Vaman — Eastern University, Sri Lanka
33. Mrs.Abrami Rajkumar — University of Jaffna
34. Mrs. S. Arulanantham — University of Jaffna
35. Mrs.S.Jeganathan — University of Jaffna
36. Mrs.S.Niranjan — University of Jaffna
37. Mrs.N.Selvambigai — University of Jaffna
38. Mrs.M. Sivakaran — University of Jaffna
39. Mrs.Sivaruby Sajitharan — University of Jaffna
40. Mrs. S. Srisatkunarajah — University of Jaffna
41. Ms. P. Kularajasingam — University of Jaffna
42. Ms. S.Poongulaly — University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி i
இந்துக்கற்கைகள் பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி ii
மாநாட்டு ஒருங்கிணைப்பாளரின் செய்தி iii - v
மாநாட்டுச் செயலாளரின் செய்தி vi - vii
பிரதம பதிப்பாசிரியரின் செய்தி viii - ix
ஆதார சுருதியுரைஞரின் செய்தி x - xi

சமயமும் பண்பாடும்

மட்டக்களப்புக் கோயில்களும் சமூக வழமைகளும் 01
ருஜானி.நி
திருகோணமலை கோணேசர் ஆலயத்தின் நீருக்கடியில் உள்ள இந்துச் சிற்பங்கள் 02
மா.சிறிசாந்தன்
யாழ்ப்பாண இந்துக் கோவில்களில் புத்தாக்க முயற்சிகள்: கிரியை முறைகள் மற்றும் கட்டடக் கலையினூடான நோக்கு 03
இ.ஜனார்தன்
ஆரம்பப் பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனையும் இந்துப் பண்பாடும் 04
டிஜானா.ற, பவித்ரா.கோ, இதர்சினி.இ
சைவ வைணவ பின்புலத்தில் பாதவழிபாடு: சிவனொளிபாதமலையை அடிப்படையாகக் கொண்டது 05
கிஷாந்தினி.தி
சமகாலத்தில் தீவிரமடையும் மதமாற்ற முயற்சிகளும் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களும் 06
லினுஜா.ர
இலங்கையில் இந்துசமய வழிபாட்டுச் செல்நெறியில் பாதயாத்திரை: உகந்தை கதிர்காம யாத்திரையை அடிப்படையாகக் கொண்டது 07
கீர்த்தனா.ஜெ
இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிற்பிரபந்தங்களின் பொருண்மைகள் 08
தயாளினி.கு
முருகனின் போர் வீரர்கள்: நல்லூர் கோவில் சூரன்போர், ஐதீகம், சமூக முதன்மை பற்றிய மானிடவியல் ஆய்வு 09
இ.ஶ்ரீரஞ்சன், ச.சிறிகாந்தன்
சைவசமயவளர்ச்சியில் சமயநிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது 10
நி.சிவாஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு: வலம்புரி நாளிதழ்களை முன்னிறுத்தியது 11
குவிதா.ஐ
அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சைவசமயத்தின் சமகாலப் போக்குகள் 12
சந்தோசா.தி
இலங்கையில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்கள் 13
சுலக்சி.வி, சனிசியா.செ, கிறிஸ்ரினா இவாஞ்சலின்.து
திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் கோபுரக் கட்டுமானம்: உருத்திரபுரீஸ்வரர் சிவன்கோயிலை அடிப்படையாகக் கொண்டது 14
தமிழ்ச்செல்வி.ப
சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம் 15
தனிஸ்ரா.ஆ, சாந்தினி.அ
யோகர் சுவாமிகளின் பாடல்களில் திருநாவுக்கரசர் தேவாரங்களின் தாக்கம் 16
பரமேஸ்வரி.க
ஈழத்து இந்துக்களின் வாழ்வியலில் புதைந்துள்ள அறிவியல் 17
றஜிதா.அ
கம்பராமாயணம் சுட்டும் அரசுகள் - ஒரு விபரண ஆய்வு 18
அ.அனுராதமேனன்
Rendering stories in English from Periya Puranam as a strategy to promote reading skills through cultural contexts: A study with a group of Undergraduates 19
K.Shriganeshan

## மெய்யியலும் உளவியலும்

அறிகை நடத்தை சிகிச்சையில் ஆலய வழிபாட்டின் பங்களிப்பு 20
பிரியங்கா.கு, ச.சஜீபன்
தற்கால சமூகத்தில் கலைகளின் மாற்றமும் நுகர்வோர் சமூகமும்: ஒரு மெய்யியல் நோக்கு 21
சாருகா.செ, தி.திலீபன்
இந்துசமயப்பண்பாட்டில் மாஸ்லோவின் தேவைக்கொள்கை 22
பிரவினா.டி, பிரவீனா.இ, பி.அன்றூ ஜவன் றொசாந்தன்
மனமும் நடத்தைகளும் - விபுலாநந்தரின் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது. 23
வர்ணி.ச
அக்கமாதேவியின் வசனாங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள் 24
செல்வகுமாரி.சி
ஈழத்து சித்தர் குடைச்சுவாமியின் புலன்கடந்த புலக்காட்சியின் தொடர்புகள் 25
பாத்திமா அஸ்கியா.ஜ், தட்ஷாயினி.யோ
சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆளுமை வெளிப்பாடுகள் 26
விதுர்சிகா.த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபக்தியில் வெளிப்பட்டு நிற்கும் உள உணர்வு வெளிப்பாடுகள்: ஆழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு 27
கஸ்தூரி.ச

மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பைக் கையாள்வதில் யோக சிகிச்சை 28
ச.சஜீபன், க.கஜவிந்தன்

நவராத்திரி விரதத்தில் பிரயோக உளவியல் 29
சுமித்ரா.செ, ந.கோபிராம், சங்கீதவாணி.ச

சிவயோக சுவாமிகளின் "நற்சிந்தனை"யில் ஒழுக்கவியல் சிந்தனைகள் 30
அபிராமி.செ

வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் சிற்றின்ப வெளிப்பாடு 31
தினுஷிகா.ரி

மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும். 32
இதயகுமாரி.சி, சஜானா.எ

சைவசித்தாந்த மரபில் சிவசின்னங்கள் பெறும் முக்கியத்துவம்: சைவபூஷண சந்திரிகையின் ஊடான நோக்கு 33
கீர்த்தனா.கு

## உணவியலும் ஆரோக்கியமும்

இந்துப்பண்பாட்டில் உணவியலும் ஆரோக்கியமும் 34
இரா. பன்னிருகைவடிவேலன்

பரராசசேகரத்தில் உணவும் ஆரோக்கியமும் 35
தனுஷா.நீ

திருமந்திரம், ஆசாரக்கோவை வெளிப்படுத்தும் உணவு முறைகள் 36
பேபிசாலினி.அ

வேதாத்திரிய யோகவியலும் உடற்கல்வியும் 37
ஜோதிலட்சுமி.மு

ஈழத்துச்சிதம்பர புராணம் வெளிப்படுத்தி நிற்கும் விருந்தோம்பல் சிந்தனைகள் 38
துஹாயா.பே

கந்தசஷ்டி விரதகால வாழ்வியலில் உளவியல் 39
நிவேதா.கை

Effect of Yoga practices on the anxiety level of Sports players in Jaffna zone compared to stretching exercises 40
V.Raguvarman, K.Ketheeswaran, K.Ganeshanathan

## நாட்டாரியலும் சூழலியலும்

மட்டக்களப்புப் பிரதேசத்து வதனமார் வழிபாடு: மரபும் மாற்றமும் 41
உ.ஜீவதர்சன், வ.குணபாலசிங்கம்

மட்டக்களப்பில் பெரியசுவாமி வழிபாட்டு முறைகள் 42
அ.தனோஜன், வ.குணபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரைமலைப்பள்ளு இலக்கியத்தில் நாட்டாரியல் கூறுகள்: ஓர் ஆய்வு 43
கேதீஸ்வரி.ர, தனுஷா.நீ
ஈழத்துக் கண்ணகியம்மன் சடங்குகளில் பெண்களின் வகிபங்கு 44
நிரோஷா.கோ
மட்டக்களப்பு கிராமிய இசையில் பயன்படுத்தப்படும் தருக்கள் 45
த.கோபிநாத், த.வாகீசன்
காத்தவராயன் கூத்து – மரபும் மாற்றங்களும் 46
த.றொபேட் அருட்சேகரன்
அறிவியல் நோக்கில் மாந்திரீகக் கலை 47
பிரேமகலா.கே
காமன் கூத்தும் மலையக பண்பாடும் 48
லோகேஸ்வரி.பா. கோவிந்தனி.சு, சமீதா.பா
கரவெட்டிப் பிரதேசத்தில் செவ்வாச்சி வழிபாடு: ஒரு நோக்கு 49
நிஜிதா.சி, பவநேசன்.வி
இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் 50
கீதாஞ்சலி.த, அபிராமி.சூ
மட்டக்களப்புப் பாரம்பரியத்தில் வைரவர் வழிபாடு 51
அபிஷனா,சி
இலங்கையில் திரௌபதியம்மன் வழிபாட்டுமுறை 52
கஸ்மிதா.ஜெ
இலங்கையில் பண்பாட்டுச் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்கள்:
சமூகவியல் நோக்கு 53
த.விமல்
மட்டுவில் - சந்திரபுரம் பிரதேசத்தில் அண்ணமார் வழிபாட்டின் சமகாலச் செல்நெறி:
கொட்டைப்புலவு அண்ணமார் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டது. 54
சங்கவி.ப

**பின்னிணைப்புகள்**

மாநாட்டு அழைப்பிதழ்
ஆய்வரங்க அமர்வுகளுக்கான கையேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தாயின் ஐம்பதாம் ஆண்டு காலப்பகுதியில் இந்துக் கற்கைகள் பீடம் இரண்டாவது அனைத்துலக இந்து மாநாட்டினை நடாத்துவதனையிட்டு எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"சனாதன தர்மம்" எனப் புராதன காலம் தொட்டு அழைக்கப்படும் சமய மரபு இந்து மதம் எனத் தற்காலத்தவர்களால் விதந்துரைக்கப்படுகின்றது. இம்மரபில் தொன்றுதொட்டு இயற்கையையும் இயற்கை நியதிகளையும் இறைவனாகக் கண்டு வழிபட்டு வந்தனர். இம் மரபுநெறியிலேயே வேதங்கள், திருமுறைகள் என அருளாளர்களால் போற்றப்பட்ட தன்மையதாகக் காணமுடிகின்றது.

இந்துக்கற்கைகள் பீடம் தமது செயற்பாடுகளில் ஒன்றான ஆராய்ச்சி எனும் நிலையில் "இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் இவ்வாய்வு மாநாட்டினை முன்னெடுக்கின்றது. இம்மாநாடு செயலுருவாக்கம் பெறுவதற்கு உழைத்த அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்றுபடுகின்ற சிறப்பினை இந்துமதத்தின் பன்னெடுங்கால நம்பிக்கைகளில் காணமுடிகின்றது. சமயம், தத்துவம், வாழ்வியல், கலை, பண்பாடு, பாரம்பரியம், மரபு என அதனது கிளைகள் விரிந்தும் பரந்தும் செல்லும் தன்மையுடையன. அந்நிலையில் இந்திய நாட்டைத் தாய்நாடு என்றும் இலங்கை நாட்டினைச் சேய்நாடு என்றும் அழைக்கின்றோம். இந்திய இலங்கைக்கு இடையிலான உறவு பன்னெடுங்காலமாக நிலவிவருகின்றது.

இம்மாநாட்டின் ஆதாரசுருதி உரைஞராக கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகராலய ஸ்ரீவிவேகானந்த கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி அங்குரன் தத்தா அவர்கள் கலந்து சிறப்பிப்பது இந்திய இலங்கைக்கான கலாசார உறவை வலுப்படுத்தும் வகையில் அமைகின்றது.

இம்மாநாட்டினை மேலும் மெருகூட்டும் நிகழ்வாக சமூகச் செயற்பாடுகளில் ஆன்மிக ரீதியிலும் பொதுப் பணியிலும் உத்வேகமாகப் பணியாற்றிய- பணியாற்றி வருகின்ற ஆளுமைகளையும் சமய நிறுவனங்களையும் இனங்கண்டு கௌரவிக்கும் ஏற்பாடும் இடம்பெறுகின்றது. ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருட் சிறப்பால் இரண்டாவது அனைத்துலக இந்து மாநாடு சிறப்படைய வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர்
சி.சிறிசற்குணராஜா
துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துக்கற்கைகள் பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் இந்துக்கற்கைகள் பீடம் தனது இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டினை ஒழுங்கமைத்துள்ளமை மிகுந்த பெருமைக்குரிய விடயமாகும்.

"இந்துக்கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இம்மாநாட்டில் புலமைசார் அறிஞர்களும் ஆய்வாளர்களும் மாணவர்களும் இணைந்து பங்கேற்கின்றமை சிறப்பம்சமாகும்.

உலகளாவிய ரீதியில் இலங்கையர் எனும் தனித்த அடையாளத்துடன் இந்துக் கற்கைகள் தொடர்பான பரந்த கூறுகளுக்கு பல்வேறு தளங்களிலும் பலரும் பங்காற்றி வருகின்றனர். இவர்களின் தன்னலங்கருதாத சேவைகள் என்றும் மதிப்பளிக்கத்தக்க பெருமையுடையன. அவ்வகையில் தேகாந்த நிலையிலும் சமூக சேவையாற்றிவரும் நிலையிலும் தனிநபர்கள் இருவருக்கும் சமூக சேவையாற்றிவரும் நிறுவனம் ஒன்றிற்குமாக இம்மாநாட்டில் கௌரவமளிக்கும் நிகழ்வும் இடம்பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

இம்மாநாட்டின் ஆதாரசுருதி உரையினை ஆற்றுவதற்காகக் கொழும்பு, இந்திய உயர் ஸ்தானிகராலய சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்தின் செயலர் பங்குகொள்கின்றமை ஆய்வு நிலையில் இந்திய இலங்கைக்கான உறவினை மேலும் வலுப்படுத்தும் தன்மையதாக அமையும்.

இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்காக இணைந்து செயலாற்றுகின்ற அனைவரது அர்ப்பணிப்புக்களும் பாராட்டுதற்குரியன. அதேவேளை ஆய்வுக்கட்டுரைகளின் சீர்மைக்காக மதிப்பீட்டாளர்களாக செயலாற்றியோருக்கும் எமது மனம்நிறைந்த நன்றியறிதல்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் திருவருளால் இந்துக்கற்கைகள் பீடத்தின் வளர்ச்சி எல்லா நிலைகளிலும் வலுப்பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ச.பத்மநாபன்**
**பீடாதிபதி,**
**இந்துக்கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒருங்கிணைப்பாளரின் செய்தி

"கற்றல் கேட்டலுடையார் பெரியார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே" – சம்பந்தர்

எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம் என்றான் பாரதி. சிந்தனைகளும் எழுத்துக்களும் அதனால் உருவாக்கப்படுகின்ற ஆய்வின் தொகுப்புகளும் எமது சந்ததிகள் பயன்பெறுவதற் கானவை. மனிதரின் இருப்பினை காலம் மறைத்துவிடலாம். ஆனால், ஆய்வறிஞர்களின் எழுத்துக்களும் ஆய்வுகளினூடு பெறப்படுகின்ற முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் தன்மையின. ஆய்வாளர்களின் சிந்தனைகளுக்கும் புலமைத்துவ அடையாளத்துக்கும் இவ்வகையான ஆய்வுகள் வலுச்சேர்க்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பிராந்தியப் பண்பாட்டுக் கூறுகளை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது. அது உருவாகிய காலத்தில் மானிடப் பண்பியல் துறைகளில் ஒன்றாக இருந்த இந்துநாகரிகத்துறையே இன்று இந்துக் கற்கைகள் பீடமாக உருமாறி வளம்பெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி (1974 – 2024) ஐம்பதாவது வருட நிறைவில் இந்துக்கற்கைகள் பீடம் இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டினை நடாத்துவதென்பது உச்ச மகிழ்வினைத் தருகின்றது.

உண்மையில் இந்த ஆய்வு மாநாடு கடந்த வருடம் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும், சில அசாதாரண சூழமைவுகளால் அது நடந்தேறவில்லை. "எப்பவோ முடிந்த காரியம்" என்னும் அருள்வாக்குக்கு அமைய, சிவயோக சுவாமிகளின் குருபூசைத் தினமாகிய இன்றைய நாளில் இடம்பெறுவது தெய்வசித்தமே என்பதைத் தவிர வேறொரு காரணத்தையும் யான் கண்டறியேன்.

மாநாடுகள் சமூகத்தில் பல்வகைமைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியவை. குறிப்பாக இந்துநாகரிகத்துறை கடந்த காலங்களில் நடாத்திய மாநாடுகளின் தாக்கமே இந்துக்கற்கைகள் பீடத்தின் உருவாக்கத்துக்கான அடிப்படைகளைத் தோற்றுவித்திருந்தன. இப்பின்னணியில் இந்துக்கற்கைகள் பீடம் நடாத்துகின்ற இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு "இந்துக்கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுவது மகிழ்வான தருணமாகும்.

> "இந்துப்பண்பாடு மற்றும் இந்துக்கற்கைகளின் முழுதளாவிய அறிகைக் கூறுகளின் பரவலாக்கத்துக்கும் கையளிப்புகளுக்கும் அவைசார்ந்த விழிப்புணர்வுகளுக்கும் இத்தகைய ஆய்வுகள் – ஆய்வு மாநாடுகள் வலுச்சேர்க்கும்"

எனும் கருதுகோளின் அடிப்படையில் இம்மாநாடு இந்துக்கற்கைகள் பீடத்தினரால் தொடருறு நிகழ்வாக முன்னெடுக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து இலக்கியங்களில் ஆழமாகப் பொதிந்திருக்கின்ற மறைபொருட்கூறுகளை வெளிக் கொணர்வதற்கான ஆராயுந்திறன் இந்த மாநாடுகளூடாக வளர்க்கப்படுகின்றது. இந்துக் கற்கைகள் புலம்சார்ந்து புதுமையான ஆராய்ச்சிச் செல்நெறிகள் விரிநிலை எய்தவும், அவற்றின் அறிதல், புரிதலுக்கும் இம்மாநாடு அனுமதியளிக்கின்றது.

இதுபோன்ற மாநாடுகளில் தமிழ்ப்பக்தி இலக்கிய ஆய்வுகளும் இடம்பெறுகின்றன. தமிழ்ப்பக்தி இலக்கிய ஆய்வுகளின் முன்னோடிகள் என பாரத அறிஞர்களே விதந்து சுட்டுகின்ற பேராசிரியர் கைலாசபதி மற்றும் பேராசிரியர் சிவத்தம்பி ஆகிய இருவரும் ஈழத்தவர்களே.

> "தமிழகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் வரலாற்றில் மதம் (அல்லது மதங்கள்) வகித்து வந்த இடம்பற்றிய ஆய்வுகள் அதிகம் இடம்பெறவில்லை. பேராசிரியர் நா.வானமாமலை, கைலாசபதி போன்றவர்கள் (இந்த நூலாசிரியர் உட்பட) சில சமூக, மத ஆய்வுகளைச் செய்திருந்தனர்

என பேராசிரியர் க.சிவத்தம்பி தன்னையும் ஒருவராக உட்படுத்திக் கூறுவது இங்கு மனங்கொள்ளற் பாலது. எனவே, இந்துக்கற்கைகள் புலம் குறித்த எழுத்துக்களானவை "விளக்கக் கட்டுரைகள்" என்ற எல்லையைத் தாண்டி புதிய நோக்கு நிலைகளில் அணுகுவதற்கான வாய்ப்புக்களை இத்தகைய ஆய்வு மாநாடுகள் வழங்கும் என்பது மறுதலிக்கவியலாத உண்மையாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப்பெற்றிருப்பினும் மதிப்பீட்டாளர்களின் அறிவுறுத்தல் மற்றும் மாநாட்டின் தொனிப்பொருள் என்பவற்றின் அடிப்படையில் ஐம்பத்து நான்கு கட்டுரைகளே சமர்ப்பிக்கப்படுகின்றன. இவை, இளையவர்களை ஆய்வுகளுக்குள் ஈர்த்துக் கொள்ளுதல், இந்துக் கற்கைகள் புலம்சார் அறிவெல்லைகளை விசாலிப்புச் செய்தல், பண்பாட்டுத், தேடல்களை ஆழப்படுத்துதல் மற்றும் ஸ்திரப்படுத்துதல் ஆகிய இலக்குகளின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவில் நடாத்தப் பெறுவதனாலும் இளநிலை ஆய்வாளர்கள் பலர் பங்கேற்பதனாலும் மாநாட்டினையொட்டி புத்தகக் கண்காட்சி இடம்பெறுவதனாலும் இந்துப்பண்பாட்டம்சங்களைப் பேணிவளர்க்கும் ஆளுமையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதனாலும் சிறப்புப் பெறுகின்றது.

எமது பீடச்சபையின் ஏகோபித்த முடிவுக்கமைய, கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையடைந்த அமரர் கு.நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களுக்கு "மெய்ப்பொருள்" விருதும் தனது அறிவினாலும் ஆளுமையினாலும் இந்துப் பண்பாட்டின் கூறுகளை பன்முகத் தன்மையில் பரவலாக்கம் செய்துவருகின்ற செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கு "ஞானவாச்சியன்" விருதும் முழுதளாவிய இலங்கையில் இந்துப் பண்பாட்டு விருத்திக்காகக் கனதியான கருமமாற்றி வருகின்ற அகில இலங்கை இந்து மாமன்றத்திற்குச் "சிவநிதி" விருதும் இன்றைய நாளில் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றமை புளகாங்கிதம் அடையத்தக்க செயல் வடிவங்களாகும்.

இந்த மாநாட்டில், பன்முகவியற் தன்மையில் விவாதிக்கப்படுகின்ற பொருண்மைகள் ஆய்வுச் சுருக்கங்களாகத் தொகுக்கப்பட்டு "ஆய்வடங்கலாக" இன்று வெளியிடப்படுகின்றது. இந்த வெளியீடு இந்துக்கற்கைகள் பீடத்தின் இரண்டாவது படைப்பாகும். இதற்காகக் கருமமாற்றிய அனைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியோடு நினைவுகூரத்தக்கவர்களாவர். இதனடிப்படையில் இந்த ஆய்வு மாநாடு இன்றைய நாளில் இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு அனுமதியளித்ததுடன், வழிகாட்டியாகவும் இருந்து நெறிப்படுத்திய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் எமது நன்றிக்குரியவர்.

"நான் பார்க்கிறேன்" என்ற தாரக மந்திரத்துடன் இம்மாநாட்டிற்கான செயலூக்கத்தினையும் ஆலோசனைகளையும் வழங்கிக் கருமமாற்றும் இந்துக்கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாதன் அவர்களுக்கும் எமது நன்றியுரித்து.

பாரத – ஈழ அறிவுலகத் தொடர்பினை அகலப்படுத்துத்தும் நோக்கில் ஆதாரசுருதியுரைஞராக வரவழைப்பதற்கு நாம் அணுகியதற்கமைய கலாநிதி அங்குரன் தத்தா (செயலாளர், சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையம்,இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு) அவர்கள் அருகிலிருந்து நிகழ்வினைச் சிறப்பிக்கின்றார். இவருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றியுரித்து.

ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்று முறைப்படுத்தி நூலாக்கும் கருமம் மிகக் கடினமானது. இந்த அரும்பெரும் கருமத்தை நிறைவுசெய்திருக்கின்ற முதன்மைப் பதிப்பாசிரியர் கலாநிதி ச.முகுந்தன் உள்ளிட்ட பதிப்பாசிரியர் குழுவினர்க்கும் நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன்.

இம்மாநாடு சிறப்புறுவதற்காக எம்முடன் நேரகாலம் பாராது கருமமாற்றிய மாநாட்டுக் குழுவினர், இந்துக்கற்கைகள் பீட உதவிப்பதிவாளர், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், யாவரும் எமது நன்றிக்குரியவர்களே.

மேலும், இந்த மாநாட்டின் பங்குதாரர்காளாக இருந்து அனுசரணை வழங்கிய அகில இலங்கை இந்துமாமன்றம், முன்னேஸ்வரம் தேவஸ்தானம், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபை சுதுமலை முத்துமாரியம்மன் ஆலயம், காரைநகர் – முருகேச சுவாமிகள் அறக்கட்டளை, யாழ் ஆசான் வெளியீடு, சிற்றி ஹாட்வெயர்ஸ், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகிய நிறுவனத்தினர்க்கு இந்த மாநாட்டின் இணைப்பாளர் என்ற வகையில் நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன்.

**திரு.சி.ரமணராஜா,**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இந்துக்கற்கைகள் பீடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாநாட்டுச் செயலாளரின் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து கற்கைகள் பீடம் "இந்து கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" எனும் தொனிப்பொருளில் நடாத்தும் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு (IHC) – 2024 மார்ச் 21ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருப்பதையிட்டு இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்து மதத்தின் புராதனச் சிறப்பினையும் உலகளாவிய மேன்மையினையும் எடுத்துரைக்கும் நோக்கில் இம்மாநாடு நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களது அயரா முயற்சியின் பெறுபேறாக இன்று எமக்குக் கிடைத்துள்ள இப்பீடமானது இலங்கைவாழ் இந்துக்களின் உயர் பீடமாக உள்ளது. இலங்கையில் வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் இல்லாத ஒரு பீடமாக இந்துக்கற்கைகள் பீடம் அமைந்திருப்பது, சிறப்புமிக்கது. இத்தகைய சிறப்புமிக்க பீடம் இந்துக்கற்கைகள் புலமாகிய இந்துநாகரிகம், சைவசித்தாந்தம், சமஸ்கிருதம் என்பன பற்றியும் இலங்கையின் இந்து அறிஞர்களது அளப்பரிய பங்களிப்புகள் பற்றியும் ஆய்வு செய்து இளம்தலைமுறையினருக்குக் கையளிக்கும் நோக்குடனும் உலகிற்கு எடுத்துக்கூறும் நோக்குடனும் இச்சர்வதேச மாநாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்து தருமம், தத்துவம், சமயம் தொன்மை மிக்கது. என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பது. உலக கலாசார பண்பாட்டு வளர்ச்சியில் எழுபது கோடி மக்கள் வாழ்ந்த, வாழ்கின்ற ஆன்மீக வாழ்வின் வடிவமே இந்துசமய தத்துவ மரபாகும் என்பது பிரெஞ்சு அறிஞரும், கீழைத்தேய ஞானிகளையிட்டு நூல்களை எழுதி நோபல் பரிசு பெற்றவருமான ரொமையின் ரோலந்து அவர்களின் கருத்தாகும். சத்தியம் ஒன்றே ஞானிகள் அதைப் பலபெயரிட்டு வழங்குகின்றனர் என்பது இந்து சமயநெறி. உண்மை ஒன்று. வழிகள் பல என்பது இந்து தர்மத்தின் உன்னத கோட்பாடாகும். இக்கோட்பாடு தத்துவ நிலையிலும், சமய நிலையிலும், அறிவியல் நிலையிலும் அமைகின்றது. சமயமும் தத்துவமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இயைந்து இணையும் சிறப்பு இந்துப்பண்பாட்டுக்கே உரியது. இங்கு சமயம் பேசும் நிலையில் தத்துவமும், தத்துவம் பேசும் நிலையில் சமயமும் மாறி மாறி இணைந்து வருவதனால் ஒன்றை ஒன்று வளம்படுத்துகின்றன.

மனிதன் தான் வாழும் சமுதாயத்தோடும் பரம்பொருளோடும் இணைந்து வாழ்வதனால் அவன் ஆளுமை பெறுகின்றான். மக்களோடும் பரம்பொருளோடும் இணைந்து வாழ்கின்ற மனிதன் இயற்கை யோடும் இணைந்து வாழ்வது முக்கியமாகின்றது. இவ்விலட்சியங்களை அடைவதற்கு திட்டவட்டமான வழிமுறைகள் எவையுமில்லை. தன்னை ஆட்கொள்ளும் எந்த வழியையும் மக்கள் பின்பற்றலாம் என்பது இந்து சமயநீதி. வெவ்வேறு விளக்குகளில் திரிகள் இடப்பட்டிருந்தாலும், திரிகள் எரியும் போது எமக்கு ஒரு ஒளியே கிடைக்கின்றதென வங்கக் கவிஞர் இரவீந்திரநாத்தாகூர் இந்து தருமத்திற்கு விளக்கம் தரும்பொழுது இந்து சமயம் பன்மையில் ஒருமை காணும் தத்துவத்தைக் கொண்டது என்பது புலனாகின்றது.

எமது சமூகத்திலே பண்பாடு, கலாசாரம், ஒழுக்கம், உண்மை, நேர்மை, அன்பு, ஜீவகாருண்யம் என்பன கேள்விக்குறியாகிவிட்ட இந்நாளில் எமது இப்பீடமானது முன்னெடுக்கும் இம்மாநாடு எதிர்கால சந்ததியினரை சிறந்த பண்பாளர்களாக, புலமைத்துவம் மிக்கவர்களாக உருவாக்கும் என்பது எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை. பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் கந்தபுராண கலாசாரத்தினை உடைய இடமாக யாழ்ப்பாணம் இனங்காணப்பட்டமையும் இந்த மண்ணின் தனித்த சீர்மையை பறைசாற்றி நிற்கின்றது. அதுமட்டுமல்லாது நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்களது அளப்பரிய பங்களிப்பு, எமது பீடத்திற்கும் எம்மண்ணிற்கும் பெருமையளிக்கின்றது. இத்தகைய பின்னணியிலேயே இந்த மாநாட்டின் தொனிப்பொருள் அமைந்துள்ளது. எனவே இம்மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ள எமது பீடத்தின் பீடாதிபதி, மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் பீட உறுப்பினர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன் இம்மாநாட்டில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள ஆய்வாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு எமக்கு சமய, தத்துவ, பண்பாட்டுச் சிந்தனைகள் உலகளாவிய நிலையில் செல்வாக்குப் பெற்றுள்ளன. இன்றைய சூழலில் இத்தகைய அனைத்துலக மாநாடு இடம்பெறுவது மிகவும் வரவேற்கத் தக்கது. எனவே இத்தகைய சிறந்த பணிக்காக எம்முடன் உழைத்த அனைத்து நல்லுள்ளங்களையும் பாராட்டுவதுடன், எதிர்காலத்திலும் இத்தகைய பணிகள் தொடரவும் முயற்சிகள் யாவும் வெற்றி பெறவும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**பேராசிரியர்.கலாநிதி.(திருமதி).விக்னேஸ்வரி பவநேசன்**
**மாநாட்டுச் செயலாளர்,**
**இந்துகற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம பதிப்பாசிரியரின் செய்தி

"இலங்கைவாழ் இந்துத்தமிழ் மக்களின் சமூக பண்பாட்டு அடையாளங்களை அறிவார்ந்த நிலையில் பேணிவளர்க்கின்ற புலமைத்துவ மையமான உயர்கல்வி நிறுவனம்" என்கின்ற சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் ஆதர்சமான கருத்துநிலையின் நீட்சியாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபிதத்தை அடையாளப்படுத்துவர். பரமேஸ்வராக் கல்லூரியையும் அதனுடன் இணைந்த வளாகத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தாரைவார்த்தபோது சேர்.பொன்.இராமநாதனின் கனவு மெய்ப்பட வேண்டும் என்ற எண்ணமே அவர் பின்வந்தோரிடத்திலும் மேலோங்கியிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கற்கைகள் பீடத்தின் உருவாக்கத்தையும் இதனோடு தொடர்புபடுத்தியே நோக்குதல் வேண்டும். இந்துக்கற்கைகள் பீடம் உருவாகிய பின்னர் நடைபெறும் இரண்டாவது சர்வதேச இந்துமாநாடாக இது அமைகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் நடைபெறுவதனால் இம்மாநாட்டுக்கு மேலும் முக்கியத்துவம் உண்டு.

"இந்துக்கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்" என்பதே இந்த சர்வதேச ஆய்வு மாநாட்டின் தொனிப்பொருளாக அமையப்பெற்றுள்ளது.இதற்கென இந்தியா, மலேசியா, பிரித்தானியா, கனடா, இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்து எல்லாமாக நூற்றுஆறு ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப் பெற்றிருந்தன. அவற்றுள் துறைசார் புலமையாளர்களின் தரநிர்ணயத்துக்கு அமைய ஐம்பத்துநான்கு கட்டுரைகள் ஆய்வரங்கில் அளிக்கை செய்வதற்கெனத் தேர்வாகியுள்ளன. இம்மாநாட்டில் வெளியிடப்படவுள்ள ஆய்வடங்கற் பதிப்பானது தன்னகத்தே மேற்படி ஐம்பத்துநான்கு ஆய்வுக்கட்டுரைகளின் சாரத்தை ஆய்வுச்சுருக்கங்களாகக் கொண்டமைந்துள்ளது.

பொருண்மை இயைபு பற்றி மேற்குறித்த ஆய்வுச்சுருக்கங்கள் "சமயமும் பண்பாடும்", "மெய்யியலும் உளவியலும்", "உணவியலும் ஆரோக்கியமும்", "நாட்டாரியலும் சூழலியலும்" என நான்கு விடயத்தலைப்புக்களின் கீழ் இந்த ஆய்வடங்கலில் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. இவை இலங்கைவாழ் இந்துக்களின் சமய – பண்பாட்டு வாழ்வியல் நெறிமுறைகளினை ஊடுபாவாகக் கொண்டவை.

இலங்கையின் இந்துப்பண்பாட்டு வேர்களின் விலாசங்களை ஆய்வறிவியல் ரீதியாக எதிர்காலச் சந்ததியிடம் கையளித்தல், நிகழ்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்ள வேண்டிய அருட்டுணர்வை இந்துக்கற்கைகளினூடாக ஊட்டுதல் முதலிய அனேக ஏதுக்கள் இத் தொகுப்புருவாக்கத்தின் பின்னணியில் உள்ளன.

இந்த ஆய்வடங்கலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் இந்துக்கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி ஆகியோரின் வாழ்த்துச்செய்திகளும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர், மாநாட்டுச்செயலாளர், பிரதம பதிப்பாசிரியர், ஆதாரசுருதியுரைஞர் ஆகியோரின் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பீடத்தின் மேம்பாட்டிலும் வளர்ச்சியிலும் என்றும் கரிசனையுடனும் திடசங்கற்பத்துடனும் செயற்படும் மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கும் முக்கரணங்களாலும் பீடத்தின் முன்னேற்றத்திற்காக இடையறாது இயங்கிவரும் எமது பீடாதிபதி அவர்களுக்கும் வாழ்த்துச் செய்திகளைத் தந்துதவியமைக்காக எமது பதிப்பாசிரியர் குழுவின் சார்பில் பணிவன்பான நன்றிகள் உரித்தாகுக.

இந்துப்பண்பாட்டுக் கற்கைகளுக்காய் என்றும் நேசக்கரம் நீட்டுகின்ற பாரத நாட்டின் பண்பாட்டுத் தூதுவராய், எமது ஆய்வுமாநாட்டின் ஆதார சுருதி உரைஞராய் அமைந்து சிறப்பிக்கும் கலாநிதி “அங்குரன் தத்தா” அவர்கள் இந்த ஆய்வடங்கற் பதிப்புக்கு வாழ்த்துச் செய்தியை வழங்கியுள்ளார். அவருக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகுக.

இந்த ஆய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுச்சுருக்கங்களைக் குறித்த காலத்தில் அனுப்பிவைத்த ஆய்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், சரவை பார்த்து உதவியோர் மற்றும் அச்சுருவேற்றிய “மதிகலர்ஸ்” பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளும் வணக்கங்களும் உரித்தாகுக.

**கலாநிதி சயனொளிபவன் முகுந்தன்**
**பிரதம பதிப்பாசிரியர்**
**இரண்டாவது சர்வதேச இந்துமாநாடு – 2023**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Keynote Speaker

Hindu heritage studies encompass a broad and multifaceted exploration of the rich cultural, Religious, Philosophical, and Historical traditions within Hinduism. This interdisciplinary field delves into the ancient scriptures such as the Vedas, Upanishads, and Puranas, examining their teachings, rituals, and philosophical insights. Hindu heritage studies also encompass the exploration of sacred sites, temples, art, architecture, and literature that reflect the diverse expressions of spirituality and cultural identity over millennia.

Scholars in this field engage in critical analysis, interpretation, and preservation of Hindu heritage, fostering a deeper understanding of its significance in shaping the ethos and world view of millions around the world. Through the lens of Hindu heritage studies, one can appreciate the profound impact of Hinduism on art, literature, society, and the broader cultural landscape, both historically and in contemporary contexts.

As the theme of the conference is "Sri Lankans and Hindu Heritage studies", it is noteworthy that Hindu studies in Sri Lanka hold a significant place in the country's cultural and religious landscape. The contribution of the Jaffna University faculty and the Eastern University department of Hindu Studies are significant. With roots tracing back centuries, Hinduism in Sri Lanka has been deeply intertwined with the island's history, influencing its art, architecture, literature, and rituals. The study of Hinduism in Sri Lanka encompasses diverse facets, including the exploration of sacred texts like the Vedas, Upanishads, and the Bhagavad Gita, as well as the examination of philosophical schools such as Vedanta and Saivism. Scholars delve into the rich tapestry of Hindu mythology, rituals, and festivals, elucidating their meanings and significance within Sri Lankan society.

Additionally, the study of Hinduism in Sri Lanka often involves research into the country's numerous Hindu temples, each with its unique architectural style and religious practices. Through academic inquiry and spiritual exploration, the study of Hinduism in Sri Lanka continues to illuminate the enduring cultural heritage and spiritual vitality of the island's Hindu community.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Faculty of Hindu Studies at Jaffna University comprises three departments - Department of Hindu Civilization, Department of Saiva Siddhanta and Department of Sanskrit and the faculty offers degree programmes leading to certificate, bachelors, post graduations, research and doctoral degrees.

I would like to congratulate the Faculty of Hindu Studies, Jaffna University and the Conference Committee for organizing the Second International Hindu Conference 2024 in Jaffna.

**Prof. (Dr.) Ankuran Dutta**
**Director, Swami Viveknanada**
**Cultural Centre, Colombo**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புக் கோயில்களும் சமூக வழமைகளும்

ருஜானி. நி

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையில் இந்துப்பண்பாடு நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் மட்டக்களப்புப் பிரதேசமும் ஒன்றாகும். மட்டக்களப்புக் கோயில்களும் சமூக வழமைகளும் என்ற தலைப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ்வாய்வானது மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கோயில்களையும், அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் சமூக வழமைகளையும் வெளிக்கொணர்வதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை ஆகிய ஆய்வு முறையியல்களின் ஊடாக நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய் வில் கள ஆய்வு முக்கிய இடம்பெற்றிருக்கின்றது. இந்துக்களுடைய வழிபாட்டிற் சமயம் வகிக்கின்ற முக்கிய பங்கினை எடுத்துக்காட்டும் சான்றுகள் கோயில்களாகும். இவை சமய உணர்வுகளோடும் சமூக நம்பிக்கைகளோடும் ஒன்றாகக் கலந்து இந்து சமூகத்தின் ஓர் அங்கமாக விளங்கி வருகின்றன. அந்தவகையில் காலத்தால் தொன்மை வாய்ந்த கோயில்கள் பல மட்டக்களப்புத் தேசத்தில் காணப்படுகின்றன. இவற்றினூடாக மட்டக்களப்பின் தனித்துவமான இந்துப் பண்பாட்டம்சங்கள் வெளிப்படுத்தப்படுவதனைக் காணமுடிகின்றது. பண்பாட்டின் நிலைக்களனாகக் கோயில்கள் காணப்படுகின்றன. சமூகமானது தமது பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற கோயில்களுடன் தொடர் புடையதாகும். கோயில்கள் இறை வழிபாட்டிற்குரிய இடமாக மட்டுமல்லாமல் கலைகளை வளர்க் கும் இடமாகவும் அறநிலையங்களாகவும் சமூக ஒற்றுமைக்கு வழிகாட்டும் இருப்பிடங்களாகவும் விளங்குகின்றன. சமுதாயமும் கோயிலும் கொண்ட பிணைப்பின் காரணமாக கோயிலைத் தழுவிய குடிமக்களும் குடிகளைத் தழுவிய கோயிலுமாக அவை சிறப்புப் பெற்றன. இத்தகைய பின்னணி யிலேயே மட்டக்களப்புக் கோயில்களும் சமூக வழமைகளும் என்ற தலைப்பில் இவ்வாய்வு அமைந்துள்ளது. கோயில்கள் சமூகத்தைப் பிரதிபலிப்பனவாகவும் சமூக வலுவூட்டலுக்கானதொரு இடமாகவும் செயற்படுகின்றன. விழாக்காலங்களில் கோயில்களிலே நடைபெறுகின்ற வைபவங் களும் அவற்றில் அனுசரிக்கப்படுகின்ற சம்பிரதாயங்களும் சமூக வலுவூட்டலைக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. கோயில்களை மையமாகக் கொண்ட சமூக வழமைகளான சமூகத்தின் தேவைகள், நோக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதை இலக்காகக் கொண்டிருப்ப தால் அவை எப்போதும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவே அமைகின்றமையினைக் காணலாம். இதனடிப்படையில் கோயில்களை மையப்படுத்திய சமூக வழமைகள் இவ்வாய்வினூடாக வெளிப் படுத்தப்படுகின்றன. இவை தலைமுறைகளாகத் தொடர்ந்துவரும் பாங்கு இந்த ஆய்வின் மூலமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** மட்டக்களப்பு, கோயில்கள், சமூக வழமைகள், குடிகள், சமூகத் தேவைகள்.

உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
nrujani@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை கோணேசர் ஆலயத்தின் நீருக்கடியில் உள்ள இந்துச் சிற்பங்கள்

மா. சிறிசாந்தன்

**ஆய்வுச்சுருக்கம்:**

திருகோணமலை கோணேசர் ஆலயத்தின் நீருக்கடியில் உள்ள இந்துச் சிற்பங்கள் எனும் தலைப்பில் இந்த ஆய்வானது நீர்க்கீழ் சுழியோடல் (Scuba Diving) முறை மூலம் ஆராய்ந்து மேற்கொள்ளப்படு கின்றது. வரலாற்றுச் சான்றாதாரங்களான புராதன நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், கல்வெட்டுக்கள், சமூக வலைத்தளங்கள் மற்றும் ஆலயக் கட்டட இடிபாடுகள் போன்றவை கோணேஸ்வரர் ஆலயத்தின் தொன்மையான வரலாற்றுச் சிறப்புப் பற்றிக் கூறுகின்றன. ஆரம்பத்தில் மூன்று கோயில்கள் இருந்த போதும் தற்போது எஞ்சியிருப்பது திருகோணமலை உச்சியில் அமைந்துள்ள கோணேஸ்வரர் கோயில் ஆகும். இக்கோயிலைக் குளக்கோட்ட மன்னன் கட்டுவித்துத் திருப்பணிசெய்தான் என்பதற்குச் சான்றுகள் உண்டு. கி.பி. 1624ல் போர்த்துக்கீச தேசாதிபதியாக விருந்த கொன்சன்டைன் டீசா என்பன் தனது படைகளுடன் சென்று ஆலயத்தை இடித்து, ஆலயச் சிற்பங்களையும் ஆபரணங்களையும் விலைமதிப்பற்ற ஆலயப் பொக்கிசங்களையும் கடலுக்குள் வீசியதுடன் களவாடியும் சென்றான் என்பதனை அப்பகுதி மக்களின் செவிவழிக் கதை மரபாகவும் வரலாற்று ஆதாரங்கள் ஊடாகவும் அறியமுடிகின்றது. எனவே நாம் விடைகாண வேண்டிய விடயமாக இவ்வாலயச் சிற்பங்கள் போர்த்துக் கேயருடைய காலத்திற்கு உரியவையா? அல்லது ஆலயப் புனர்நிர்மாணத்தின் போது கடலுக்குள் வீசப்பட்ட சிற்பங்களா? என ஆராய்வது முக்கிய விடயமாகும். எனவே இந்த ஆய்வானது இவ்விரண்டு கேள்விகளுக்கும் விடையளிக்கும் முகமாக ஆழ்கடல் நீர்க்கீழ் சுழியோடல் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. சிற்பங்கள் அமிழ்ந்துள்ள இடங்களைக் கண்டறிதல், சிற்பங்களை வகைப்படுத்தல், அவற்றின் அழகியலை ஆராய்தல், உண்மைத் தன்மையை வெளிப்படுத்தல் போன்ற விடயங்களுக்கு இந்த ஆய்வு முக்கியத்துவம் வழங்கியுள்ளது. திருகோணமலை கோணேசர் ஆலயக் கடற்பரப்பில் பழமையான சிற்பங்கள் இருக்கின்றனவா? என்பதும் இங்கு சிற்பங்கள் இருப்பின் அவை புராதனகாலச் சிற்பங்களா? என்றும் இச்சிற்பங்கள் போர்த்துக்கீசரால் கடலிற்குள் வீசப்பட்டனவா? அல்லது இச்சிற்பங்கள் மீள் புனருத்தாரணத்தின் போது கடலிற்குள் போடப்பட்ட இடைக்காலச் சிற்பங்களா? என்பதும் ஆய்வுப் பிரச்சினையாகும். திருகோணமலை கோணேஸ்வர கோவில் சிற்பங்கள் கடற்பரப்பில் போர்த்துக்கீசரால் வீசப்பட்ட புராதன சிற்பங்களாக இருக்கலாம் அல்லது ஆலய மீள் புனருத்தாரணத்தின் போது கடலினுள் போடப்பட்ட சிற்பங்களாக இருக்கலாம் என்பது கருதுகோளாகும். பல வருடங்களுக்கு முன்னர் திரு.மைக்கல் வின்சன், திரு. வெல், திரு.ஆதர்சி கிளார்க் போன்ற ஆழ்கடல் ஆய்வாளர்கள் கோணேசர் கோயிலுக்கு அயலிலுள்ள கடலில் ஆய்வுகளை நடத்தியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**திறவுச்சொற்கள்:** கோணஸ்வரர் கோயில், சிற்பங்கள், சுழியோடல், போர்த்துக்கீசர், கடலடி ஆய்வுகள்

விபுலாநந்தா அழகியற் கற்கை நிறுவனம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
Srishanthan7@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இந்துக் கோவில்களில் புத்தாக்க முயற்சிகள்: கிரியை முறைகள் மற்றும் கட்டடக் கலையினூடான நோக்கு

**இ.ஜனார்தன்**

**ஆய்வுச்சுருக்கம்:**

யாழ்ப்பாண மாவட்டமானது இலங்கையில் தமிழ்ச்சைவ மக்கள் நீண்ட காலமாக அதிகளவில் வாழும் பிரதேசமாக அறியப்படுகின்றது. இலங்கையில் பண்டைய காலம் தொட்டு இன்று வரை இந்துத் திருக்கோயில்கள் சார்ந்த விடயங்களை உருவாக்குவதிலும் பேணிப்பாது காப்பதிலும் மரபு வழி மீறாது மாற்றங்களைச் செய்வதிலும் புத்தாக்க முயற்சிகளை உருவாக்குவ திலும் யாழ்ப்பாண மக்கள் அல்லது ஏனைய பிரதேசங்களில் வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்களே இலங்கை முழுவதும் பண்டைய காலம் தொட்டு இன்றுவரை முன்னிலை வகிக்கின்றனர். ஆலயங்கள் சாதாரணமாகத் தொழிற்படுவதற்குப் போதுமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள், மரபுகள் விதிமுறைகள் ஆகியவற்றினைப் பின்பற்றுவதுடன் மேலதிகமாகப் புதிய விடயங்கள், செயற்பாடுகளை நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ இணைத்துக்கொள்வதனூடாகப் புத்தாக்கங் கள் தோற்றம் பெறுகின்றன. இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தொடர்ச்சி யானதும் நிலைபேறானதுமான வளர்ச்சியினைச் சைவத்திருக்கோவில் தொழிற்பாடுகள் பெற்றிருந் தன. தமிழ் நாட்டுடனான உறவு, தகவல் பரிமாற்றங்களால் ஆகம அறிவு விருத்தி, புலம் பெயர்வுகளால் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றம், அனைத்து மத செயற்பாடுகளுக்கும் கிடைத்த சுதந்திரம், தொழில்நுட்ப முன்னேற்றம், போக்குவரத்து வசதி விருத்தி போன்ற காரணங்களால் ஏற்பட்ட முன்னேற்றமானது 20 ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் (கிட்டத்தட்ட 1975 ஆம் ஆண்டிற்குப் பின்னதாக) இருந்து இன்று வரையான அரை நூற்றாண்டு காலப்பகுதியில் முழுமை யாகக் கட்டமைக்கப்பட்ட ஆலயங்களின் கட்டடக்கலை மற்றும் கிரியை முறைகளில் பல்வேறு புத்தாக்க சிந்தனைகள் மற்றும் முயற்சிகளை வெளிப்படுத்தியுள்ளது. இவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறுபட்ட தெய்வங்களுக்குக் கட்டடக்கலை அல்லது அமைப்பு ரீதியாக சப்ததள மற்றும் நவதள இராஜகோபுரங்கள் கட்டப்பட்ட ஆலயங்களும் கிரியை நெறி ரீதியாக 33 குண்ட மற்றும் 49 குண்ட கும்பாபிசேகங்களை மேற்கொண்ட ஆலயங்களும் ஏனைய புத்தாக்கத் தொழிற்பாடுகளுமாக நூற்றுக்கணக்கான ஆலயங்களில் ஏற்பட்ட புத்தாக்க நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசத்தவரும் தத்தமது பிரதேசங்களில் தமது தெய்வ வழிபாட்டில் மேற்கொண்ட புத்தாக்க முயற்சிகளை வெளிப்படுத்த மேற்கொண்ட முயற்சிகளுக்குச் சான்றாக அமைகின்றன. அத்துடன் ஏனைய பிரதேசங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது. ஆகவே இவ்விடயங்களைப் புள்ளிவிபர ரீதியாக பல்வேறுபட்ட வழிமுறைகளினூடாக ஆய்வு செய்வதனால் அவற்றின் பிரதான இயல்புகளையும் விடயங்களையும் வெளிக்கொணர இவ்வாய்வு முனைகின்றது.

**திறவுச்சொற்கள்:** புத்தாக்க முயற்சிகள், கிரியைகள், கட்டடக்கலை, இந்துத்திருக்கோயில், யாழ்ப்பாணம்

தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம்
jana200521@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனையும் இந்துப் பண்பாடும்

டிஜானா.ற[1], பவித்ரா.கோ[2], தர்சினி.இ[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது ஆரம்பப் பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனையும் இந்துப்பண்பாடும் எனும் தலைப்பை மையமாகக் கொண்டு வேலணை தீவக வலய ஆரம்பப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனையினதும் இந்துப் பண்பாட்டினதும் தொடர்பை அறிதல், ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் காலைப் பிரார்த்தனையில் கொண்டுள்ள ஈடுபாட்டை அறிதல், காலைப்பிரார்த்தனையின்போது இந்துப் பண்பாட்டின் தொடர்பை அறிதல் முதலானவற்றை நோக்கங்களாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அளவு சார் மற்றும் பண்புசார் முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய் வானது நேர்காணல் மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளான நூல்களை அடிப்படையாகக் கொண் டது. மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட 15 ஆரம்பக்கல்விப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இத் தரவுப் பகுப்பாய்வானது MS Excel 2013 இல் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவாக ஆரம்பப் பாடசாலைகளில் பெரும்பான்மையாக இந்துப்பண்பாடு கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகளிலேயே இந்துப் பண்பாட்டை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தல் முக்கியமான ஒன்றாகும். இதன்மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த ஒழுக்க சீலர்களாக மிளிர முடியும். இந்து மாணவர்களுக்குச் சிறுவயதிலேயே இந்துப்பண்பாடு தொடர்பான விடயங்களைக் கற்றுக்கொடுத்தல் இன்றியமையாதது, ஆகையால் ஆசிரியர்கள் சிறுபிள்ளைகளுக்கு ஏற்றவண்ணம் இந்துப்பண்பாடு தொடர்பான விடயங்களைக் கற்பிக்க வேண்டும். இதன்மூலம் ஆரம்பப் பாடசாலைகளிலேயே மாணவர்களுக்கு இந்துப்பண்பாடு தொடர்பான அறிவினை ஏற்படுத்த முடியும். இவற்றை இந்த ஆய்வு தனது பரிந்துரைகளாக முன்மொழிந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** காலைப்பிரார்த்தனை, இந்துப்பண்பாடு, ஆரம்பப் பாடசாலை, கற்றல் கற்பித்தல், இந்து மாணவர்கள்.

1. கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், diyanaranjanle gmail,com
2. கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
3. கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், itharsing0614@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வைணவப் பின்புலத்தில் பாதவழிபாடு: சிவனொளிபாதமலையை அடிப்படையாகக் கொண்டது

கிஷாந்தினி.தி

**ஆய்வுச்சுருக்கம்:**

ஆன்மிக உலகில் மறைபொருளாக இருக்கும் பல விடயங்களில் திருவடி எனப்படும் "ஶ்ரீபாத" வழிபாடும் ஒன்றாகும். இறைவனை விடவும் அவனது நாமமும் திருவடியும் மகிமை பெற்றவை. இறைவன், இறைவி, தாய், தந்தை, குரு ஆகியோரது திருவடிகளைப் பாதுகைகள் என வழிபடுவது ஒருவகை ஞான மரபாகவும் இருந்து வருகின்றது. அந்தவகையில் இலங்கையில் நான்கு சமயத்தவர் களாலும் பின்பற்றப்படுகின்ற ஒரு வழிபாட்டு மரபாக பாதவழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இலங்கையில் சிவனொளிபாதமலை சிறப்புப்பெற்ற தலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்தலத்தில் அமையப்பெற்றுள்ள பாதச்சுவடு, தத்தம் பரம் பொருளினுடையது என்பதாகவே அனைத்து சமயத்தவரும் வாதிடும் நிலையில், அதுதொடர்பான தெளிவினை ஏற்படுத்தலென்பது அவசியமாகக் கருதப்படுகிறது. அந்தவகையில் சிவனொளிபாத மலை என அழைக்கப்படும் மரபைக்கொண்டு, இங்கு உறையும் தெய்வம் சிவன் எனவும் இங்கு காணப்படும் பாதம் சிவனுடையது என்றும் போற்றப்படுகிறது. சிவன் ஒளி பாதம் என்ற மூன்றையும் ஒரே இடத்தில் தரிசிக்கக்கூடிய இடமே சிவனொளிபாதமலை. இங்கு சிவவழிபாடும் ஒளிவழிபாடும் பாதவழிபாடும் ஒருங்கே அமைந்திருப்பது சிறப்பம்சமாகும். இந்துக்கள் முதலில் சிவலிங்கத்தை உருவகப்படுத்தும் மலையை வணங்கி, பின் மலை உச்சியை அடைந்து சூரியனை வழிபடுவர். இது பண்டைக் காலத்திலிருந்து சிறப்புற்றுத் திகழும் சிவசூரிய வழிபாடாகும். இந்நிலையில் இம் மலையுச்சியில் காணப்படும் பாதம் சிவனுடைய திருவடியாகப் பார்க்கும் மரபு சைவத்தின் தொன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. மேலும் இந்துசமயத்தில் பாத வழிபாட்டை முதன்முதலில் அனுசரித்தவர்கள் வைணவர்கள் என்பதும் இந்து வைதிக மரபில் வைணவத் தொன்மங்களுள் பாதவழிபாட்டிற்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது. இலங்கையில் இராமாயண வரலாற்றுக் காலத்திலிருந்தே விஷ்ணு வழிபாடு சிறப்புடன் இருந்து வந்துள்ளது இலங்கையில் இன்றைக்கும் சிவனொளிபாத மலையை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் விபீஷ்ண வழிபாட்டில் "ஶ்ரீபாதம்" முதன்மைப்படுத்தப்படுவதும் இராமர் வழிபாட்டுடன் தொடர்புடைய ஆஞ்சநேயர் சிறிய திருவடி என அழைக்கப்படுவதும் இலங்கையில் வைணவத்தில் பாதவழிபாட்டை வலியுறுத்துவதாக அமையும். இந்நிலையில், ஶ்ரீபாதமலையில் வழிபடப்படும் பாதத்தினை விஷ்ணுவின் தொன்மத்துடனும் தொடர்புறும் வகையில் அணுக வாய்ப்பாகின்றது. இலங்கை சிவனொளிபாதமலையில் அமையப்பெற்று வழிபடப்பெற்றுவரும் "பாதம்" வரலாற்றினடிப்படையில் இந்துத்தெய்வங்களில் ஒன்றினது சுவடு என்பதும் அது சைவ வைணவப் பின்புலத்துடன் தொடர்புடைய தொன்மங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்பதையும் வெளிக்கொணர்வது இந்த ஆய்வின் நோக்கங்களாக உள்ளன. இந்த ஆய்வானது வரலாற்றியல் மற்றும் விபரண ஆய்வு முறை யியல்களுக்கமைவாக கட்டமைக்கப்படுவதோடு, பொருத்தமான சந்தர்ப்பங்களில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** பாத வழிபாடு, சிவனொளிபாதமலை, சைவம், வைணவம், இலங்கை.

இந்துநாகரிகத் துறை, இந்துக்கற்கைகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kishanthiny.t@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகாலத்தில் தீவிரமடையும் மதமாற்ற முயற்சிகளும் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களும்

லினுஜா. ர

**ஆய்வுச்சுருக்கம்:**

மக்கள் நல்லொழுக்க நெறியில் நின்று நன்மை அடைதல் வேண்டும். இதற்குக் கடவுளின் துணை இன்றியமையாதது. எவ்வுயிர்க்கும் துணையாய் கடவுளை வணங்கி நலமடையவே மதங்கள் ஏற்பட்டன. இவ்வகையாய் கூறுமிடத்து மதங்கள் பலவானதேன் என்ற வினா நம்மிடையே எழலாம். அதாவது மெய்யறிவு பெற்றோர் தத்தமது நாட்டின் கல்வி, அறிவு, ஒழுக்கம், விருப்பங்களுக்கேற்றபடி மதங்களை ஏற்படுத்தினர். அந்தவகையில் உலகில் தோன்றிய புராதன மதங்களில் இன்றும் வாழ்ந்துகொனண்டிருக்கும் ஒரே ஒரு மதம் இந்து மதம் எனலாம். வேற்று மதங்கள் சிலவற்றின் நடவடிக்கைகளால் இந்து மதத்திற்குக் கால ஓட்டத்தில் பாதிப்புக்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறாக சமகாலத்தில் இந்து மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறுகின்ற இந்துக்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது. காலனித்துவம் எனப்படும் குடியேற்ற ஆட்சிமுறை மறைந்துவிட்டாலும் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்களே இவ்வாறான மதமாறும் மற்றும் மதமாற்றும் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்தவகையில் காலனித்துவ காலப்பகுதி முதல் சமகாலம் வரையான மதமாற்றத்திற்கான காரணிகளை வெளிக்கொணர்ந்து அதனால் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப் படுகிறது. இவ்வாய்வு விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை எனும் ஆய்வு முறையியல் களுக்கமைய கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாய்வில் கள ஆய்வு முறையும் பயன்படுத்தப் பட்டுள்ளது. சமகாலத்தில் அதிகளவிலான மதமாற்றச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதும் அதற்கான பல உத்திகள் மதமாற்றிகளால் கையாளப்பட்டு வருகின்றன என்பதும் மதமாற்றத்தினால் இந்து சமூகத்தினர் பல சவால்களைச் சந்திக்கின்றனர் என்பதும் இதைத் தடுப்பதற்காகப் பல வழி முறைகளைக் கையாள வேண்டும் என்பதும் இவ்வாய்வின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்வழி சமூகப் பணிகளைச் செய்தல், விழிப்புணர்வு ஏற்படுத்தல், மூடநம்பிக்கைகளைக் களைதல், வழிபாடுகளைத் தமிழில் இயற்றுதல், சாதிப்பாகுப்பாட்டைக் களைதல், இந்துத் தொண்டர் நிறுவனங்களை உருவாக்குதல், இந்துமத நூல்களை கற்கத்தூண்டுதல், அறக்கல்வி போதிக்கும் ஆசிரியர்களை ஊக்குவித்தல், இந்து சஞ்சிகைகளை வெளியிடல், ஆன்மீக விசுவாசமும் சமய ஞானமும் நாட்டமும் உள்ளவர்களை சமயப் பிரசாரகர்களாக நியமித்தல், இந்துமத நூல்களில் உள்ள சிக்கல் தன்மையை நீக்குதல் என்பவற்றை இந்த ஆய்வு பரிந்துரைகளாக முன்வைக்கின்றது. இவ்வாய்வானது மதமாற்றம் பற்றி ஆராய முயல்பவர்களுக்கும் இந்து என்ற முறையில் மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்த முயல்பவர்களுக்கும் பயனுடையதாய் அமையும்.

**திறவுச்சொற்கள்:** இந்து மக்கட்சமூகம், மதம்மாற்றிகள், விழிப்புணர்வு, சமூக அசைவியக்கம், சமயஞானம்

இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
linuja1997@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்துசமய வழிபாட்டுச் செல்நெறியில் பாதயாத்திரை:

## உகந்தை கதிர்காம யாத்திரையை அடிப்படையாகக் கொண்டது

கீர்த்தனா.ஜெ

**ஆய்வுச்சுருக்கம்:**

கால்நடைகளாகத் திரிந்த விலங்குகளிலிருந்து பிரிந்து கருவிக்கையாட்சி, மொழிப் பயன்பாட்டின் வழி பகுத்தறிவுள்ள விலங்காக மனிதன் உருப்பெற்றான். இயற்கையின் மீது அவனுக்கிருந்த வியப்பும் அச்சமும் பக்தியாகி கடவுளரையும் சமயத்தையும் தோற்றுவித்தது. அந்த இறைவனை – இலட்சியத்தை நோக்கிய சமயவியலாளர்களின் பயணமே பாதயாத்திரை எனக் கூறப்படுகின்றது. இலங்கையின் இந்துப்பாரம்பரிய வரலாற்றில் நீண்ட வரலாறுடைய முதன்மை பெறும் பாதயாத்திரையாக கதிர்காமப் பாதயாத்திரை காணப்படுகின்றது. யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்பு, கொழும்பு என இலங்கையின் எல்லாப்பாகங்களிலிருந்தும் மக்கள் பாதயாத்திரையாகப் புறப்பட்டு கதிர்காம பாத யாத்திரையை மேற்கொண்டு வருகின்றார்கள். குறித்த பாதயாத்திரையின் முக்கிய பிராந்தியமாக உகந்தை உள்ளது. கதிர்காமப் பாதயாத்திரை வழிபாட்டு ரீதியாகப்பெறும் முக்கியத்துவத்தை, அதன் அனுபவத்தை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது. இலங்கை முருகவழிபாட்டிலுள்ள யாத்திரையினது முக்கியத்துவம், அனுபவம் என்பவற்றை அறிவது இந்த ஆய்வின் நோக்கமாகும். கதிர்காமப் பாதயாத்திரையின் சங்கமிப்பு மையமாக உகந்தை அமைவதனால் இப்பிராந்தியம் ஆய்வெல்லை யாகக் கொள்ளப்படுகின்றது. இதில் வரலாற்று ஆய்வு, விளக்கமுறை ஆகிய முறையியல்களும் களவாய்வும் ஆய்வுமுறையியல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாதயாத்திரை பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுபவர்க்கு இந்த ஆய்வு துணைசெய்வதாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** இலங்கை, கதிர்காமம், உகந்தை, முருகவழிபாடு, பாதயாத்திரை

சைவசிந்தாந்த துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
jegakeerthana160@gamil.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிற்பிரபந்தங்களின் பொருண்மைகள்

தயாளினி. கு

**ஆய்வுச்சுருக்கம்:**

ஈழத்து இலக்கிய வரலாற்றை நோக்கும்போது கோயிலை நிலைக்களனாகக் கொண்டு இலக்கியங்கள் எழும் மரபு உண்டு. கோயிலை அடிப்படையாகக் கொண்டு பிரபந்தங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றுள்ளன. அவ்வகையில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலினுடன் தொடர்புற்றும் பல்வேறு இலக்கியங்கள் உருவாகின. இவற்றுள் கோயிற்பிரபந்தங்கள் தனித்துவமானவை ஆகும். இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் தோன்றிய கோயில் ஆகும். இக்கோயிலானது மூர்த்தி தல வரலாற்றுச் சிறப்புக்களை உடையது. இச்சிறப்புக்களினைக் கொண்டு ஈழத்து மரபில் இலக்கியங்கள் தோன்றும் பின்னணியில் கோயிற்பிரபந்தங்கள் பரராஜசேகரர் மீது பாடப்பட்டது. இவ்வாறு பாடப்பட்ட பிரபந்தங்களே இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் பிரபந்தங்கள் ஆகும். பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஆக்கப்பட்ட பரராஜசேகரப்பிள்ளையார் பிரபந்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலப் பரப்பில் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டன. திருவிரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, ஊஞ்சல், பாமாலை, போற்றிப்பத்து, கீர்த்தனைகள், பதிகம் எனும் பிரபந்த அமைப்பிலேயே பிரபந்தங்கள் பரராஜசேகர கோயில் மீதும் பாடப்பட்டன. இப்பிரபந்தங்கள் பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அமைந்தாலும் பல்வேறு பொருண்மைகளைக் கொண்டு விளங்குகின்றன. பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் பிரபந்தங்கள் வரலாற்று நிலையிலும் மூர்த்தி தலச் சிறப்பினைப் பேசும் தன்மையிலும் முக்கியம் பெற்றவையாக விளங்குகின்றன. இவ்வாலயம் தொடர்பாக எழுந்த பிரபந்தங்கள் முதன்மை ஆதாரமாகவும் பிரபந்தங்கள், பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயம் தொடர்பாக எழுந்த கட்டுரைகள் துணைநிலை ஆதாரங்களாகவும் கொண்டு இந்த ஆய்வு அமைந்துள்ளது. பரராஜசேகரப்பிள்ளையார் பிரபந்தங்களில் காணப்படும் பொருண்மைகளைக் கண்டறிதலும் அதனூடாக அவற்றின் மேன்மை பேசுவதும் இந்த ஆய்வின் நோக்கமாக உள்ளது. பரராஜசேகரப்பிள்ளையார் பாடல்களைத் தொகுத்தும் பகுத்தும் தருவதற்குப் பகுப்பாய்வு முறையியலும் கருத்துக்களை விளக்குவதற்கு விளக்கமுறை முறையியலும் வரலாறு சார் விடயங்களினைப் பதிவு செய்வதற்கு வரலாற்று ஆய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் பிரபந்தங்கள் மூலம் சமூக சமயநிலைகள், பண்பாடுசார் கருத்தியல்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் வரலாற்றுச் சிறப்புக்கள், புராணச் செய்திகள், தலச்சிறப்பு என்பனவற்றை அடையாளங்காண முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** கோயிற்பிரபந்தம், இணுவில், பொருண்மைகள், பரராஜசேகரப் பிள்ளையார், ஈழம்

1. சசெக்ஸ் கல்லூரி - தலைமை அலுவலகம் - கொழும்பு
thayayal:166@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் போர் வீரர்கள்: நல்லூர் கோவில் சூரன்போர் தொடர்பான ஐதீகமும் சமூக முதன்மையும் பற்றிய மானிடவியல் ஆய்வு

இ.ஸ்ரீரஞ்சன்[1]
ச.சிறிகாந்தன்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

சமயம் என்பது இயற்கையான ஒன்றல்ல, அது மனிதனால் உருவாக்கப்பட்டது. சமயத்தின் பிரதான இயங்குநிலை விசையாக அமைவது ஐதீகம், சடங்கு, நம்பிக்கை. இம்மூன்றும் மக்களைக் குறிப்பிட்ட சமயம் சார்ந்த அடையாளத்திற்குள் உள்ளடக்குகின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணத்து நல்லூர் கோவிலில் இடம்பெறும் சூரன்போர் திருவிழாவில் நவவீரர்களின் சடங்கியல்சார் பங்குபற்றல் என்பது முதன்மையான ஒன்றாகும். நவவீரர்கள் பற்றிய புராணக் குறிப்புக்களின் தொடர்ச்சி யாழ்ப்பாணத்தின் முதன்மையான சாதிய சமூகங்களில் ஒன்றான செங்குந்தர் சமூகத்தினரால் உள்வாங்கப்பட்டு இன்றுவரை அவர்கள் நல்லூர் கோவில் சூரன்போரில் நவவீரர்களாக வேடமிட்டு பங்குபற்றி வருகின்றமை தொடர்பாக இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கின்றது. இச்சடங்கியல் நடைமுறையினைச் செங்குந்தர் சமூகத்தின் இன வரலாறு, சாதிய சமூக அடையாளம், அவற்றுடன் இணைந்த சமூகநிலை போன்றவற்றின் அடிப்படையில் மானிடவியல் நோக்கில் இந்த ஆய்வு பகுப்பாய்வு செய்கின்றது. யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் செறிந்துவாழுகின்ற செங்குந்தர் சமூகத்தினரிடம் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட களஆய்வும், நல்லூர் கோவில் சூரன் போர் திருவிழாவில் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றும் அவதானங்களும் இவ்வாய்வுக்கான முதல்நிலைத் தரவுகளுக்கான அடிப்படையாகின்றன. மேலும் செங்குந்தர் சமூகம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. களஆய்வின்போது பிரதான தகவலாளிகளுடனான கலந்துரையாடல், நேர்காணல்கள் ஆகியவற்றின் வழியாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின் வழியாக யாழ்ப்பாணப் பண்பாட்டு அடையாளமாகத் திகழும் நல்லூர் கோவிலுடனான செங்குந்தர் சமூகத்தின் தொடர்பு என்பது முருகனின் போர்வீரர்களான நவவீரர்களுடைய ஐதீகத்துடன் நெருங்கிய தொடர்பினைப்பேணி, அதன்வழியாக அதனை ஆண்டுதோறும் இடம்பெறும் சடங்கில் நடைமுறைப்படுத்தி வருகின்றமையானது வெளிக்கொணரப்பட்டுள்ளது. மேலும் இவ்வகையான சடங்கியல் தொடர்பு என்பது செங்குந்தர் சமூகத்தின் சமூக இருப்பு, தொடர்ச்சி நிலை, சமூக தகுதிநிலையாக்கம் ஆகிய விடயங்களில் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றமையினை இவ்வாய்வு முதன்மைப்படுத்தி வெளிக்கொண்டுவந்துள்ளது. சமய வழிபாட்டுடன் இணைந்த சாதிய சமூக அசைவியக்கம் சடங்கியல் நம்பிக்கையுடன் இடையறாத தொடர்பினைப் பேணிவருவதினை இந்த ஆய்வு வலியுறுத்தியுள்ளமை கவனத்திற்கொள்ளத்தக்கது.

**திறவுச்சொற்கள்:** ஐதீகம், சூரன்போர், நல்லூர், செங்குந்தர், நவவீரர்கள்

[1]கிராமிய அபிவிருத்தி திணைக்களம்
sriranjan81@gmail.com
[2]சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
srikanthan80@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது

நி.சிவாஜன்

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையில் சைவசமய வளர்ச்சியில் சைவசமய நிறுவனங்கள் பெருமளவான பங்களிப்பினைச் செய்துள்ளன. இவை இலங்கையின் பல பாகங்களிலும் காலந்தோறும் தோற்றம் பெற்று வருகின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அளவெட்டிப் பிரதேசத்தின் சைவசமய வளர்ச்சியில் அப்பிரதேசத்தில் காணப்படும் சைவசமய நிறுவனங்கள் பெரும் பங்களிப்பினை நல்கியுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு சைவசமய வளர்ச்சியில் சைவசமய நிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதாக அமைகிறது. அளவெட்டிப் பிரதேசமானது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என்ற அடிப்படையில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது. அளவெட்டிப் பிரதேசத்தில் காணப்படும் சைவசமய நிறுவனங்கள் சைவ சமூகத்திற்கு ஆற்றும் பங்களிப்பினை ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு விபரண ஆய்வு, வரலாற்றாய்வு ஆகிய முறையியல்கள் ஊடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்வில் களஆய்வு மூலமும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அளவெட்டிப் பிரதேச சைவசமய வளர்ச்சிக்குப் பிரதானமாக கும்பழாவளை சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயம், பெருமாக்கடவை சித்திவிநாயகர் ஆலயம், அளவோலை விநாயகர் ஆலயம், தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலயம், வெளிவயல் முத்துமாரியம்மன் ஆலயம், நாகவரத நாராயணர் ஆலயம் முதலிய சைவசமய நிறுவனங்களான கோவில்களும் சைவவாலிபசங்கம், மகாஜன சபை, அளவை இசைக்கலை மன்றம், சுப்பிரமுனிய ஆச்சிரமம், அறநெறிப்பாடசாலைகள், கலாசார மத்திய நிலையம் முதலிய சைவசமய நிறுவனங்களும் பெரும்பங்களிப்பினை ஆற்றிவருகின்றன. இவற்றில் முக்கியமான பங்களிப்புக்களாக ஆலயத்திருவிழாக்களை ஆற்றுதல், அறநெறி வகுப்புகளை நடாத்துதல், சமயதீட்சை வழங்குதல், கலை நிகழ்வுகளை அரங்கேற்றல், கற்றல் உதவித் தொகை வழங்குதல், அளவெட்டிப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளை நடாத்துதல், அளவெட்டி பிரதேச ஆலயங்களில் திருவாசக முற்றோதல், பன்னிருதிருமுறை முற்றோதல் செய்தல், முதியோர்களுக் கான சமயகலாசார விதி களைப்போதித்தல், அளவெட்டிப்பிரதேச கலைஞர்களைக் கௌரவித்தல், ஆலயத்திருவிழாக்களில் பண்ணிசைக் கச்சேரிகளைச் செய்தல், மதமாற்ற சமூக நிறுவனங்களை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் செய்தல், வறுமை நிவாரணங்கள் வழங்குதல் போன்றன காணப்படுகின்றன. அந்தவகையில் அளவெட்டிப் பிரதேச சைவசமய வளர்ச்சிக்கு சைவசமய நிறுவனங்கள் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளமை அறியப்படுகின்றது. இவற்றுடன் இத்தகு சைவசமய நிறுவனங்கள் அளவெட்டிப் பிரதேச மக்களின் சமூகத்தேவைகளிற்குத் துணைபுரிபவையாகவும் விளங்குகின்றன. அளவெட்டி தவிர்ந்த இலங்கையில் காணப்படும் ஏனைய பிரதேசங்களின் சைவசமய நிறுவனங்களுக்கு இவை முன்னுதாரணமாகத்திகழ்கின்றமையை இந்த ஆய்வு அடையாளப்படுத்தியுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சைவசமயம், அளவெட்டிப்பிரதேசம், சைவசமய நிறுவனங்கள், சமூகப்பங்களிப்பு, சமூகமேம்பாடு

இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Sovajannithithianantham@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு வலம்புரி நாளிதழ்களை முன்னிறுத்தியது

குவிதா.ஐ

**ஆய்வுச்சுருக்கம்:**

பண்பாடு என்பது குறித்த ஓர் இனமோ சமுதாயமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கென வகுத்துப் பேணிவரும் செயற்பாடாகும். அதாவது மக்களின் அறிவு நலம், கருத்து நலம், குண நலம், ஒழுக்க நலம் முதலியன மேன்மேலும் திருந்துகின்ற நிலையைப் பண்பாடு எனும் பதம் சுட்டி நிற்கின்றது. அந்தவகையில் இந்துப்பண்பாடு இந்துக்களின் மரபுவழியான வாழ்வியலுக்கு அதிகளவான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. இந்துப் பண்பாட்டுக் கூறுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்ற ஒரு தளமாக அச்சு ஊடகங்கள் செயற்படுகின்றன. அச்சு ஊடகம் என்ற வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரி நாளிதழினை அடிப்படை ஆய்வுத் தரவாகவும் 2010 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் வெளிவந்த வலம்புரி நாளிதழ் களில் தேர்ந்தெடுக் கப்பட்டவற்றை எல்லையாகவும் கொண்டு இந்த ஆய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. வலம்புரி நாளிதழ்கள் எவ்வாறு இந்துப்பண்பாட்டின் வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் பங்களிப்பினை ஆற்றி வருகின்றன என்பதை இனங்கண்டு கொள்வதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வின் தரவுகள் நாளிதழ்களிலிருந்து பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. விபரண ஆய்வு, வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** வலம்புரி நாளிதழ், இந்துப்பண்பாடு, இந்துசமூகம், அச்சு ஊடகம், வாழ்வியல்

இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kuvitha05@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சைவசமயத்தின் சமகாலப் போக்குகள்

சந்தோசா.தி

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதகுல வரலாற்றில் சமயங்கள் தனித்துவமான இடத்தினைப் பெறுகின்றன. இவை மனிதர்களின் வாழ்வியலில் மிகவும் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் சைவ சமயமும் உலகின் தொன்மையான மற்றும் வளமான சமயங்களுள் ஒன்றாகும். இது சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவ வழிபாடுகள் நிலவியமைக்கான ஆதாரங்கள் உள்ளன. அக்காலத்தில் சைவம் ஈழம் முழுவதும் பரவிக் காணப்பட்டது. கி.மு. 09ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கில், அக்கரைப்பற்று (பழைய பெயர் – கருங்கொடித்தீவு) எனும் பிரதேசத்திலும் சைவம் மிகவும் செழிப்புற்றுக் காணப்பட்டது. எனினும் காலப்போக்கில் இந்நிலை மாறத் தொடங்கியது. குறிப்பாக கடந்த நூற்றாண்டிலிருந்து இப்பிரதேசத்தில் சைவ சமயத்தின் நிலைத்திருப்பு சரிவடைந்து செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தொன்மையான சைவ வரலாற்றினை உடைய ஒரு பிரதேசத்தில் சைவத்தின் தொடர்ச்சியான நிலைத்திருப்பினை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில், சமகாலத்தில், சைவத்தின் செல்நெறியையும் அது எதிர்கொள்ளும் சவால்களையும் அதற்கு மாற்றாக சைவ சமயிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் அறிந்து மதிப்பிடுதல் ஆய்வின் நோக்கமாகும். குறித்த ஆய்வில் "சமகாலம்" எனக் கருதப்படுவது கடந்த பத்து வருட காலப்பகுதி (அதாவது 2013 தொடக்கம் 2023 வரை) ஆகும்.

**திறவுச்சொற்கள்:** அக்கரைப்பற்று, சைவம், ஆலையடிவேம்பு, சமகாலம், வழிபாடு

சைவ சித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thirusanthosa7@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்கள்

சுலக்சி.வி[1], சனிசியா.செ[2], கிறிஸ்ரினா இவாஞ்சலின்.து[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

இவ்வாய்வானது இலங்கையில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்களை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. மனிதன் மனிதனாக வாழ அவனை நல்வழிப்படுத்துவதே சமயங்களின் பிரதான பணியாகும். இவ்வாய்விற்காக இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் முதன்மை நூலாக ஆதி இலங்கையில் இந்துமதம் எனும் நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் இந்துசமயம் காலத்திற்கு காலம் பல்வேறுபட்ட சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அச்சுறுத்தலாக அமைந்த மகாவம்சத்தில் இடம்பெறும் சில கருத்துக்கள், இலங்கை அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமை, அந்நியராட்சியின் கீழ் இடம்பெற்ற மதமாற்று நடவடிக்கைகளும் ஆலய அழிப்பும், உள்நாட்டு யுத்தம், அண்மைக்காலத்தில் இடம்பெற்ற இந்து ஆலயங்கள் மீதான தாக்கு தல்கள், இந்து ஆலயங்களை அண்மித்த பகுதிகளில் இடம்பெறும் தகனக் கிரியைகள் போன்ற பல சவால்களுக்கு மத்தியிலேயே இலங்கையில் இந்து சமயத்தின் இருப்புக் காணப்படுகின்றது. இலங்கையில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்களை அறிவதும் அவற்றை எதிர்கொள்வதும் அதனூடாக இந்துசமயத்தை எவ்வாறு வளர்க்கலாம் என்பது குறித்து விவாதிப்பதாகவும் இந்த ஆய்வு பயணிக்கிறது. இவ்வாய்வின் பரிந்துரைகளாக, இந்துசமய நம்பிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும் சிறந்த ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றை வலுப்படுத்தும் நோக்கிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்துதல், ஒவ்வொரு இந்து ஆலயங்களும் தமது ஆலய வரலாற்றை ஆவணப்படுத்தல் என்பன முன்வைக்கப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** இலங்கை, இந்துசமயம், சவால்கள், ஆலயங்கள், அழிப்பு

1. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
3. உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sulaksyviknesvaran18@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் கோபுரக் கட்டுமானம்: உருத்திரபுரீஸ்வரர் கோயிலை அடிப்படையாகக் கொண்டது

தமிழ்ச்செல்வி.ப

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துப் பண்பாட்டு மரபில் கோயில்கள் தமக்கெனத் தனித்த ஓர் அடையாளத்தைக் கொண்டு காலங்காலமாக விளங்கி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையிலே இத்திருக் கோயில்கள் ஒவ்வொன்றும் கலைகளின் பிறப்பிடமாகவும் அக்கலைகளை வளர்த்தெடுக்கும் நிறுவனங்களாகவும் காலந்தோறும் செயற்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. கலைகளுக்கு எல்லாம் தாய்க்கலையாகத் தொன்றுதொட்டு விளங்கி வருவது கட்டடக்கலை ஆகும். இக்கட்டடக் கலையானது திருக்கோயில் ஒன்றின் வளர்ச்சி நிலையில் மிகவும் முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையிலே திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி நிலையினை ஆரம்ப காலந்தொட்டு இன்று வரைக்கும் பல்வேறு நிலைகளின் ஊடாக அவதானிக்க முடிகின்றது. திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் உன்னதமான வளர்ச்சி நிலையைப் பிரதிபலிப்பதாகவே கோபுரக் கட்டுமானம் அமைந்துள்ளது. ஆலயமானது உருவாக்கம் பெற்றதுமே பூரணமான வளர்ச்சி நிலையினை எட்டிவிடாது. அது சிறிது சிறிதாகவே வளர்ச்சி காண்கிறது. ஆலயத்தைச் சூழ உள்ள குடிகள் ஒவ்வொன்றினதும் பொருளாதார ரீதியிலான வளர்ச்சி நிலையே ஆலய வளர்ச்சியின் அடித்தளமாக அமைகிறது. அந்தவகையிலே ஈழத்தில் சப்த ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலாகவும் அமைந்து காணப்படுகின்ற உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் ஆரம்ப காலத்தில் சாதாரணமான ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று ஒருதளக் கோபுரக் கட்டுமானத்தோடு கூடிய பிரம்மாண்டமான ஆலயமாக பரிணமித்திருக்கின்றதனைக் காணமுடிகின்றது. உருத்திரபுரீஸ்வரர் ஆலயக் கட்டடக்கலையின் கட்டுமான வளர்ச்சி நிலையையும் ஒருதளக் கோபுரக் கட்டுமான வளர்ச்சியினைப் பற்றிய விடயங்களையும் வெளிப்படுத்துவதாகவே இந்த ஆய்வானது அமைந்திருக்கின்றது. வரலாற்றியல் ஆய்வு மற்றும் விபரண ஆய்வு எனும் முறையியல்களுக்கு அமைவாக இந்த ஆய்வானது கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு கள ஆய்வின் ஊடாகப் பெறப்பட்ட தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** திருக்கோயில், கட்டடக்கலை, கோபுரக்கட்டுமானம், உருத்திரபுரீஸ்வரம், ஒரு தளக்கோபுரம்

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thamilchselvi1460@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம்

தனிஸ்ரா. ஆ
சாந்தினி. அ

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழிலுள்ள ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் என்னும் இலக்கியம் இளங்கோவடிகளினால் ஆக்கப்பட்டதாகும். இவ்விலக்கியம் பிற்காலத்தில் எழுதப்பட்ட தமிழ்க் காப்பியங்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருந்தது. சங்கமருவிய காலம் என்றாலே அற நெறிக்காலம் எனக் கூறுமளவுக்கு அறம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இக்காலத்தில் ஆக்கப் பட்டதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் முன்வைக்கப்பட்ட அறக்கருத்துக்களை இன்றைய தமிழ்மக்களின் வாழ்க்கை முறைகளிலும் அவதானிக்க முடிகின்றது. தொன்மையான காலத் திலிருந்தே ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்குட்பட்ட மக்கள் சமூகமாக இணைந்து வாழ்ந்தனர். சமூகமாக வாழ்ந்தபோதிலும் பல்நோக்கு, பல்நிலைத்தன்மை உடையவர்களாயிருப்பது வழக்கம். இதனால் சமூக வாழ்வியற்செயற்பாடுகளில் முரண்பாடுகளும் கலந்திருந்தன. கி.பி 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் வாழ்ந்த அவ்வாறான ஒரு சமூகத்திற்கு அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவ தாகச் சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. அம்மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, சமயம், பெண்களின் நிலை, அரசியல் நீதிமரபுகள் போன்ற பலவிடயங்களை இந்நூலினூடாக அறிய முடிகின்றது. அந்நூலில் சமூகரீதியாக முன்வைக்கப்பட்டுள்ள அறக்கருத்துக்களை எடுத்துக் காட்டுதல், அந்த அறக்கருத்துக்கள் தமிழ்ச்சமூகத்திற்கு எந்தளவுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது என்பதனை வெளிப்படுத்துதல் என்பன இவ்வாய்வுக்கான நோக்கங்களாக அமைகின்றன. மேலும் சிலப்பதிகாரத்தில் வெளிப் படுத்தப்படும் அறம்சார்ந்த மரபுகளை அக்கால சமூகம் எந்தளவுக்கு பின்பற்றிச் செயற்பட்டிருந்த தென்பதனை எடுத்துக்காட்டி, அன்றையகால சமூகத்திற்கு அறக்கருத்துக்கள் எந்தளவுக்குப் பொருத்தமாக இருந்தன என்பதனையும் இன்றையகால சமூகத்திற்கு அக்கருத்துக்கள் எந்தளவுக்கு ஏற்புடையனவாக அமைகின்றன என்பதனையும் இந்த ஆய்வானது தெளிவுபடுத்தியுள்ளது. சிலப் பதிகாரம் முன்வைக்கும் அறம் பற்றிய விடயங்களும் அவை பெற்றிருந்த முக்கியத்துவமும் விபரண ஆய்வு முறையியலிலும் இன்றைய காலத்திற்குச் சிலப்பதிகாரம் முன்வைக்கும் அறக்கருத்துக்கள் பொருத்தமுடையதென்பது ஒப்பீட்டு ஆய்வுமுறையியலிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிலப் பதிகாரத்தில் அறமுடைய அரசியல், பெண்கள் பற்றிய கருத்தியல், ஊழ்வினையின் வலிமை என்பன பிரதானமான கருத்துக்களாக அமைகின்றன. அரசியல் அடிப்படையில் நீதியான ஆட்சி நடை பெறும்போது சமூகத்தின் இடர்களைக் களைவதும் அதனால் அச்சமூகம் மகிழ்ச்சியை அனுபவிப் பதும் சாத்தியமாகின்றது. கண்ணகி, மாதவி பாத்திரங்கள் மூலம் பெண்மையின் குறையையும் அதேவேளை நிறைவையும் வெளிப்படுத்துவதன் வாயிலாகச் சமூகநிலையில் ஏற்படும் முரண் பாடுகளைச் சரிசெய்வதற்குச் சிலப்பதிகாரம் முற்படுகின்றது. பொதுவாகச் சமயங்கள் கூறும் அறக்கருத்துக்கள் இன்றளவிலும் தமிழர் சமுதாயத்தில் பேணப்பட்டு வருகின்றன. அவ்வகையில் பல்சமய சமரசத்தைக் கடைப்பிடிக்கும் இளங்கோவடிகள் சமணக் கோட்பாடுகளுக்கு அறத்தின் பின்னணியில் முக்கியத்துவம் அளித்துள்ளார். இன்றைய சமூகம் மனித சுதந்திரம் போன்ற பல விடயங்களை முன்னிறுத்தி செயற்பட்டாலும்கூட அறத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை மேற்கொள் வதையும் இன்றைய சமுதாயத்திற் காணலாம். எனவே இன்றும் தமிழ்ச்சமூகத்திற்கு சிலப்பதிகாரம் கூறும் அறக்கருத்துக்கள் தேவையானவையாகவே காணப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** பண்பாடு, அறம், சமூகம், வாழ்க்கை முறை, சிலப்பதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகர் சுவாமிகளின் பாடல்களில் திருநாவுக்கரசர் தேவாரங்களின் தாக்கம்

பரமேஸ்வரி. க

**ஆய்வுச்சுருக்கம்:**

யோகநாதன் என்ற இயற்பெயருடைய சமயப்பெரியாரே பின்னாளில் யோகர்சுவாமிகளானார். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, செங்கலடி முதலிய பல இடங்களில் வாசம் செய்து சமயப் பணிகள் புரிந்தவர். சமய உணர்வுடன் இவர் பாடிய பாடல்கள் நற்சிந்தனை என்ற பெயரில் 1959இல் தொகுக்கப்பட்டு முதற்பதிப்பு வெளிவந்தது. திருநாவுக்கரசர் கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவசமய குரவர்களில் ஒருவராவர். திருநாவுக்கரசரின் பாடல்கள் சைவத்திருமுறைகளில் 4, 5, 6 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இம்மூன்று திருமுறைகளிலும் மொத்தமாக 313 பதிகங்களும் 3045 பாடல்களும் அடங்குகின்றன. 10 – 11 பாடல்கள் உள்ள பதிகங்களாகவே இவருடைய பாடல்களும் அமைந்துள்ளன. இப்பாடல்கள் திருநேரிசை, தனி திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் முதலிய பாடல் அமைப்புக்களினால் பெயர் பெற்றுள்ளன. இவருடைய பாடல்களில் தாண்டகம், கலி, வஞ்சி, விருத்தம் ஆகிய பாவகைகள் அதிகமாகக் கையாளப்படுகின்றன. யோகர் சுவாமிகளின் பாடல்களிலும் திருநாவுக்கரசரின் 4, 5, 6 ஆம் திருமுறைகளிலும் இடம்பெறும் பொருள், பாவகை அமைப்புக்கள், வெளிப்படுத்தும் முறை என்பன ஒத்ததன்மை உடையனவாக இனங்காணப்படுகின்றன. பக்தி இயக்க வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்ற பல்லவர் காலத்து நாயன்மார்களுள்; திருநாவுக்கரசரின் தேவாரப்பாடல்கள் பிற்காலத்தில் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் படைப்பிலே பெற்ற செல்வாக்கை இனங்காண்பதே இவ் வாய்வின் நோக்கமாகும். யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் சைவத்திருமுறைகளின் பா மற்றும் மொழி அமைப்பை ஒத்தவாறு; குறிப்பாக திருநாவுக்கரசர் தேவாரங்களின் பண்புகளை அதிகமாகக் கொண்டவையாக அமைந்துள்ளன என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாக அமைந்துள்ளது. விவரண ஆய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறையியல் ஆகியவை இந்த ஆய்வில் கையாளப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** யோகர்சுவாமிகள், நற்சிந்தனைப்பாடல்கள், திருநாவுக்கரசர் தேவாரம், பாவகை, திருத்தாண்டகம்

இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
parameswary1968@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இந்துக்களின் வாழ்வியலில் புதைந்துள்ள அறிவியல்

றஜிதா. அ

**ஆய்வுச்சுருக்கம்:**

சிவபூமி என்று திருமூலரால் அழைக்கப்பட்ட ஈழத்தின் பூர்வீக குடிகள் பின்பற்றிய நெறியாக இந்துமதம் திகழ்கிறது என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். இங்குள்ள வடக்கு, கிழக்கு, வடமத்தி, மத்தி, மேல் மாகாணங்களில் இந்துக்கள் 12.61 வீதத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களுக்கெனத் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களினை, வழிபாட்டு முறைகளைச் சடங்குகளை கலைகளைக் கொண்டவர்களாக விழுமியத்துடன் இணைந்த வாழ்வினை வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வியலில் அறிவியல் உண்மைகள் இலைமறைகாய்களாகப் புதைந் துள்ளன. இந்துமதத்தினைப் பின்பற்றும் மக்களின் வாழ்வியலில் இழையோடியுள்ள அறிவியற் பரிமாணங்களை வழிபாட்டு முறைகளில் சடங்குகளில் உணவுப் பழக்கவழக்கங்களில் கலைகளில் அறிவியல் என்கின்ற உபதலைப்புகளில் விவரண ஆய்வு முறையியல் ஊடாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஈழத்தில் வாழும் இந்து சமுதாயத்தினரின் வாழ்வியலில் அறிவியற் பரிமாணம் பிரிக்கமுடியாதவாறு பிணைந்துள்ளது என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாகும். இந்த ஆய்வினூடாக ஈழத்து இந்துக்கள் தங்கள் வாழ்வியலில் அறிவியலுடன் இணைந்த பழக்கவழக்கங் கள் பாரம்பரியங்களுடன் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்தனர் என்ற முடிவினை எட்டிவிட முடியும். அந்தவகையில் இந்த ஆய்வானது ஈழத்து இந்துக்களின் வாழ்வியலில் பொதிந்துள்ள அறிவியலை சிறப்பாக விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** ஈழம், சடங்கு, வழிபாடு, கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணம் சுட்டும் அரசுகள் – ஒரு விபரண ஆய்வு

அ.அனுராதமேனன்

**ஆய்வுச்சுருக்கம்:**

கம்பராமாயணமானது சோழர் காலத்து இலக்கியம் ஆகும். இந்நூல் இந்துசமய இதிகாசங்களில் ஒன்றான வடமொழி வால்மீகி இராமாயணத்தை மூலமாகக் கொண்டு அதனைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட வழிநூலாகும். கம்பராமாயணம் ஒரு வழிநூலாக இருந்தாலும் கம்பன் தனக்கே உரித்தான பாணியில் கருப்பொருள் சிதையாமல் இதனை இயற்றியுள்ளார். கம்பனின் இராமாயணத்தில் சமூகப் பிரதிபலிப்புகள், வாழ்வியல் சிந்தனைகள், அரசியல் சிந்தனைகள் என்பன கூறப்பட்ட நிலையிலும் அதனை அறச்சார்புள்ள இலக்கியம் என்றே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இருப்பினும் கம்பராமாயணத்தில் உள்ள அரசியல் சிந்தனைகளைத் தனிக்கூறுகளாகப் பார்ப்பது என்பது கடினமானதாகவே உள்ளது. இதுவே இந்த ஆய்வில் எழுகின்ற பிரச்சினையாகும். கம்பனின் இராம காதையில் ஐந்து நாடுகளின் அரசுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு பேரரசுகள், மூன்று சிற்றரசுகள். பேரரசுகளில் ஒன்று அயோத்தி. மற்றொன்று இலங்கை. சிற்றரசுகளில் மிதிலை அரசு ஒன்று, கங்கைக் கரை அரசு ஒன்று, கிஷ்கிந்தை அரசு ஒன்று. இந்த ஐந்து அரசுகள் பற்றியும் ஆட்சி முறைகள் பற்றியும் ஆட்சியாளர்கள் பற்றியும் அரசியற் பிரச்சினைகள் பற்றியும் ஆராய்வதை நோக்கமாகவும் கம்பராமாயணத்தை ஆய்வுப்பரப்பாகவும் கொண்டு விபரணப்பகுப்பாய்வு முறையில் இவ்வாய்வு அமைகின்றது. கம்பராமாயணத்தில் கூறப்பட்ட அரசுகளின் ஊடாக மேல்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன. புராதன இந்து அரசியல் முறைப்படி கம்பர் சுட்டும் அரசுகளில் முடியாட்சியே இடம்பெற்றுள்ளது என்பதும் இலங்கைப் பேரரசு வன்மை சார்ந்த பேரரசு, வன்மையில் முடிந்த பேரரசு என்பதும் அப்பேரரசுக்கு சூர்ப்பனகை கூற்றாக அமைந்தாள் என்பதும் கிஷ்கிந்தை அரசு வானர அரசு என்பதும் வானர அரசாக இருந்தாலும் ஒரு அரசுக்குரிய அமைப்பு, மந்திரிசபை அமைந்திருந்தது என்பதும் மிதிலை அரசு செல்வச் செழிப்புள்ள அரசு என்பதும் கங்கைக்கரை அரசு அமைதியான அரசு என்பதும் அயோத்தி அரசு குறைகளும் நிறைகளும் உடைய பேரரசாக விளங்கி எந்தச் சூழ்நிலையிலும் அறம்சார்ந்த நெறிமுறையைப் பின்பற்றியதால் வெற்றிபெற்றது என்பதுமாகும். எனவே இவ்வகையில் நோக்குமிடத்து கம்பன் அந்த அரசுகளின் ஊடாக அறம் சார்ந்த அரசியலை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** கம்பன், இராமாயணம், அரசு, அரசியல் சிந்தனைகள், ஆட்சிமுறை

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முல்லைத்தீவு
anurathamenan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rendering stories in English from Periya Puranam as a strategy to promote reading skills through Cultural contexts: A study with a group of Undergraduates

**K. Shriganeshan**

## Abstract

Teaching of English as a Second Language is conducted at the Faculties of Arts, Hindu Studies and Visual and Performing Arts of the University of Jaffna in various groups. The undergraduates of the respective faculties find it difficult to refer books in English even after following a ten-year programme of learning English at Sri Lankan schools. To improve their proficiency in English, General English is taught in the First year and English for Humanities, English for Social Sciences, and English for General Purposes in the Second year and English for Career Development and English for Academic Purposes in the Third year respectively. However, the students found it difficult to manage their reading comprehension passages based on alien and irrelevant topics. It was also observed that the students were poor in oral and written communication. Therefore, it was proposed to use a set of stories, and culturally-friendly texts from Periya Puranam in English on the assumption that reading such pieces would promote language learning in cultural contexts. The paper is confined to the experimental study conducted with a group of Hindu students from the University of Jaffna using questionnaires, interviews with the students, lecturers, and administrators, and diary notes of the researcher. The workshop sessions four in number were conducted at different intervals during the three-month study. The study concentrates on how stories from Periya Puranam, a non-native religious text could motivate the learners and analyzes qualitatively the students' task sheets and responses to check with their improvement. Finally, recommendations are made in the light of the findings achieved. It has been found out that culturally friendly texts have promoted the students' reading skills with more interest while encouraging other skills.

**Keywords:** Culturally-friendly texts, Non-native Religious texts, Second language learning, Periya Puranam, Undergraduates

Department of English, Language Teaching University of jaffna.
1. Shriganeshan@univ.jfn.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிகை நடத்தைச் சிகிச்சையில் ஆலய வழிபாட்டின் பங்களிப்பு

பிரியங்கா. கு[1]
ச.சஜீபன்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது அறிகை நடத்தைச் சிகிச்சையில் ஆலயவழிபாட்டின் பங்களிப்பு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிகை, நடத்தை இரண்டினதும் இணைப்பே அறிகை நடத்தைச் சிகிச்சை ஆகும். இவ்விரு சிகிச்சையினதும் நுட்பங்கள், கொள்கைகள், ஆய்வுகள், அணுகுமுறைகள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு இரண்டின் கலவையாக உருவாக்கப்பட்டதே அறிகை நடத்தைச் சிகிச்சை ஆகும். ஆலயவழிபாடு மனிதன் தன்னை முழுமையாக உணருவதற்குரிய அடித்தளமாக அமைகிறது. மனிதனின் தன்னகவெளியினை அதிகரித்துத் தன்னை உணர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களிலும் ஆலய வழிபாடு மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்த ஆய்வானது விவரண முறையை அடிப்படையாகக் கொண்டது. இதற்கான தரவு சேகரிப்புக் கருவிகளாக இரண்டாம் நிலைத் தரவுகள் அமைகின்றன. ஆய்வின் முடிவாக உயர் உள செயன்முறைகளான சிந்தனைகள், புலக்காட்சி, ஞாபகம், நம்பிக்கை, மனப்பான்மை என்பவற்றில் ஒன்றோ பலவோ ஒருவருக்கு எதிரானதாக அமையும்போது அவர் பல்வேறு உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றார். இதனால் பதகளிப்பு, ஒழுங்கீனங்கள், மனச்சோர்வு என்பனவற்றுடன் சில உடலியல் ஒழுங்கீனங்களும் ஏற்படலாம். அதேபோல தவறான நடத்தையை சரியாக மாற்றி வடிவமைத்தல் முக்கியமானதாகும். அத்துடன் தேவையற்ற நடத்தைகளை இல்லாமல் செய்வதும் நல்ல நடத்தைகளைத் தூண்டி மேலும் சிறப்பாக வடிவமைத்தலும் வேண்டும். ஆகவே உலகின் பிரபலமான உளச்சிகிச்சை முறையான அறிகை நடத்தைச் சிகிச்சைகளின் கூறுகளை நாம் மதவழிபாட்டின் ஊடாகவும் ஆலய வழிபாட்டின் ஊடாகவும் கையாள முடியும். ஆலயம் செல்வதற்குத் தயாராகுவது தொடக்கம் இறுதியாக சண்டேசுவரரை வணங்கி சிவதரிசன பலனைத்தந்தருளுமாறு பிரார்த்தித்தல் வரையான அனைத்து செயற்பாடுகளும் அறிகை நடத்தை சிகிச்சையில் பங்களிப்பு செலுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** அறிகை, நடத்தைச் சிகிச்சை, ஆலய வழிபாடு, உயர்உளச் சிந்தனைகள், மனிதப்பண்பியல்புகள்

1. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

priyankakunapalan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால சமூகத்தில் கலைகளின் மாற்றமும் நுகர்வோர் சமூகமும்: ஒரு மெய்யியல் நோக்கு

சாருகா. செ[1], தி.திலீபன்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

கலை என்பது மனிதனின் அக அனுபவங்களைக் குறியீடுகள் மூலமும் அதேசமயம் உடலாலும் உள்ளத்தினாலும் ஒருங்கிணைத்துச் செயற்படுகின்ற ஒரு நுட்பமான திறனாகவும் விளங்குகின்றது. பண்டைய காலங்களில் கலைகள் அழகியல் விதிகளுக்கு அமைய செயற்பட்டு வந்ததோடு சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டதாகவும் காணப்பட்டன. குறிப்பாகக் கலைகள் மனிதனுடைய கற்பனைத்திறனை வெளிப்படுத்துவனவாகவும் மனித வாழ்க்கைக்கான ஒழுக்க நெறிகளைப் போதிப்பனவாகவும் அமைந்திருந்தன. டால்ஸ்டாய் என்ற அறிஞர், ஒழுக்க விதிகளுடனும் ஒழுக்க உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் கலைகள் அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமும் இதுவே. இருப்பினும் அவை காலப்போக்கில் தமக்கான அழகியல் விதிகளிலிருந்து மாற்றமடைந்து கொண்டிருக்கின்றமை கண்கூடு. இம்மாற்றங்களுக்கு பல்வேறுபட்ட காரணங்கள் செல்வாக்குச் செலுத்தினாலும் நுகர்வோர் சமூகத்தின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்படுகிறது. குறிப்பாக நுகர்வோரினை மையப்படுத்திக் கலைகளை வெளிக்கொணருகின்ற வேளையில் அவை நிர்ணயிக்கப்பட்ட அழகியல் விதிகளிலிருந்து விடுபட்டுச் செல்கின்றன. இதனால் அவற்றின் உண்மைத்தன்மை சரியான முறையில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பதில் சிக்கல் எழுகின்றது. இந்நிலையில் இவ்வாய்வானது கலைகளின் செல்நெறிப்போக்கு, விதிகளிலிருந்து விடுபடுவதற்கான காரணங்கள் மற்றும் நுகர்வோர் சமூகத்தினுடைய வகிபங்கு என்பன பற்றித் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது. இவ்வாய்விற்கு விபரணமுறை, பகுப்பாய்வுமுறை மற்றும் விமர்சன ரீதியான அணுகுமுறை போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, ஆய்விற்கான தரவுகள் கலை மற்றும் நுகர்வோர் சமூகம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், ஆய்வு கட்டுரைகள் மற்றும் இணையத்தளப் பதிவுகள் என்பனவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** கலை, நுகர்வோர் சமூகம், அழகியல் விதிகள், சமூக மாற்றம்

1. சசெக்ஸ் கல்லூரி, தலைமை அலுவலகம், கொழும்பு
thileepant@univ.jfn.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப்பண்பாட்டில் மாஸ்லோவின் தேவைக்கொள்கை

பிரவினா.டி[1], பிரவீனா.இ[2], அன்றூ ஜவன் றொசாந்தன்.பி[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதனுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும் சமயம் என்பது பிரதானமான ஒன்றாகும். அந்தவகையில் இந்து சமயத்தின் முக்கிய இலக்கியங்களான வேதங்கள், உபநிடதங்கள், மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்றவற்றில் காணப்படும் பாடல்கள், மந்திரங்கள், தத்துவங்கள், சடங்குகள், கவிதைகள் மற்றும் கதைகள் போன்றவை மனிதர்களுடைய சுய எண்ணங்களை நல்வழிப்படுத்துவதிலும், நெறிப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. மேலும் மனித வாழ்க்கையின் இலக்குகள் குறித்தும் எடுத்தியம்புகின்றன. எனவே இதனடிப்படையில் இந்துப் பண்பாட்டிற்கும் மாஸ்லோவின் தேவைக்கொள்கைக்கும் இடையிலான தொடர்பை அறிதல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கணேசன்.பி என்பவரால் எழுதப்பட்ட இந்து மதமும் மனித வாழ்க்கையும் என்னும் நூலையும் தனபாலன்.பா என்பவரால் எழுதப்பட்ட பிரயோக உளவியல் என்னும் நூலையும் மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் முடிவாக இந்துப்பண்பாட்டில் உள்ளடங்கும் வேதங்களில் குறிப்பிடப்படும் மனித வாழ்க்கையின் இலக்குகள் பற்றிய கருத்துக்களுடன் மாஸ்லோவின் தேவைக்கொள்கையானது பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுவதுடன் அவை இன்றளவும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன என்பது பெறப்பட்டது.

**திறவுச்சொற்கள்:** தேவைக்கொள்கை, இந்துசமயப்பண்பாடு, மாஸ்லோ, இலக்குகள், சக்கரங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1. ranjanpiravina@gmail.com
2. inaabhanu@gmail.com
3. invanroshanthan3@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமும் நடத்தைகளும் – விபுலாநந்தரின் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது.

**வர்ணி. ச**

**ஆய்வுச்சுருக்கம்:**

மனவியல், நடத்தையியல் தொடர்பான எண்ணக்கருக்களை மேலைத்தேயர்கள் அணுகுவதற்கு முன்னரே இந்தியச் சிந்தனை மரபில் இக்கருத்தாக்கங்கள் எடுத்தாளப்பட்டுவிட்டன. மனதின் வெளிப்பாடாகத்தான் நடத்தை தோன்றியது. தனியன் ஒருவனின் நடத்தையை அவனது மனமே தீர்மானிக்கின்றது. உளவியல் சிந்தனைப் பள்ளிகளிற்கு முன்னோடியாக இந்து தத்துவ சிந்தனைப் பள்ளிகள் இருந்திருக்கின்றன. இந்தியச்சிந்தனை மரபில் வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, பதஞ்சலி யோக சூத்திரம் போன்றன இந்திய உளவியல் சிந்தனைகளில் பெரிதும் எடுத்தாளப்பட்ட இலக்கியங்களாகும். ஈழத்தில் இலக்கியம், இசை, சமயம், தத்துவஞானம், அறிவியல், தமிழ் எனப் பல துறைகளில் கரிசனை காட்டியவராக சுவாமி விபுலாநந்தர் அடையாளப்படுத்தப்படுகின்றார். கிழக்கிலங்கையில் முகிழ்த்த விபுலாநந்தர் தன்னுடைய கட்டுரைகளில் மனம் – நடத்தை பற்றிக் கருத்தூன்றி அணுகியுள்ளார். மனித மனங்களைச் சீர்திருத்து கின்ற எண்ணக்கருக்களை விபுலாநந்தரின் கட்டுரைகள் வெளிப்படுத்தியுள்ளன எனும் கருது கோளை முன்னிறுத்தி, விபுலாநந்தரின் கட்டுரைகளைத் தொகுத்து வெளிவந்த விபுலாநந்த அமுதம், விபுலாநந்தத் தேன், விபுலாநந்த ஆராய்வு, விபுலாநந்த வெள்ளம், விபுலாநந்த செல்வம், விபுலாநந்த உள்ளம் என்பவற்றை எல்லையாகக் கொண்டு ஆய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. விபரண ஆய்வு முறையியலைப் பிரதானமாகவும் உய்த்தறி, தொகுத்தறி முறைகளை அனுசரித்தும் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மனிதனின் நடத்தையினை மேம்படுத்துவதில் மனதின் அவசியத்தன்மையை விபுலாநந்தரின் கட்டுரைகளிலிருந்து வெளிக்கொணர்வதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. விபுலாநந்தர் வாழ்ந்த காலச்சூழல் இவரைச் சமூகம் நோக்கிச் சிந்திக்கத் தூண்டியது. சமூகம் திருந்த வேண்டுமெனில் தனியன் திருந்த வேண்டுமென விபுலாநந்தர் எண்ணினார். இவருடைய கட்டுரைகள் தீண்டாமை, மானுடநேயம், முயற்சி, சுய உழைப்பு, பிறர் நலன், அறம் வளர்த்தல், தவம், யோகம், சரப்பயிற்சி, சன்மார்க்க வாழ்வு, ஆன்மசுத்தி, புலனடக்கம் போன்ற எண்ணக்கருக்களைச் சுமந்து நிற்கின்றன. பிறழ்வுடைய சமுதாயத்திற்குத் தனிமனித ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. தூண்டல் – துலங்கல் அடிப்படையில் இச்சிந்தனைகள் மனித நடத்தையைத் தீர்மானிக்கும் என்பது ஆய்வாளனின் உன்னல். தனியன் தன் ஆளுமைகளை உருவாக்கி அதைக் கட்டுருவாக்கம் செய்ய இத்தகைய ஆய்வுகள் வழிசெய்கின்றன. நடத்தைப் பிறழ்வுக்கு ஆயத்தமாகியுள்ள அல்லது நடத்தைப் பிறழ்வுக் குள் மூழ்கியிருக்கின்ற மனித மனங்களைச் சீர்திருத்துகின்ற பல இன்னோரன்ன கருத்துக்கள் விபுலாநந்தரின் கட்டுரைகளில் காணப்படுகின்றன. விபுலாநந்தரின் கட்டுரைகள் சமூக உளவியல் பற்றிய ஆய்வுகளை ஆழமாக முன்னெடுக்கும் ஆய்வாளனுக்குத் துணை நிற்கும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** மனம், நடத்தை, விபுலாநந்தர், பிறழ்வு நடத்தை, சமூக உளவியல்

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
gowshalavarnie@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கமாதேவியின் வசனங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள்

செல்வகுமாரி. சி

**ஆய்வுச்சுருக்கம்:**

அக்கமாதேவியார் (கி.பி 12ஆம் நூற்றாண்டு) வடஇந்தியாவில், கர்நாடக மாநிலத்தில் சிவமொகா மாவட்டத்திலுள்ள "உடுதடி" என்னும் சிற்றூரில் நிர்மலன் – சுமதி ஆகியோருக்கு மகவாக அவதரித்தார். இளமைப் பருவத்திலிருந்தே கல்வி, இலக்கியப் படைப்பாற்றல் மற்றும் வீரசைவ ஞானத்தில் சிறந்து விளங்கினார். வீரசைவ அருளாளர்களாலும் பக்தர்களாலும் அக்கா, அக்கமாதேவி, மாதேவியக்கா, மகாதேவியார் என அழைக்கப்பட்டதோடு, வீரசைவத்தின் 'ஐந்து தூண்களில் ஒருவர்' எனவும் போற்றப்பட்டார். சமண சமயத்தைச் சார்ந்த அரசன் கௌசிகனை மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் திருமணம் புரிந்து கொண்டதாகவும் அரசன் அந்நிபந்தனைகளை மீற முற்பட்டதாகவும் அதனால் திகம்பரி கோலம் பூண்டு, ஸ்ரீ சைலத்தை அடைந்து, அங்கு வீரசைவ அருளாளர்களின் வரிசையில் முதன்மை பெறும் பசவண்ணரினால் கல்யாண்நகரில் நிறுவப்பட்ட வீரசைவ நிலையத்தில் இணைந்து, இந்நெறியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய பெண் ஆளுமையாக – பெண் பக்தையாக – வீரசைவ கன்னடப் பெண் கவியாக அறியப்படுகிறார். இவர், 'சென்னமல்லிகார்ச்சுனர்' (சிவன்) மீது தான் கொண்ட தெய்விகக் காதல் அனுபவத்தினை, கன்னட மொழியில் பல வசனங்களாக அருளினார். இவ்வசனங்களை ஆழ்ந்து நுணுகின், இவை வீரசைவநெறி சார்ந்த சமய, தத்துவக் கருத்துகளை விபரிப்பதோடல்லாது, சைவசித்தாந்த சிந்தனைகளுக்கும் முதன்மையளித்துள்ளன. இப்பின்னணியில், அக்கமாதேவியின் வசனங்களில் புலனாகும் சைவசித்தாந்த சிந்தனைகளை இனங்காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். சிவசரணியரான (வீரசைவப் பெண்ணடியார்) அக்கமாதேவியார், தனது தெய்விகக் காதல் அனுபவத்தின் வெளிப்பாடுகளுக்கு மத்தியில், சைவசித்தாந்த சிந்தனைகளுக்கு முதன்மையளித்தது ஏன்? என்பதே ஆய்வுப் பிரச்சினையாகும். அக்கமாதேவியின் வசனங்கள், சைவசித்தாந்தக் கருத்துக்களின் கருவூலமாகத் திகழ்கின்றன எனும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு நகர்கின்றது. அக்கமாதேவியின் வசனங்கள் முதலாம் நிலைத் தரவுகளாகவும் அவை தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளக் குறிப்புகள் ஆகியவற்றினை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் கொண்டு, விபரண, ஒப்பீட்டு மற்றும் வரலாற்றியல் ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கமாதேவியின் வசனங்களானவை பரம்பொருளின் இயல்பு, அதன் இலக்கணம், ஆன்ம இருப்பு, உடலின் நிலையற்ற தன்மை, ஆன்மாவின் இலட்சியம், மும்மலங்கள் (ஆணவம், கன்மம், மாயை), குரு, இலிங்க, சங்கம வழிபாடு, சிவசின்னங்கள், சைவநாற்பாதங்கள், தீட்சை மற்றும் சிவசக்தி தத்துவம் எனச் சைவசித்தாந்த சிந்தனைகளுக்கும் முதன்மையளித்துள்ளன என்பதனை இவ்வாய்வு தனது முடிவாக உரைக்க முற்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** அக்கமாதேவியார், வீரசைவம், சைவசித்தாந்தம், திகம்பரி, சிவசரணியர்

[1]மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
selvakumari.selva@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமியின் புலன்கடந்த புலக்காட்சியின் தொடர்புகள்

பாத்திமா அஸ்கியா.ஜ[1] , தட்ஷாயினி.யோ[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துப்பண்பாட்டில் சித்தர்கள் முக்கியம் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். அட்டமா சித்திகளும் கைவரப்பெற்றவர்களே சித்தர்கள் எனப்படுவர். பொது வாழ்வியலைத் துறந்து தமக்கானத் தனி நெறிகளைக் கடைப்பிடித்து இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த மகான்கள் இவர்கள் ஆவர். 'மெய்ப்புலன் காண்பது அறிவு" என்பதற்கிணங்க உண்மை நிலையை அடைவதற்கு முயன்றவர்களே இவர்கள் எனலாம். பரந்துபட்ட இப்பூமியிலே வாழ்ந்து பல அற்புதங்களையும் மகிமைகளையும் அருளிச்செய்த மகான்களின் வரிசையில் ஈழத்தில் தோன்றிய சித்தர்களுள் கோண்டாவில் பதியைப் பூர்வீகமாகக் கொண்ட கந்தையா எனும் இயற்பெயர் கொண்டவரே குடைச்சுவாமிகள் ஆவார். இவர் தம் வாழ்வியலில் பல்வேறு அற்புதங்களைத் தம் சித்து விளையாட்டால் புரிந்துள்ளார். இவற்றை அடிப்படையாகக்கொண்டு அவை ஒவ்வொன்றையும் புலன்கடந்த புலக்காட்சியுடன் தொடர்புபடுத்தி நோக்குவதை இவ்வாய்வு இலக்காகக் கொண்டுள்ளது. கடப்புநிலை உளவியலின் முக்கிய அம்சமான புலன்கடந்த புலக்காட்சிக்கும் சித்தர்களது சித்துக்களுக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுவதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த ஆய்வு அமையப்பெற்றுள்ளது. புலன்கடந்த புலக்காட்சி என்பது ஆறாவது அறிவு எனப்படும். இது ஐம்புலன்களால் உணரப்படும் அறிவையும் தாண்டி உணரக்கூடிய சக்தி ஆகும். இத்தகைய சக்திகளைக் கொண்டோராகவே சித்தர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள னர். இத்தகைய சக்திகளை விஞ்ஞானத் தன்மை கொண்டு ஆராய்வது தற்காலத்திற்கு அவசியமான ஒன்றாகும். இவ்வாய்வில் விவரண ஆய்வு முறையியல் அடிப்படையில் தரவுகள் தொகுக்கப்பட்டு தொடர்புகள் ஒப்பு நோக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்கு இவ்வகையான சித்தர்களுடைய அருமை, பெருமைகள் எடுத்தியம்பப்படுவதும் அவர்கள் பற்றிய வரலாற்றுத்தேடல்களும் இந்துசமய வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமையும். மேலும் உலகறிந்த சித்தர்கள் பலர் காணப்பட்ட போதிலும் ஈழத்துச் சித்தர்கள் பற்றிய வரலாறுகள் அரிதிலும் அரிதாகும். குறிப்பாக ஆய்வுக்காகத் தெரிவு செய்த குடைச்சுவாமிகளின் வாழ்வியல்சார் செய்திகள் வெறும் செவிவழிக் கதைகளாகவே காணப்படுகின்றன. அவற்றை எழுத்து வடிவில் பதிப்பது எதிர்கால சமூகத்திற்கு வழிகாட்டுவதாய் அமையும். மேலும் மதம் சார்ந்த சித்தர்களுடைய மகிமைகள் விஞ்ஞானத் தன்மையுடன் கடப்புநிலை உளவியல் சார்ந்த அடிப்படையில் ஆராயப்பட வேண்டியது அவசியம் ஆகும். ஆகவே சித்துகள் புரியும் சித்தர்களுக்கும் புலன்கடந்த புலக்காட்சிக்குமான தொடர்பை எடுத்தியம்பும் நோக்கிலேயே குடைச்சுவாமிகளின் வாழ்வியலோடு ஒப்பிட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சித்தர்கள், சித்திகள், புலன்கடந்தபுலக்காட்சி, குடைச்சுவாமிகள், கடப்புநிலை உளவியல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1. jfaskygg@gmail
2. thadsajiniyogeswaran@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆளுமை வெளிப்பாடுகள்

விதுர்சிகா. த

**ஆய்வுச்சுருக்கம்:**

சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். ஆன்மிக சாதனைகளில் சிறந்து விளங்கிய சித்தர்களில் ஒருவராக சித்தானைக்குட்டி சுவாமிகள் அறியப்படுகின்றார். சித்தருள் சித்தர் எனப் போற்றப்படும் சித்தானைக்குட்டி சுவாமிகள் தனது அனுபவம் மற்றும் வாழ்க்கைச்சம்பவங்கள், அற்புதங்கள், உபதேசங்கள், பண்புநலன்கள், அறிவு என்பவற்றின் ஊடாக ஒரு சமூகத்திற்குத் தேவையான ஆளுமைப் பண்புகளை வெளிப்படுத்தி உள்ளார். சிறந்த ஆளுமைப் பண்புகள் உடைய ஒருவராலேயே அட்டாங்க யோகங்களை முறைப்படி செய்து சித்தி பெற முடியும். ஒரு மனிதன் தன் வாழ்வில் இறுதி இலட்சியமான வீடுபேற்றினை அடைய இறைசிந்தனை என்ற ஆளுமைப் பண்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். சித்தானைக்குட்டி சுவாமிகள் அரச குடும்பத்தில் பிறந்த போதிலும் அரச போகங்களில் நாட்டம் ஏற்படாமல் ஆன்மிக வாழ்வினை நாடியவர். இந்த ஆய்வானது சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆளுமை வெளிப்பாடுகளை அறிதல், தளர்வற்ற ஆளுமைப் பண்புகளைச் சமூகத்தில் விபரித்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டமைகின்றது. இவ்வாய்வில் வரலாற்று ஆய்வு முறையியலும் பகுப்பாய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சித்தானைக்குட்டி சுவாமிகள் வெளிப்படுத்திய ஆளுமைகளை விருத்தி செய்வதற்கான சிந்தனைகள் இன்றைய காலகட்டங்களில் மீள் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆளுமை என்பது உடல், உடை அலங்காரங்களால் வெளிப்படுத்தப்படுவதாக தவறாக கருதப்படுகின்ற நிலை இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றது. சமூகத்தின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம் அனைத்தும் இதனால் பின்னடைவை எதிர்கொள்கின்றன. அதிலிருந்து மீண்டெழுவதற்கு சித்தானைக்குட்டி சுவாமிகளினது ஆளுமை வெளிப்பாடுகள் துணை நிற்கின்றன.

**திறவுச்சொற்கள்:** ஆளுமை, சித்தானைக்குட்டி, சித்தர், சமூகம், யோகம்.

[1]இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
t.vithursika1@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபக்தியில் வெளிப்பட்டு நிற்கும் உள உணர்வு வெளிப்பாடுகள்: ஆழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு

கஸ்தூரி.ச.

**ஆய்வுச்சுருக்கம்:**

உலகிலுள்ள அனைத்து விலங்குகளினுள்ளும் ஆழமான உள உணர்வுகளைக் கொண்டமைந்ததும் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்தப் பலமுறைகளைக் கையாளும் விலங்கினமாகவும் மனித இனம் விளங்குகின்றது. பல்வேறு காலகட்டங்களில் பல நாகரிக மாற்றங்களுக்குட்பட்டு வந்த மனித இனம் தன் உணர்வுகளையும் தன் நாகரிக மாற்றத்திற்கேற்ப வெளிப்படுத்த எத்தனித்தது. இதன் வாயிலாகப் பிறந்த பல நாகரிக சமூகங்கள் இன்று உலகமெங்கிலும் பரவிக் காணப்படுகின்றன. அவ்வாறான உயரிய உளப்பான்மையோடு இறையியலையும் இணைத்துக் கொண்டு கட்டமைக்கப் பட்ட இந்துநாகரிகப் புலமானது உலகிலுள்ள நாகரிகங்கள் அனைத்தினுள்ளும் தனித்துவமானதாகத் திகழ்கின்றது. இந்துப்பண்பாட்டு உளவியல், ரிஷிகளினதும் நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் ஞானிகளினதும் சீர்திருத்தவாதிகளினதும் சமயப் பெரியார்களினதும் வாயிலாகப் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் ஆழ்வார்களது உள உணர்வு வெளிப்பாடுகள் பிரபக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தன. அவர்கள் பக்தி பொதிந்த பாடல்களின் வாயிலாக இறைவனுக்கும் பக்தனுக்குமான உறவைப் பல்வேறு உறவு முறைகளின் அடிப்படையில் வெளிப்படுத்தி மக்களை இறைவன்பால் அன்புகொள்ளச் செய்வதற்கான அடிப்படைகளை மேற்கொண்டார்கள். அவை பல பாவ முறைகளின் வாயிலாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அப்பக்தியில் நிறைந்துள்ள மன உணர்வுகளை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. ஆண்டாள், பெரியாழ்வார், பொய்கையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரது பாடல்களில் வெளிப்பட்டு நிற்கும் மன உணர்வுகளை மையப்படுத்தியதாக இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பாடல்களில் காணப்படும் உணர்வு வெளிப்பாடுகளை அறிந்து கொள்ள இலக்கிய விபரண ஆய்வு முறையியலாகக் கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதன்மை மூலங்களாக மேற்குறித்த ஆழ்வார்களின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, துணை மூலங்களாக இதனோடு தொடர்புடையதாக வெளிவந்த ஏனைய நூல்களும் கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆழ்வார்களின் உணர்வின் அடிப்படையிலான அன்பில் வெளிப்பட்டு நிற்கும் பக்தியைப் பதிவு செய்தலை இவ்வாய்வு முக்கிய நோக்கமாகக் கொண்டு நகர்த்திச் செல்லப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** பிரபக்தி, உள உணர்வு, பாசுரங்கள், ஆழ்வார், அன்பு

warankasthuri1284@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பைக் கையாள்வதில் யோக சிகிச்சை

ச.சஜீபன்[1], க.கஜவிந்தன்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

யோகா என்பது வாழ்க்கையின் ஒரு தத்துவமாகும். உளச்சிகிச்சை முறைகளில் யோக சிகிச்சை முக்கிய இடம் பெறுகின்றது. இச்சிகிச்சை முறைகளில் ஆசன முறைகள், பிரணாயாமம், சூரிய நமஸ்காரம், தளர்வு நுட்பம், உடற்பயிற்சி போன்ற முறைகள் உள்ளடக்கம். உட்புற வெளிப்புற காரணிகளின் தூண்டுதலினால் உடல், உள நடத்தை ரீதியில் மகிழ்ச்சியற்று இருத்தல் மன அழுத்தம் எனப்படுகிறது. பதகளிப்பு என்பது ஒரு அழுத்தம் காரணமாக வெளிப்படும் உடல், உள நடத்தை ரீதியான இடர்பாடாகும். முதிர்பருவ முதற்கட்டத்தினர் மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பிற்குள்ளாகின்றனர், மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பைக் கையாள்வதில் யோக சிகிச்சையின் தொடர்பு காணப்படுகின்றது ஆகியன இந்த ஆய்வின் கருதுகோள்களாக அமைகின்றன. மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட முதிர்பருவ முதற்கட்டத்தினரின் மனஅழுத்தமானது Modified Perceived Stress Scale மூலமும் பதகளிப்பானது Hamilton Anxiety Rating Scale மூலமும் அளவிடப்பட்டுள்ளது. இத்தகைய மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பைக் கையாள்வதில் யோக சிகிச்சையின் வினைத்திறன் SPSS (verson20) மென்பொதியினைப் பயன்படுத்தித் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் அளவிடப்பட்டுள்ளது. பொருண்மைப் பெறுமானமானது (0.000,0.05) காணப்படுவதால் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தனியன் தன் வாழ்நாளில் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளால் மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பிற்குள்ளாகும் போது யோக சிகிச்சையின் மூலம் மீண்டும் தம் உளநலத்தைப் பேணமுடியும் என்ற ஆய்வு முடிவு முன்வைக்கப்பட்டுள்ளது. உள ரீதியான தாக்கம் ஏற்படும்போது யோக சிகிச்சை நுட்பங்களை அன்றாட செயற்பாடுகளில் ஒன்றிணைத்துக் கையாள வேண்டும் என்றும் யோக சிகிச்சை நுட்பங்களை மக்கள் மத்தியில் விழிப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆய்வின் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** யோகசிகிச்சை, மனஅழுத்தம், பதகளிப்பு, உளநலம், முதிர்பருவ முதற்கட்டம்

1. மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் asipaija5@gmail.com
2. மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் kajavinthan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதத்தில் பிரயோக உளவியல்

சுமித்ரா.செ[1], கோபிராம்.ந[2], சங்கீதவாணி.ச[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

நவராத்திரி விரதத்தில் பிரயோக உளவியல் எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் ஐம்புலன்களையும் அடக்கி திரிகரண சுத்தியுடன் இறைவனை விதிப்படி மெய்யன்போடு வழிபடுவதே விரதமாகும். மக்கள் தமக்கு நன்மை தரக்கூடியவற்றை வேண்டி பல்வேறு விரதங்களைக் கடைப் பிடிக்கின்றனர். அவ்வாறான விரதங்களுள் புனிதமான விரதமாக நவராத்திரி விரதம் போற்றப்படு கின்றது. நவம் – இராத்திரி எனப்பிரித்து சக்தியை நோக்கி ஒன்பது இராத்திரிகள் அனுஷ்டிக்கப்படும் விரதம் என்பதால் நவராத்திரி விரதம் எனச் சிறப்பித்து அழைக்கப்படுகின்றது. இவ்வாய்வானது நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் முறையாகத் தீர்த்துக் கொள்ள உதவும் விஞ்ஞானரீதியாக அமைந்த உளவியலின் பெரும் பிரிவுகளில் ஒன்றான பிரயோக உளவியலோடு தொடர்புபடுகின்றது. எனவே இந்த ஆய்வானது நவராத்திரி விரதத்தில் பிரயோக உளவியல் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண் டுள்ளது. இவ்வாய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனபாலன்.பா என்பவரால் எழுதப்பட்ட 'பிரயோக உளவியல்', சிவானந்த சர்மா.பா என்பவரால் எழுதப்பட்ட 'சைவ விரதங்களும் விழாக்களும்' என்ற நூல்களை முதன்மை நூல்களாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி நவராத்திரி விரதத்தின் ஒவ்வொரு செயன்முறைகளான உணவை விடுத்தல் அல்லது சுருக்குதல் என்பவற்றில் உடற்கூற்று உளவியல் மற்றும் நலன்பேண் உளவியலின் செல்வாக்கும் கொலு வைத்தலில் ஆற்றுப்படுத்தல் உளவியலின் செல்வாக்கினையும் கூட்டுப் பிரார்த்தனையில் சமூக உளவியலின் செல்வாக்கினையும் மாவிலை, தோரணம் கட்டுதல் மற்றும் கோலம் போடுதல் என் பவற்றில் நலன்பேண் உளவியலின் செல்வாக்கினையும் முப்பெரும் தேவிகளுக்கான வழிபாட்டில் கல்வி உளவியலின் செல்வாக்கினையும் தோத்திரப்பாடல்களில் இசை உளவியல் மற்றும் ஆற்றுப் படுத்தல் உளவியல் என்பவற்றின் செல்வாக்கினையும் விஜயதசமியில் ஆளுமை உளவியலின் செல்வாக்கினையும் வன்னி வாழை வெட்டுதலில் ஆற்றுப்படுத்தல் உளவியலும் செல்வாக்குச் செலுத்துகின்றமையை விளங்கிக் கொள்ள முடிகின்றது. தனியனின் உடல் மற்றும் உள நலத்தைப் பேணுவதால் நவராத்திரி விரதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒழுங்கு முறைப்படி மாணவர் கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் கடைப்பிடிப்பது நன்மை பயக்கும் என்பதனை இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

**திறவுச்சொற்கள்:** நவராத்திரி விரதம், உளவியல், பிரயோக உளவியல், வழிபாடு, உடலுள நலம்

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் sumisamithra0211@gmail.com
2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் kobiram2605@gmail.com
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2020ssvani@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகளின் 'நற்சிந்தனை'யில் ஒழுக்கவியல் சிந்தனைகள்

அபிராமி. செ

**ஆய்வுச்சுருக்கம்:**

சித்த விருத்தியை அடக்கிச் சிந்தையை ஏகாக்கிரமமாகப் பரம்பொருளிடம் செலுத்தும் வித்தை தெரிந்தவர்களே சித்தர்கள் எனப்படுவர் பாடல்களானவை இன மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் மனித குலம் அனைத்தினையும் ஒன்று சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. தமிழகத்து சித்தர் பரம்பரையைப் போன்று ஈழத்திலும் சித்தர் பரம்பரை இருந்திருக்கிறது. ஈழத்துச் சித்தர் பரம்பரையில் சிவயோக சுவாமிகளுக்குச் சிறப்பிடமுண்டு. ஈழத்துச் சித்தர்களுக்குள்ளே இலக்கியம் தந்த சித்தராக இவர் அடையாளப்படுத்தப்படுகிறார். இவருடைய நிறைமொழிகளே 'நற்சிந்தனைத்' தொகுப்பாக அறியப்படுகிறது. அந்தவகையிலே சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனையில் ஒழுக்கவியல் சிந்தனைகள் பற்றி நோக்குவதும் எதிர்கால சமூகத்திற்கு நல்லொழுக்கத்தினைப் போதிப்பதனையும் இவ்வாய்வானது நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது ஆய்வின் உண்மைத் தன்மையைப் பேணுவது ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளின் நம்பகத் தன்மையைப் பொறுத்து அமைகின்றது. இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக சிவயோக சுவாமிகளுடைய நற்சிந்தனையும் இரண்டாம் நிலைத் தரவுகளாக இவ்வாய்வோடு தொடர்புடையதாக இதுவரை வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், உரை நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தகவல்கள் என்பவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஈழத்துச் சித்தர்களின் இலக்கியங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இவ்வாய்வில் திரட்டப்பட்ட தரவுகள் விபரண ஆய்வு, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு முறையியல்களூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களுக்குள் ஒழுக்கவியல் சிந்தனைகளுக்குத் தனித்துவமான இடமுண்டு என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சிவயோக சுவாமிகள், நற்சிந்தனை, ஒழுக்கவியல், சித்தர் மரபு, வாழ்வியல் நெறி.

1. இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
abiraabi493@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் சிற்றின்ப வெளிப்பாடு

தினுஷிகா.ரி[1]

**ஆய்வுச்சுருக்கம்:**

வெருகல் சித்திர வேலாயுதர் காதல் எனும் இலக்கியம் வீரக்கோன் முதலியாரால் 17ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இந்நூலானது 421 கண்ணிகளைக் கொண்டது. இவ்விலக்கிய மானது திருகோணமலைக்குத் தென்பாலிலுள்ள வெருகற் பதியில் எழுந்தருளியிருக்கும் சித்திரவேலாயுத சுவாமியின் புகழினைப் பொருள் மரபாகக் கொண்டுள்ளது. இந்நூலானது பிரபந்த மரபைக்கடந்த உலா மற்றும் குறவஞ்சி இலக்கணத்திற்கு அமைவான ஒரு புதுமையான மரபைத் தழுவியதாகும். இறைவன் மீதான தெய்வீகக் காதலினை சிற்றின்பத்தின் அடிப்படையில் வெளிப் படுத்தி நிற்கின்றது. சிற்றின்பம் என்பது ஐம்புலன்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற இன்பமாகும். இவ்வாறான இன்பத்தினை அதிகளவு நேரம் அனுபவிக்க முடியாது. மனம் சோராவிட்டாலும் உடல் சோர்ந்துவிடும். இப்படிப்பட்ட குறையுள்ளதால்தான் அது சிற்றின்பம் எனப்படுகின்றது. வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் வெளிப்படுகின்ற அகத்திணை மரபுக்கூறுகளை எடுத்துக்காட்டுதல் மற்றும் தெய்வீகக் காதல் மூலம் பக்தி எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதனை விபரித்தல் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இந்த ஆய்வுக்கட்டுரையானது வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் காணப்படும் பக்தியினை சிற்றின்ப அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் வகையில் பகுப்பாய்வு முறையும் பிற பக்தி இலக்கியங்களில் காணப்படும் அகத்திணை மரபினை ஒப்பிட்டு நோக்குவதனால் ஒப்பீட்டு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. யானை மீது ஏறி சித்திர வேலாயுத சுவாமி தெரு வீதி உலா போவதனைக் காணும் மோகனப்பெண்ணின் காதற்கோலங்கள், காமத்தீயின் வாட்டம், பிரிவுத்துயரம், தனிமைப்பட்டிருத்தல், மோகனப் பெண்ணுக்கு தாய் கூறும் அறிவுரைகள், பின்னர் அவளின் அங்கலட்சணங்களை அவதானித்து குறத்தி குறி கூறுதல், குறத்தி குறி கூறியதற்கு இணங்க கிளியை வேலவனிடம் தூது அனுப்புதல், வெருகற் பெருமான் இப்பெண்ணின் தீராத காதலினைப் புரிந்து கொண்டு கடப்பமாலையைக் கொடுத்து அனுப்புதல் போன்ற சிற்றின்ப வெளிப்பாடுகளை இவ்விலக்கியத்தில் காணலாம்.

**திறவுச்சொற்கள்:** சிற்றின்பம், தெய்வீகக்காதல், மயக்கம், சைவ இலக்கியம், வெருகல் சித்திர வேலாயுதர் காதல்

[1]இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
thinusika123@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும்

இதயகுமாரி.சி[1], சஜானா.எ[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது மனிதவாழ்வில் மந்திரச்சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும் எனும் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளின் செல்வாக்கு, மந்திரச் சடங்குகளில் செய்வினைச் சடங்குகளின் முக்கியத்துவம், அதன் வகைகள், உளவியலில் மந்திரச் சடங்குகளின் தாற்பரியம் முதலியனவற்றை அறிதலை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளான நூல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. "மந்திரம் என்பது ஒரு மாயையை உண்டாக்கி அதனால் இயற்கையை உண்மையாகவே கட்டுப்படுத்துவதாக நம்புவதாகும்" என கார்டன் சைல்ட்டு குறிப்பிடுகின்றார். ஆ.சிவசுப்பிரமணியன் "பாவனைச் செயல்களையும் கட்டளையிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது மந்திரம்" எனச் சுருக்கமாக முன்மொழிந்தார். தனக்கு விருப்பமில்லாத ஒருவன் எல்லா வழிகளிலும் கெட்டழிந்துபோகச் செய்யப்படும் மாந்திரிக முறையே செய்வினை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. அறிவியல் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பு, மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்த காலத்தில் இயற்கையின் சீற்றத்தில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சூழலில் இருந்தனர். அப்போது மனிதன் தன்னைச் சுற்றி இயற்கையையும் மீறிய ஆற்றல் இருக்கிறது என்று நம்பி அவ்வாற்றலின் துணையுடன் இயற்கையின் பலன்களைப் பெற முயற்சித்தான். பின்னர் அவ்வாற்றலைக் கட்டுப்படுத்தி மேலாதிக்கம் செலுத்தும் வழிமுறைகளை மேற்கொண்டான். இவ்வாறு கையகப்படுத்திய ஆற்றலைச் சில சூத்திரங்கள் அல்லது வாய்பாடுகளாகச் சுருக்கி உச்சரிப்பதன் மூலம் பெறலாம் என்று நம்பினான். அதுவே செய்வினை – மந்திரச் சடங்காக அழைக்கப்படுகின்றது. செய்வினை என்பது மக்கள் வாழ்வில் நம்பிக்கை அடிப்படையில் வளர்ச்சி அடையும் ஒரு விடயமாகும். இயலாமை நிலை, தேவை நிலை அடிப்படையிலேயே செய்வினைகளும் பரிகாரச் செய்வினைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நம்பிக்கையானது நாட்டுப்புற மக்களில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. மனித வாழ்க்கையில் ஏற்படுகின்ற சில அசௌகரியங்களுக்கு இச்செய்வினையே காரணம் என நம்புகின்றான். இதற்கு எதிரான செய்வினைச் சடங்குகளைச் செய்து தன்னைப் பீடித்த ஒன்றை நீக்கிவிட்டதாக நம்புகின்றான். செய்வினை மந்திரோபாயங்கள் சமயம்சார் அம்சமாக இருந்தாலும் இவை உளவியலுடன் ஒப்பிடும்போது ஒரு வகையான மூட நம்பிக்கையாகவே இருந்து வருகின்றன. மந்திரச் சடங்குகளின் நம்பிக்கைகள் நம்பிக்கை உடையவர்களுக்கு உரியது. இம்முறை சமயம் கடந்தது. இவை உள ரீதியான நம்பிக்கையின் அடிப்படையில் எழுவதோடு இதில் உளவியல் ரீதியிலான தாற்பரியங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்:** மனிதன், வாழ்க்கை, சடங்கு, மந்திரம், உளவியல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1. rsrsantony2000@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த மரபில் சிவசின்னங்கள் பெறும் முக்கியத்துவம்: சைவபூஷண சந்திரிகையின் ஊடான நோக்கு

கீர்த்தனா.கு

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்திய தத்துவங்களில் ஒன்றான சைவசித்தாந்தம் சைவத்தின் முடிந்த முடிவான கருத்துக் களை விளக்குகின்றது. சைவசித்தாந்த வாழ்வியலில் ஆன்மவிடுதலைக்குரிய சாதனங்களாகச் சிவசின்னங்கள் பேசப்படுகின்றன. சைவசமயத்தின் தொன்மை, மேன்மை மற்றும் வழிபாட்டு முறை கள் என்பவற்றை அடையாளப்படுத்துபவையாக இவை அமைந்துள்ளன. சிவசின்னங்களான விபூதி மற்றும் உருத்திராக்கம் என்பவற்றை தரிப்பதால் ஒருவருக்கு மன அமைதியையும் தெய்வீக உணர்வையும் தூய்மையான ஒழுக்கச்சிந்தனைகளையும் ஏற்படுத்தும் என சைவ மக்கள் கருதுகின்றனர். இன்று விபூதி மற்றும் உருத்திராக்கம் என்பவற்றின் மகிமை மேலைநாட்டவர் களாலும் உணரப்பட்டுள்ளது. இவை சைவசித்தாந்த தத்துவத்தை உலகத்தவர் வாழ்வியல் தத்துவ மாக உணர்கின்ற தன்மைக்குச் சான்றாக அமைகின்றன. சைவ சமூகத்தவர்களால் மேன்மையுடைய தாகக் கருதப்படுகின்ற சிவசின்னங்கள் பற்றி மேலைப்புலோலி நா.கதிரைவேற்பிள்ளை சைவபூஷணசந்திரிகை என்ற நூலில் எவ்வாறான கருத்தியல்களை முன்னிறுத்தியுள்ளார் என்பதை ஆய்வின் நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு ஆகிய முறையியல்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது சைவபூஷண சந்திரிகையை மூலநூலாகக்கொண்டு சைவசித்தாந்த வாழ்வியலில் சிவசின்னங்கள் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்கின்றது. இந்நூலினூடாக நா.கதிரைவேற்பிள்ளையின் சைவசித்தாந்தப் புலமை, தர்க்க முறைமை, சிவசின்னங்கள் மற்றும் சைவசமயத்தின் மீதான ஈடுபாடு ஆகியன புலப்படுகின்றன. ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியமாக அமைவது சைவசமயத்தின் முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமானின் திருவடியை அடைதலாகும். அந்தவகையில் ஆன்ம விடுதலைக்குரிய சாதனங்களில் சிவசின்னங்கள் முதன்மையானவையாகக் காணப்படுகின்றன. சிவசின்னங்கள் பற்றிய நம்பிக்கை தனிமனிதனதும் சமூகத்தினதும் வாழ்வியலில் முக்கியத்துவ மானதாகவே கருதப்படுகின்றது என்பதனை நிறுவுவதாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : சைவசித்தாந்தம், கதிரவேற்பிள்ளை, சைவபூஷண சந்திரிகை, சிவசின்னங்கள், ஆன்ம விடுதலை

உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kobiram2605@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டில் உணவியலும் ஆரோக்கியமும்

**இரா. பன்னிருகைவடிவேலன்**

**ஆய்வுச்சுருக்கம்:**

'உணவே மருந்து' என்னும் கோட்பாட்டுடன் நல்ல ஆரோக்கியமான உணவை உட்கொண்டவர்கள் தமிழர்கள். இதற்கான சான்று சங்க இலக்கியங்களிலும் திருக்குறள், சித்த மருத்துவ நூல்களிலும் காணப்படுகின்றன. இந்த இலக்கியங்களை ஆய்ந்து, பழங்காலத்தில் எவற்றையெல்லாம் உணவாக உட்கொண்டார்கள், அவர்களது சமையல் முறைகள், சமைக்கப் பயன்படுத்திய பொருட்கள், உணவை உண்ணும் முறைகள், தமது உணவின் வழி ஆரோக்கியத்தை எவ்வாறு காத்து வந்தனர் முதலான பல செய்திகள் இலக்கியங்களின் வழி உற்று நோக்கிப் பதிவு செய்யப்படுகின்றது. இக்காலத்தில் உணவு முறையும் ஆரோக்கியமும் எப்படி எல்லாம் மாறிப் போயின என்பதையும் பழந்தமிழர் உணவு முறைகளும் உண்ணும் முறைகளும் அறிவியல் பூர்வமாக ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக உள்ள செய்தியையும் இந்த ஆய்வுக் கட்டுரை ஆய்ந்துரைக்க முற்படுகிறது. அருந்துதல், உண்ணல், உறிஞ்சுதல், குடித்தல், நக்கல், தின்றல், பருகல், மெல்லல், விழுங்குதல் என உணவு உண்ணும் முறைகள் பற்றியும் இலக்கியங்களின் வழி விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. சிறுதானிய உணவுகள், மருந்துகளாக உள்ள மிளகு, சீரகம், தேன், சுக்கு, இஞ்சி முதலான உணவுப் பொருட்களையும் இவற்றை உண்ணுவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றியும் எடுத்துரைக்கப் படுகிறது. இவ்வாறு உணவு உண்ணுதல் மட்டுமின்றி தம் இல்லத்துக்கு வரும் விருந்தினர்களை நன்கு உபசரிப்பதிலும் இந்துக்கள் சிறந்து விளங்கினர். இந்துப்பண்பாட்டில் பல ஆண்டுகட்கு முன்பே அன்றாட உணவியல் முறைமைகளால் பலவிதமான நோய்களை எதிர்த்து வெற்றி வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். இக்காலகட்டத்தில் உலகையே உலுக்கி வரும் நோயிற்கு மருந்தினை அன்றாட வாழ்வில் உணவோடு சேர்த்து உண்ணக்கூறினர். இத்தகைய உணவுப் பண்பாட்டினை விளக்கும் வகையில் இந்த ஆய்வுக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்:** உணவு, மருந்து, இலக்கியம், விருந்தினர், இந்துப்பண்பாடு

தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 600 117
pannirukai.sl@velsuniv.ac.in, pann1973@gmail.com +91 91766 30415



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரராசசேகரத்தில் உணவும் ஆரோக்கியமும்

**தனுஷா. நீ**

**ஆய்வுச்சுருக்கம்:**

மனிதனானவன் ஆரோக்கியமாக உயிர் வாழ்வதற்கு உணவானது இன்றியமையாத தொன்றாகக் காணப்படுகின்றது. அவன் உண்கின்ற உணவானது சத்து மிகுந்ததாகக் காணப்பட வேண்டும். அத்துடன் மருத்துவக் குணாம்சங்களுடன் கூடிய உணவுகளை உண்பதனால் ஆரோக்கியம் அதிகரிப்பது மட்டுமின்றி ஆயுளும் அதிகரிக்கும் என்பதனை நம் முன்னோர்கள் பல குறிப்புக்கள், நூல்கள் வாயிலாகக் கூறிச் சென்றிருக்கின்றார்கள். ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த மருத்துவ நூலாகப் பரராசசேகரம் காணப்படுகிறது. வடமொழியில் உள்ள ஆயுர்வேத நூல்களைத் தழுவியே இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் பெயர் அறியப்படவில்லை. பரராசசேகரம் பற்றிய பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் உணவும் ஆரோக்கியமும் தொடர்பாக எந்தவொரு தனியான ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாகக் கருதி இவ்வாய்வானது மேற்கொள் ளப்பட்டுள்ளது. பரராசசேகரத்தில் கூறப்படுகின்ற ஆரோக்கியமான உணவு முறைகளை வெளிக் கொணர்தல் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத்தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவாக பரராசசேகரத்தின் மூலநூல் காணப்படுகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளாக பரராசசேகரம் தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையச் செய்திகள் மற்றும் காணொளிகள் போன்றன காணப்படுகின்றன. பரராசசேகர நூலானது இவ்வாய்வின் எல்லையாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வானது விவரண ஆய்வாக அமைகின்றது. பரராசசேகரத்தில் நோய்களும் அவற்றுக்கான மருந்துகள், தைலங்கள், எண்ணெய் வகைகள், லேகியங்கள் போன்றவற்றோடு மருத்துவக் குணம் நிறைந்த உணவு முறைகளான குழம்பு வகைகள், நெய் வகைகள், உருண்டை வகைகள் போன்றனவும் கூறப்பட்டுள்ளன. இவ்வாய்வானது உணவே மருந்தாக அமைவதைக் குறிப்பாகக் கூறுகின்றது. நோயானது ஒருவரைப் பீடிப்பதற்கு முன்னர் அதாவது, வருமுன்னர் காப்பதே சிறந்ததாகும். மருத்துவப் பெறுமதியுடைய உணவு வகைகளும் அவற்றை உட்கொள்வதனால் ஏற்படும் விளைவுகளையும் (ஆரோக்கிய நலன்கள்) எடுத்துரைப்பதாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** பரராசசேகரம், உணவு, ஆரோக்கியம், குழம்பு, நெய்

இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
thanushaneelamohan@gmail,com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம், ஆசாரக்கோவை வெளிப்படுத்தும் உணவு முறைகள்

பேபிசாலினி.இ

**ஆய்வுச்சுருக்கம்:**

உணவானது மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆரோக்கியமானதும் சத்துக்கள் நிறைந்ததுமான உணவு முறைகளைப் பின்பற்றுவது மனிதனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கின்றது. உணவு மனிதனின் செயற்பாட்டை மாற்றியமைப்பதில் முக்கிய காரணியாக அமைகின்றது. மனித நடத்தைக்குக் காரணமாக அமைவது முக்குணங்கள். அக்குணங்கள் ஏற்படப் பிரதான காரணியாக உணவு அமைகின்றது. "உணவே மருந்து, மருந்தே உணவு" என்பது இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் ஆய்வுகள் ஊடாகவும் கண்டறியப்பட்ட உண்மை. இந்த உண்மையைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் அறிந்திருந்ததனை திருமந்திரமும் ஆசாரக்கோவையும் சுட்டிக்காட்டுகின்றன. தற்காலத்தில் மனிதன் தன் இயந்திரத்தனமான வாழ்க்கை முறையினால் தனது ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை மறந்து நடக்கின்றான். தமிழர்களின் பாரம்பரிய உணவு முறைகள் தற்கால ஆரோக்கியமற்ற உணவு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டன என்பது இந்த ஆய்வின் பிரச்சினையாகவுள்ளது. திருமந்திரம், ஆசாரக்கோவை போன்ற இலக்கியங்களூடாக இவ்வாய்வு நிறுவப்படுகின்றது. திருமந்திரம், ஆசாரக்கோவை போன்ற நூல்களில் வெளிப்படும் உணவியல் பற்றிய சிந்தனைகளை அடையாளம் காண்பதும் அவை தற்கால உணவுப் பழக்கவழக்கங்களுடன் கொண்டுள்ள தொடர்புகளை இனங்காண்பதும் ஆய்வின் நோக்கங்களாக அமைகின்றன. திருமந்திரம், ஆசாரக்கோவை போன்ற நூல்கள் குறித்து பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் ஒப்பீட்டளவில் உணவு முறைகள் பற்றிய சிந்தனைகளை எடுத்துரைக்கின்ற வகையில் தனியான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாய்வில் விபரண ஆய்வு முறையியல், ஒப்பீட்டாய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் பயன்படுத்தித் தரவுகள் பெறப்பட்டுள்ளன. தமிழர்களின் பாரம்பரியமான உணவு முறைகள் மனிதனின் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்ற அதேவேளை தற்காலத்தில் அவற்றின் தேவைப்பாடு அதிகம் உள்ளதையும் இவ்வாய்வு முடிவாகக் காணவிழைகிறது.

**திறவுச்சொற்கள்:** திருமந்திரம், ஆசாரக்சோவை, உணவு, உடல் நலம், உள ஆரோக்கியம்

இந்துநாகரிகப்பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
babysaliniramakkavundar@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாத்திரிய யோகவியலும் உடற்கல்வியும்

ஜோதிலட்சுமி.மு

**ஆய்வுச்சுருக்கம்:**

இறையாற்றலே இயற்கையாகத் தன்மாற்றம் அடைந்துள்ளது. இறைநிலையின் பேராற்றலும் பேரறிவும் காணுகின்ற உலகில் உருவமைப்பையும் குணநலன்களையும் இயக்க ஒழுங்கையும் கொடுக்கிறது. பேரியக்க மண்டலத்தில் உள்ள பஞ்சபூதங்களும் உயிரினங்களும் மனிதர்களும் இறைநிலையின் தன்மாற்றச் சிறப்பே ஆகும். உடல் மற்றும் அறிவுரீதியான தன்மாற்றப் பயணத்தில் உச்சக்கட்டத்தில் இருப்பது மனிதன். மனிதவாழ்வின் முழுநோக்கத்தைச் செயல்படுத்த மானுடசமூகம் உயரவழிகாட்டும் வேதாத்திரிய யோகமும் உடற்கல்வியும் குறித்து இக்கட்டுரை ஆராயமுற்படுகின்றது. வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலமாக இறைநிலை இயங்குவதை வேதாத்திரியம் வழி அறிய முடிகிறது. வேதாத்திரிய யோக நெறியைக் கற்றுக்கொள்ள ஆக்கினை, சாந்தி, துரியம், துரியாதீதம் என்பன அடிப்படைத் தவப்பயிற்சிகளாக அமைகின்றன. பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம், ஞானயோகம் இவை நான்கும் வேதாத்திரியம் கற்றுத்தரும் யோக நெறிகள் ஆகும். உடல்நலம் ஆரோக்கியமானதாகத் திகழ உடற்பயிற்சி உறுதுணை செய்கின்றது. இரத்தஓட்டம், வெப்பஓட்டம், காற்றோட்டம், காந்தஓட்டம், உயிரோட்டம் எனும் ஐந்தும் இப்பயிற்சியினால் சீராகச் செயல்படுகிறது. மனநலம் சிறக்கத் தவப்பயிற்சியும் உடல்நலம் சிறக்க எளியமுறை உடற்பயிற்சியும் அவசியமாகும். வேதாத்திரிய யோக நெறிப்படி வாழ்வதன் வழி உடல்நலம், நீள்ஆயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் பெற்று மேலோங்கி வாழ முடியும் என்பதே இக்கட்டுரை வழி ஆராயப்பட்ட முடிவுகளாகும்.

**திறவுச்சொற்கள் :** கர்மயோகம், யோகநெறி, காயகல்பம், மனநலம், வேதாத்திரியம்,

தமிழாய்வுத்துறை, பிலிப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
lec.jothilakshmi@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச்சிதம்பர புராணம் வெளிப்படுத்தி நிற்கும் விருந்தோம்பல் சிந்தனைகள்

துஹாயா.பே

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையின் சைவப்பண்பாட்டு வளர்ச்சிக்கு சிவாலயங்களை மையமாகக் கொண்டு எழுந்த தலபுராணங்களின் வகிபங்கும் குறிப்பிடத்தக்கது. சிவத்துடன் தொடர்புடைய சைவத் தலபுராணங்களானவை வெறுமனே சமயபக்தி இலக்கியம் என்பதனைத் தாண்டி சமூகப்பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டவையாக விளங்குகின்றன. மகளிரைப்போற்றும் பண்பாடு, அறவியல் பண்பாடு, அறிவியற்பண்பாடு, ஊர்ச்சிறப்பு, திருக்கோவிலுக்கு அடியவர்கள் ஆற்றிய சேவைகள் போன்ற பல்வேறு சமூகக்கூறுகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், திருக்கரசைத்தலம், நகுலேச்சரம், நல்லூர் கைலாசநாதர் கோயில், ஈழத்துச்சிதம்பரம் எனும் சிவத்தலங்களை மையப்படுத்தி, இத்தலங்கள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களின் சமுதாயக் கூறுகளின் அடிப்படையில் சைவம் சார்ந்த பண்பாட்டினைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக மேற்குறித்த தலங்களின் மீது தலபுராணங்கள் தோற்றம் பெற்றன. அந்தவகையில் இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் காரைநகர் என வழங்கும் காரைதீவிலே திண்ணபுரம் எனும் பிரிவிலுள்ள ஈழத்துச்சிதம்பரத்தில் கோயில் கொண்டருளிய சிவபிரான் மீது பாடப்பெற்றதே திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச்சிதம்பர புராணமாகும். இப்புராணமானது கொண்டுள்ள சமூகப் பண்பாட்டிலே இந்துக்களின் வாழ்வியல் நெறிகளில் ஒன்றான விருந்தோம்பற் பண்பாடானது சிறப்பிற்குரியதாகக் காணப் படுகின்றது. இப்புராணமானது விருந்தோம்பல் முறை, காரைநகர் மகளிரின் விருந்தோம்பல் மாண்பு, ஆடவரின் விருந்தோம்பற் சிறப்பு, அவ்வூர் விவசாயிகளின் விருந்தோம்பற் சிறப்பு, சிவனடியாருக்கு திருவமுதூட்டி உபசரிக்கும் முறைமை என்பனவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆனாலும் இன்று சமூக விழுமியங்களை வெளிப்படுத்தும் இந்துமத நியமமாக உள்ள விருந்தோம்பற் பண்பாட்டின் தாற்பரியமானது சமூகத்தின் மத்தியில் உணர்த்தப்பட்ட தன்மை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே ஈழத்துச்சிதம்பர புராணத்திலுள்ள விருந்தோம்பற் சிந்தனைகளை வெளிக்கொணர்தலே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வு முறையியல், வரலாற்றாய்வு முறையியல் மற்றும் ஒப்பீட்டாய்வு முறை ஆகிய ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** ஈழத்துச்சிதம்பர புராணம், தலபுராணம், சமூகப்பண்பாடு, சைவம், விருந்தோம்பல்

இந்துநாகரிகத் துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thukaya@univ.jfn.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி விரத கால வாழ்வியலில் உளவியல்

**நிவேதா. கை**

**ஆய்வுச் சுருக்கம்:**

சைவ மக்களால் பின்பற்றப்படுகின்ற சமய ஒழுகலாறுகளில் விரதங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவை எமது வாழ்வில் இறையுணர்வையும் புனிதத் தன்மையையும் ஏற்படுத்த உதவுகின்றன. நாம் நினைத்த காரியங்களை நிறைவேற்றவும் மன நிம்மதி கிடைக்கவும் நம் வாழ்வில் எல்லா செல்வங்களும் பெற்று பொருளாதார நிலையில் மேம்பாடடையவும் அனைவரும் இவ்விரதத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். விரதம், நோன்பு என்பன ஒரே பொருள் உடையன. சிவன், சக்தி, விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் முதலான பல தெய்வங்களுக்கு பல விரதங்கள் அடியவர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. எல்லாவற்றையும் ஒருவர் வாழ்வில் அனுஷ்டிக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. மக்கள் பல நிலைகளை உடையவர்கள், அவரவர்கள் பக்தி, வசதி, விருப்பம், பொருள், இடம், காலம், பருவம் முதலியன நோக்கி விரதம் பலவாயின. அத்தகைய விரத வகைகளுள் முருகனுக்குரிய விரதங்கள் பலவாயின. தெய்வங்களில் அழகன் எனப் போற்றப்படுபவர் முருகன். இவரை அதிகம் வழிபடுபவர்கள் தமிழர்கள் என்பதால் இவரை தமிழ்க்கடவுள் என்று அழைக்கப்படுகிறார். கலியுகக்கந்தனுக்குரிய விரதங்களாக வெள்ளிக்கிழமை விரதம், திருக்கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் போன்றன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் முருகன் அருள் வேண்டிப் பக்தர்கள் இருக்கும் விரதங்களில் மிகச்சிறப்புடையது கந்தசஷ்டி விரதமாகும். இவ் விரதமானது ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையிலும் ஆறு நாட்கள் முருகப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும். முருக ஆலயங்கள் உள்ளிட்ட அனைத்து ஆலயங்களிலும் இந்த ஆறு தினங்களும் முருகனுக்கு சஷ்டி உற்சவம் கொண்டாடப்படும். முருக விரதங்களுள் ஒன்றான கந்தசஷ்டி விரதத்தை ஆய்வின் எல்லையாகக் கொண்டு இவ்வாய்வானது வரையறுக்கப்பட்டுள்ளது. கந்தசஷ்டி விரத காலத்தில் மக்களின் வாழ்வியல் முறையையும், அவர்களின் உளவியல் மற்றும் நடத்தைகளில் ஏற்படும் தாக்கத்தை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது கட்டமைக்கப்படுகின்றது. மேலும் இவ்விரத நியதிகள் குறித்தும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் ஏற்படும் பலாபலன்கள் பற்றியும் எடுத்தியம்புவதாக அமைகின்றது. இந்த ஆய்வானது வரலாற்றியல் ஆய்வு, விவரண ஆய்வு முறையியலுக்கு அமை வாகக் கட்டமைக்கப்பட்டு தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முன்னெடுக் கப்பட்டுள்ளது. விரத பொருள் விளக்கம் பற்றியும், கந்த சஷ்டி விரதம் உருவான கதை, இவ்விரதகால வாழ்வியல் மற்றும் நியதிகள் பற்றியும் இந்த ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ் விரதத்தின் போது விலக்கப்பட வேண்டிய விடயங்களும் கந்த சஷ்டி விரத காலத்தில் உளவியல் சார்ந்த நோக்குநிலை மற்றும் விரத பலன்கள் என்பவற்றை அறியவும் இந்த ஆய்வு துணை புரிகின்றது.

**திறவுச்சொற்கள்:** கந்தசஷ்டி, விரத காலம், முருகன், அடியவர்கள், உளம்.

இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
niveriatha6@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Effect of Yoga practices on the anxiety of Sports players in Jaffna zone compared to stretching execises

**Raguvarman V.**[1], **Ketheeswaran K.**[2], **Ganeshanathan K.**[3]

**Abstract:**

Yoga is a mental relaxation therapy followed by people in many different fields. Yoga affects the day-to-day activities of people, including sports players. The effect of yoga on sports players has not been studied in detail. Hence this research study was done to identify yoga's effects on sports players' anxiety behavior while comparing it with normal stretching exercises. For this, a sample of thirty (30) male sports players within the age range of 15 -20 years were selected from the Jaffna zone, and among them, fifteen (15) players were provided with yoga practices for a period of two months, and the rest of the sports players were provided with normal stretching exercises for two months. The anxiety levels of players before and after the training were measured using the sports anxiety scale via a standard questionnaire. The results of this study indicate that after the provision of training, the players who have undergone yoga practices have significantly lower anxiety levels ($33.86 \pm 1.49$) than those who have undergone normal stretching exercises ($43.05 \pm 1.66$). The level of significance was set at 0.05 level. Hence it proves that yoga practices reduce the anxiety level of sports players, which may result in improved sports performance.

**Keywords:** Anxiety, Sports performance, Stretching exercises; Yoga practices, Jaffna Zone.

1 Physical Education Unit, Kilinochchi Premises, University of Jaffna, Sri Lanka.
2 Sport Science Unit, University of Jaffna, Sri Lanka.
3 Physical Education Unit, University of Jaffna, Sri Lanka.
1. raguvarmantnpesu@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேசத்து வதனமார் வழிபாடு: மரபும் மாற்றமும்

உ. ஜீவதர்சன்[1]
வ. குணபாலசிங்கம்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

கிழக்கிலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசம் தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டமைந்ததாக விளங்குகின்றது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் போன்றன ஒன்றோடொன்று தொடர்பு பட்டு அம்மக்களின் வாழ்வியலோடு இணைந்ததாகக் காணப்படுகின்றன. அந்தவகையில் மட்டக் களப்பில் நிலவுகின்ற பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக வதனமார் வழிபாடு காணப்படு கின்றது. இவ்வழிபாடானது மகாவிஸ்ணு, சுவாதியம்மன், வதனமார், கொலு என்பன இணைந்த வழிபாடாகக் காணப்படுகின்றது. விவசாயம் செழிக்கவும் கால்நடைகள் பெருக வேண்டியும் இவற்றை நோய்நொடிகளிலிருந்து பாதுகாக்க வேண்டியும் செய்யப்படுகின்ற சடங்கு முறையாக வதனமார் சடங்கு விளங்குகின்றது. ஆரம்பகாலங்களில் கால்நடை வளர்ப்புத் தொழிலில் குறிப்பாக எருமையின மந்தைவளர்ப்புத் தொழிலில் ஈடுபடுபவர்களினால் இவ்வழிபாடு சடங்கு முறையியல் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இன்றைய காலகட்டத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதுடன் சடங்கு பூர்வமாகவும் ஏனைய முறைகளிலும் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வானது, தொழில் விருத்தியை நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்ற வழிபாட்டு முறைகளினை இனங்காணுதல், மட்டக்களப்புப் பகுதியில் நிலவுகின்ற மரபுரீதியான வதனமார் வழிபாட்டு முறைகளை அடையாளப்படுத்துதல் மற்றும் வதனமார் வழிபாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வெளிப்படுத்துதல் என்பனவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கு முதல்நிலைத் தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு போன்றனவும் இரண்டாம்நிலைத் தரவுகளாக பாரம்பரிய வழிபாட்டு மரபுகள், வதனமார் வழிபாடு தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் பத்திரிகைகள் முதலியனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது மட்டக்களப்பில் நடைபெறுகின்ற வதனமார் வழிபாட்டின் தோற்றம், பரவல், வழிபாட்டு முறைகள், வழிபாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மற்றும் இதர விடயங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, ஒப்பீட்டாய்வு போன்ற ஆய்வு முறையியல்களினூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. முடிவாக, வதனமார் வழிபாடானது திருகோணமலை மற்றும் மட்டக்களப்புத் தேசமென ஆரம்ப காலங்களில் அழைக்கப்பட்ட நிலப்பகுதிகளில் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை யினை அறிய முடிகின்றது. இத்தகைய பின்னணியில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வதனமார் வழிபாடானது இன்றைய காலகட்டத்தில் சம்ஸ்கிருதமயமாதலின் பிரதிபலிப்புகளால் வழிபாட்டியல் ரீதியான மாற்றங்களையும் உள்வாங்கி நிகழ்த்தப்படுவதனை இனங்காண முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** மட்டக்களப்புப் பிரதேசம், வதனமார் வழிபாடு, சடங்குகள், மரபுகள், சம்ஸ் கிருதமயமாதல்

[1]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். u.jeevatharsan861@gmail.com
[2]இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். gunapalasingamv@esn.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பெரியசுவாமி வழிபாட்டு முறைகள்

அ. தனோஜன்[1]
வ. குணபாலசிங்கம்[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள மட்டக்களப்புப் பிரதேசமானது தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டதாக விளங்குகிறது. புராதன பண்பாட்டு அம்சங்கள் இன்றும் சில கிராமங்களில் பேணப்படுகின்றன. அங்கு காணப்படும் குடிமுறைகள், வழிபாட்டு முறைகள், உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைகள், அவற்றினடியாக எழும் சடங்கு முறைகள், அவற்றினூடான கலைகள் என்பன வினோதமானதாகவும் வித்தியாசமானதாகவும் அமைகின்றன. அவ்வடிப்படையில் இங்கு வழக்கிலுள்ள வழிபாட்டு மரபுகளை இருபெரும் பிரிவுகளாக வகைப் படுத்தி நோக்க முடியும். அவற்றிலே ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது ஒரு வகை. மரபு வழியாகப் பேணப்பட்டும் பத்ததிகளை ஆதாரமாகக் கொண்டும் இயற்றப்படுவது மற்றொரு வகை. மேற்குறிப்பிட்ட இரண்டாம் வகைக்குரிய வழிபாட்டு மரபுகளே இப்பிராந்தியத்தில் பிரசித்தமானவை. இவ்வகை வழிபாட்டில் பத்ததிகளின் வகிபாகம் இன்றியமையாதது. இத்தகைய சடங்குகளுள் உள்ளூர்ச் சமூகங்களின் கடவுள் நம்பிக்கைகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சடங்குகள் இன்றைய காலத்தில் பல்வேறு வகைகளில் முக்கியம் பெற்றவையாக விளங்கி வருகின்றன. அந்தவகையில் இவ்வாய்வானது மட்டக்களப்பில் காலங்காலமாக இடம்பெற்று வந்த பெரியசுவாமி வழிபாட்டுச் சடங்குகள் பற்றி வெளிப்படுத்துவதாக அமைகிறது. இங்கு பெரியசுவாமி என்று குறிப்பிடப்படுவது மகாவிஸ்ணுவே ஆவார். இந்த ஆய்வினூடாக பெரியசுவாமியின் தோற்றம் பற்றிய மரபுவழிக் கதை, சடங்கினுடைய தோற்றம், அதன் கலைக்கூறுகள், இதனை முன்னின்று நடாத்தும் சமூகப் பகுதியினர் மற்றும் அவர்களது சமய கலாசார பண்பாட்டம்சங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். கள ஆய்வு உத்தி முறைகளான பங்குபற்றுதல், அவதானம் மற்றும் நேர்காணல் ஆகியன மூலம் பெறப்பட்ட தரவுகள் இவ்வாய்வுக்குரிய முதன்மைத் தரவுகளாகவும் பாரம்பரிய வழிபாட்டுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றன இரண்டாம்நிலைத் தரவுகளாகவும் அமைகின்றன. இவ்வாய்வு பெரியசுவாமி வழிபாட்டை மையப்படுத்தியதாக அமைந்தாலும் சடங்கு தொடர்பான பூரண விளக்கங்கள், விதிமுறைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கின்றது. மேலும் சமுதாய மக்களின் பண்பாட்டு ரீதியான சடங்குகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், கிராம அமைப்பு மற்றும் சாதி முறைமை என்பன இவ்வாய்வை வலுப்படுத்துகின்றன. இவ்வாய்வில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களின் மூலமாக இன்றைய சமுதாயத் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றிற்கேற்ப செயற்பட வேண்டிய முறைகளை இந்துசமய சடங்குகளின் ஊடாக இவ்வாய்வு எடுத்துக் கூறுகின்றது.

**திறவுச்சொற்கள்:** மட்டக்களப்புப் பிரதேசம், பெரியசுவாமி வழிபாடு, பூர்வீகக் குடிகள், சடங்குகள், பத்ததிகள்

[1] இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். anthanojant@gmail.com
[2] இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். gunapalasingamv@esn.ac.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரைமலைப் பள்ளு இலக்கியத்தில் நாட்டாரியல் கூறுகள்: ஓர் ஆய்வு

கேதீஸ்வரி.ர[1]
நீலமோகன்.த[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

சிற்றிலக்கிய வகைகளுள் எளிமையும் இனிமையும் நிறைந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியமாகும். பள்ளர்களின் வாழ்க்கை முறையை விளக்கிக் கூறும் இலக்கியம் இதுவாகும். இவர்களின் பிரதானமான தொழில் உழவுத் தொழிலாகும். ஈழத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்களுள் கதிரைமலைப்பள்ளு காலத்தால் முந்தையது. இதில் பள்ளன், மூத்த பள்ளி, பண்ணைக்காரன், இளையபள்ளி என நான்கு பாத்திரங்கள் உண்டு. சிந்து, விருத்தம் ஆகிய பா வகைகளும் பேச்சு வழக்குச் சொற்களும் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலினைப் பாடியவர் பெயர் அறியப்படவில்லை. இதில் நூற்றுமுப்பது செய்யுட்கள் காணப்படுகின்றன. இதனைக் 'கதிரையப்பர் பள்ளு' எனவும் அழைப்பர். இந்நூல் கதிர்காமத்தில் கோயில் கொண்டுள்ள முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. இந்நூலானது மரபுவழி இலக்கிய அம்சங்களில் நாட்டார் இலக்கியப் பண்புகளை அதிகளவில் கொண்டு காணப்படுகின்றது என்பது ஆய்வின் கருதுகோளாக அமைகின்றது. இந்நூலில் கூறப்படுகின்ற நாட்டாரியல் கூறுகளை இனங்காணல் ஆய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. முதலாம் நிலைத்தரவாக கதிரைமலைப்பள்ளு இலக்கியத்தின் மூலநூல் காணப்படுகின்றது. இரண்டாம் நிலைத்தரவுகளாக கதிரைமலைப்பள்ளு தொடர்பாக வெளிவந்த ஏனைய நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையச் செய்திகள் மற்றும் காணொளிகள் போன்றன காணப்படுகின்றன. இவ்வாய்வானது விவரண ஆய்வாகக் காணப்படுகின்றது. பள்ளு இலக்கியங்கள் பற்றிய பல ஆய்வுகள் எழுந்த போதிலும் கதிரைமலைப்பள்ளு பற்றி எந்தவொரு தனியான ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. இதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கதிரைமலைப்பள்ளு இலக்கியமானது ஆய்வின் எல்லையாகக் காணப்படுகின்றது. நெல், மீன் போன்ற உணவு வகைகள், பள்ளர்களின் தொழில், நாட்டின் வளம் பற்றி இது விளக்குகின்றது. அந்தவகையில், கதிரைமலைப்பள்ளில் வெளிப்படுகின்ற நாட்டாரியல் கூறுகளை விளக்குவதாக இவ்வாய்வானது அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** கதிரைமலைப்பள்ளு, சடங்கு, முருகன், மழை, வாழ்க்கை முறை

1. கலை கலாசார பீடம், இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
   r.ketheeswary2020@gmail.com
2. கலை கலாசார பீடம், இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
   thanushaneelamohan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கண்ணகியம்மன் சடங்குகளில் பெண்களின் வகிபங்கு

நிரோஷா.கோ

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துக்களின் வழிபாட்டு முறையானது ஆகமம்சார் வழிபாடு, ஆகமம்சாரா வழிபாடு என இருவகைப்படும். ஈழத்தில் இடம்பெறும் வழிபாடுகளில் முக்கியமான வழிபாடாக கண்ணகி வழிபாடு காணப்படுகின்றது. இவ்வழிபாடு ஆகமம்சார் முறையிலும் ஆகமம்சாரா முறையிலும் இடம்பெறுகின்றது. கண்ணகி வழிபாடானது இலங்கையில் கிழக்கு, வடக்கு மாகாணங்களிலும் மலையகப் பகுதிகளிலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் கண்ணகி வழிபாடானது இந்துக்களால் மட்டுமன்றி பௌத்தர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்துக்கள் போற்றி வழிபடும் கண்ணகி அம்மனை சிங்களவர்கள் 'பத்தினித் தெய்யோ' என்ற நாமத்துடன் வழிபடுகின்றார்கள். பொதுவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்துக்கள் கண்ணகி, கண்ணகை என்ற நாமத்துடன் வழிபடுகின்றார்கள். ஆனால் மலையகத்தில் உள்ள இந்துக்கள் கண்ணகி அம்மனை சிங்களவர்களைப் போல பத்தினி அம்மன் என்ற நாமத்துடனே வழிபடுகின்றார்கள். பொதுவாக இந்துசமய வழிபாட்டில் கிரியைகளை நிகழ்த்துவோர் அல்லது அங்கம் வகிப்போர் ஆண்களாகவே அதிகளவில் இருப்பது வழமை. ஆனால் கண்ணகியம்மன் வழிபாட்டில் பெண்களின் வகிபங்கு கணிசமானளவு காணப்படுகின்றது. இந்த ஆய்வானது ஈழத்தில் கண்ணகி வழிபாட்டில் பெண்களின் வகிபங்கு எந்தளவிற்கு உள்ளது என்பதை அறிதலையும் மற்றும் பெண்கள் கண்ணகி வழிபாட்டில் அங்கம் வகிக்கும் கூறுகளை விபரித்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை ஆகிய ஆய்வு முறையியல்கள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன்வழி கண்ணகி வழிபாட்டின் தோற்றப்பின்னணி, கண்ணகி வழிபாட்டில் இடம்பெறும் சடங்கின் கூறுகள், கண்ணகி வழிபாட்டில் பெண்களின் வகிபங்கு என்பவற்றைப் பற்றிய செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஈழத்தில் கண்ணகிக்குவிழா எடுக்கும் காலங்களில் பெண்களின் பங்களிப்பு என்பது குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுகின்றது. பொதுவாக ஆண்களே அதிகமாக சடங்குகளை நிகழ்த்துவோராக இருப்பார்கள். ஆனால் கண்ணகி வழிபாட்டில் பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு இணையாகக் காணப்படுகின்றது. பெண்களின் பங்களிப்பின்றி கண்ணகிக்குரிய சடங்கு பூரணமாகாது என்பது ஆய்வில் தெளிவாகின்றது.

**திறவுச்சொற்கள்:** வழிபாட்டுச் சடங்குகள், கண்ணகி, பத்தினி, பெண், நேர்த்திக்கடன்

இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
niosha33398@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புக் கிராமிய இசையில் பயன்படுத்தப்படும் தருக்கள்

த.கோபிநாத்[1]
த.வாகீசன்[2]

**ஆய்வுச்சுருக்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமான இசைமரபுகள் காணப்படுகின்றன. அவை தமிழ் இசை, நாட்டார் இசை, கூத்திசை, கர்நாடக இசை, மெல்லிசை, பண்ணிசை, முஸ்லிம் இசை, கிறிஸ்தவ இசை எனப் பல வகைப்படுகின்றன. நாட்டார் இசையானது பல தனித்துவங்களைத் தன்னகத்தே கொண்டு பாடப்படுகின்றன. அவற்றில் நாட்டார் இசையின் முதுகெலும்பாகத் தருக்கள் காணப்படு கின்றன. இங்கு தருக்கள் என்பது கிராமியப்பாடல்களின் மெட்டினை அல்லது இசையமைப்பினைத் தன்னான, திரனான, தானினம், தனம்தனம் என்ற பொருளற்ற சொற்களைக் கொண்டும் பாடலின் தாளத்திற்கு ஏற்ப பாடல் பாடுவதற்கு முன்பும் குறித்த பாடலின் பந்திகளின் நிறைவின் பின்னரும் பாடப்படுவனவாகும். இதனைக் கர்நாடக சங்கீதத்தில் சந்தம் என அழைப்பர். தொல்காப்பியர் வண்ணம் என்ற பெயரில் சந்தங்களை முதன் முதலில் பயன்படுத்தினார். இவரைத் தொடர்ந்து பண்ணிசை மரபில் சம்பந்தர் சந்தங்களைக் கையாள்கின்றார். இவரைத்தொடர்ந்து அருணகிரி நாதர் சந்தங்களைத் திருப்புகழில் கையாண்டுள்ளார். மட்டக்களப்பில் தருக்களைத் தாளம், தாளக்கட்டு என்றெல்லாம் அழைப்பர். இங்கு காவியம், கூத்து, வசந்தன், கொம்புமுறி, ஊஞ்சல், கும்மி, விவ சாயப்பாடல் என ஏராளமான கிராமியப்பாடல்களில் தருக்கள் தொன்றுதொட்டுப் பாடப்படுகின்றன. அவற்றில் கொம்புமுறி, கும்மி என்பவற்றிற்கு இரண்டு வகையான தருக்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாடப்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் தருக்கள் நீண்ட காலமாகப் பல கிராமியப் பாடல்கள் பாடுகின்ற முறையினை அடுத்தடுத்த இளந்தலைமுறையினருக்குத் தெரிவிக்கும் வகையில் காணப்படுவதனை மீள்பார்வை செய்வதனையும் அதனை ஆவணப்படுத்தும் நோக்கிலும் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. சமூகப் பண்பாட்டு ஆய்வு அணுகுமுறையிலும் கள ஆய்வு, விபரண ஆய்வு போன்ற ஆய்வியல் முறையியல்கள் ஊடாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் கருதுகோளானது தருக்கள் நாட்டார் பாடல்கள் பாடப்படுகின்ற முறைமையினைத் தொன்றுதொட்டு வழக்கில் பேண உதவுவதுடன் பாடல்களின் நிலவுகைக்குக் காரணமாகவும் அமைகின்றது என்பதனைச் சுட்டி நிற்கின்றது. ஆய்வு எல்லையாக மட்டக்களப்பு மாவட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரச்சினை நாட்டார் பாடல்களின் நிலவுகைக்குத் தருக்கள் இன்றியமையாதவையா? இல்லையா? என்பதாகும். முதன்மை ஆதாரங்களாக கள ஆய்வில் பெறப்பட்ட கலைஞர், அண்ணாவியார் என்போரது நேர்காணல்கள், இசையாற்றுகைகள், சடங்கு இசையாற்றுகைகள் என்பனவும் துணைமை ஆதாரங்களாக ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள், கூத்துப்பனுவல்கள் என்பவையும் அமைகின்றன.

**திறவுச்சொற்கள்:** கொம்புமுறி, வயிந்தன், தாளம் தீர்த்தல், தாளக்கட்டுகள், தருக்கட்டமைப்பு.

1. சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், மட்டக்களப்பு
kopinathth89@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தவராயன் கூத்து – மரபும் மாற்றங்களும்

த.றொபேட் அருட்சேகரன்

**ஆய்வுச்சுருக்கம்:**

ஈழத்தில் பல வகையான கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தாலும் இக்கூத்து முறைமைகள் அனைத்தில் இருந்தும் வேறுபட்ட தனித்துவமான பண்பைக் கொண்டு ஆடப்படுகின்ற கூத்து வடிவமே காத்தவராயன் கூத்து ஆகும். காத்தவராயன் கூத்து ஈழத்தின் வட பகுதியில் மட்டுமே தற்காலம் வரை ஆடப்படுவதுடன் மாரியம்மன் வழிபாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. படச்சட்ட மேடையில் இக்கூத்தானது ஆடப்பட்டாலும் ஆலயத்தினுள் நின்று காப்புப் பாடியும் கூத்தின் நிறைவில் அதேயிடத்திற்கு வந்து பாடி முடிப்பதுமே மரபாக உள்ளது. கிராமியத் தன்மை பொருந்திய இசை மெட்டுக்களாலான இக்கூத்தில் சிவன், பார்வதி, முத்துமாரி, கிருஸ்ணர், நாரதர், காத்தவராயன் போன்ற பாத்திரங்கள் தெய்வீகத் தன்மை கொண்டவைகளாகவே இதன் பார்வையாளர்களால் நோக்கப்படுகின்றன. இதற்கான ஆடல், சிந்துநடை என அழைக்கப்படுகின்றது. காதல் கதையை அடிப்படையாகக் கொண்ட இக்கூத்தானது அடிநிலை மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்த ஒன்றாகவும் அண்ணாவி மரபில் வளர்க்கப்பட்ட கட்டுக்கோப்பான அளிக்கையாக வும் தமிழர்களால் பேணப்பட்டு வந்துள்ளது. எனினும் தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் அறிமுகத்திற்குப் பின்னர் திரைப்படப் பாடல்கள் கலக்கப்பட்ட நிகழ்வாகக் காத்தவராயன் கூத்தானது மாற்றப்பட்டுள்ளது. தனித்துவமான கிராமிய இசையை அடிப்படையாகக் கொண்டதே காத்தவராயன் கூத்து எனும் கருதுகோளின் அடிப்படையில் இக்கூத்தின் இசையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணங்கள் எவை என்பதை அறிவதுடன் காத்தவராயன் கூத்தின் இசையைப் பேணுவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. காத்தவராயன் கூத்தின் 'இசையை' எல்லைப்படுத்திய இந்த ஆய்வு விவரண, விமர்சன ஆய்வு முறையியல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தமிழ்த் திரைப்படப் பாடல்கள் மட்டுமல்லாமல் மேலும் பலவகையான இசைப் பாடல்கள் கலந்ததாகக் காத்தவராயன் கூத்து மாறியுள்ளதை இந்த ஆய்வு சான்றுகளுடன் நிறுவுகின்றது. வரன்முறையான களப்பயிற்சிகளின் ஊடாக இளையோரைக் கூத்துக் கலைஞர்களாக உருவாக்கிக் காத்தவராயன் கூத்துக் கிராமங்களை ஊக்குவிப்பதன் மூலமே மரபு வழியான காத்தவராயன் கூத்தை மீண்டும் உருவாக்க முடியும். அண்ணாவி மரபில் வளர்க் கப்பட்ட இக்கூத்தானது முறையான ஆவணப்படுத்தல்கள் மூலம் பாதுகாக்கப்பட்டு அடுத்த சந்ததிக் குக் கையளிக்கப்பட வேண்டிய தேவை தற்காலத்தில் எழுந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** கூத்துமரபு, கிராமிய இசை, காத்தவராயன், அண்ணாவியார், திரையிசை

இசைத்துறை, சே.பொ.இ.அ.க பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
trarudsegaran@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் நோக்கில் மாந்திரீகக் கலை

**பிரேமகலா.கே**

**ஆய்வுச்சுருக்கம்:**

அறிவியற் புலத்தில் மாந்திரீகக் கலையானது சிறப்பான தனித்துவம் பெற்று விளங்குகின்றது. மாந்திரீகம் என்பது கடுமையான மந்திரச் சடங்குகளின் வழியாக நிகழ்த்தப்படுகின்ற ஒரு வழிபாட்டு முறையாக உள்ளது. ஒரு மந்திரத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் போது அபூர்வசக்தி ஏற்பட்டு அங்கு மாந்திரீகம் செல்வாக்குச் செலுத்துவதாகச் சொல்லப்படுகின்றது. இது பண்டைய காலம் தொட்டு தற்காலம் வரையிலும் அனைத்துச் சமயத்தினரிடையேயும் ஒரு மருத்துவக் கலையாகப் பயிலப்பட்டுவரும் பாங்கினைக் காணலாம். மக்கள் தோன்றிய நாளிலிருந்தே இம் மாந்திரீகமும் மருத்துவமும் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இத்தகைய மாந்திரீகமானது தன்னுள் பல மந்திர முறைகளைக் கொண்டமைந்துள்ளதோடு மந்திரித்தல் மூலமாகவே மனித உடம்பில் தோன்றும் பிணிகளுக்கு மருத்துவம் பார்க்கின்றது. அந்தளவிற்கு மாந்திரீகக் கலையுள் ஓர் அபூர்வ சக்தி இருப்பதாகவும் அச்சக்தியே அறிவியற் தளத்தினுள் நின்று காப்பதாகவும் மக்கள் நம்புகின்றனர். மாந்திரீகம் என்றாலே மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியது, பயங்கரமானது, சதி செய்வது என மக்கள் மத்தியில் தவறான விதை விதைக்கப்பட்டு விட்டது. ஆனால் இது காலம் காலமாக பாரிய அளவில் மக்களுக்கு நன்மை செய்யும் முயற்சியாக நீங்காப் பிணியையும் நீக்கும் வல்லமையைக் கொண்டதாகவும் இருந்து வருகின்றது. இங்கு இவ்வாய்வுத் தளமானது இலங்கையின் மலையகக் கிராமப்புறங்களில் வாழும் இந்து மக்களின் வாழ்வியலில் ஊடுருவியுள்ள மாந்திரீக மருத்துவத்தை எல்லையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது. மாந்திரீகத்தின் மூலம் நோயைக் குணப்படுத்தும் மருத்துவ முறைகளையும் மற்றும் சில அரிதான மூலிகைகளின் இரகசியத்தையும் வெளிக் கொணர்தலை நோக்கமாகக் கொண்டு அமைவதுடன், இது தொடர்பில் சமூகத்திற்கு விளக்கமளிப்பதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. விபரண ஆய்வு முறையியலுக்கமைவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வானது தேவையேற்படும் போது தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்வழி சித்தமருத்துவத்துடனும் ஆயுர்வேதத்துடனும் இணைந்து மாந்திரீக மருத்துவம் செயல்படுவதனை அறியலாம். பெரும்பாலும் இந்த மாந்திரீகத்தினால் செய்யும் மருத்துவம் மலையகக் கிராமப்புறங்களில் ஒரே மாதிரியான செயன்முறைகளைக் கொண்டே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறு பண்டையகாலம் தொடக்கம் தற்கால நடைமுறைகளிலும் இம்மருத்துவக் கலை மக்களது நம்பிக்கையுடன் பின்னிப்பிணைந்துள்ள பாங்கினை அறிந்துக் கொள்ள இந்த ஆய்வு துணைபுரிகிறது.

**திறவுச்சொற்கள்:** அறிவியல், மந்திரம், மாந்திரீகம், மூலிகை, சித்தமருத்துவம்,

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kesawanpremakala043@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன் கூத்தும் மலையகப் பண்பாடும்

லோகேஸ்வரி.பா[1], கோவிந்தனி.சு[2], சமீதா.பா[3]

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்த ஆய்வானது 'காமன் கூத்தும் மலையகப் பண்பாடும்' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டுள்ளது. கூத்துக்கள் மனித வாழ்வில் இரண்டறக் கலந்த விடயமாகக் காணப்படுகின்றன. மனிதன் தன்னிலை மறந்து முற்றுமுழுதாகக் கூத்துக்களில் ஈடுபட்டு வருகின்றான். இலங்கையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு பலதரப்பட்ட கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமே. அந்தவகையில் மலையகப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டோமானால், பிரித்தானியர்கள் ஆட்சியில் காணப்பட்ட அடக்கு முறைகளும் நிகழ்ந்தேறிய கொடுமைகளும் கொத்தடிமைகளாக வந்த மக்களை மீள முடியாத துன்பகரமான வாழ்க்கைக்குத் தள்ளியது. இவ்வாறான சூழ்நிலையிலும் மலையக மக்கள் தமது பாரம்பரியக் கலைகளை ஒருபோதும் கைவிடவில்லை. தமக்கு ஆறுதல் அளிக்கும் அடையாளங்களாக அன்றுதொட்டு இன்றுவரையில் இவற்றைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். கலை, கலாசாரம், பண்பாடு என்ற அடிப்படை அம்சங்களை நினைவில் கொண்டு, முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. மீரா.எஸ்.ஹரிஸ் என்பவரின் "இலங்கையின் இந்திய வம்சாவழி மக்களின் பாரம்பரிய கூத்துக்கள் என்ற நூலை முதன்மை நூலாகக் கொண்டதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. காமன் கூத்தானது மலையகத்தின் பல பிரதேசங்களில் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் பக்தி பூர்வமாகவும் நம்பிக்கையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட இக்கூத்தினை இன்றைய சந்ததியினர் பெருமளவில் விரும்புவதில்லை. அதனை நிவர்த்தி செய்து எமது இளைய சமுதாயத்தினரிடம் இக்கூத்தினைக் கையளிப்புச் செய்வதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** மலையகம், கூத்து, பக்தி, அடக்குமுறை, பொட்டல் வெளி

1. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் bklogeshwary2000@gmail.com
2. உளவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் govindanisub2000@gmail.com
3. ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் sabisameetho@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டிப் பிரதேசத்தில் செவ்வாச்சி வழிபாடு: ஒரு நோக்கு

நிஜிதா.சி[1]
பவனேசன்.வி[2]

**ஆய்வுச்சுருக்கம்:**

சைவ மக்கள் இரண்டு வகையான வழிபாட்டு முறைகளைக் கையாள்கின்றனர். ஒன்று ஆகம வழிபாட்டு முறை. மற்றையது ஆகமம் சாரா கிராமிய வழிபாட்டு முறையாகும். ஆகமம் சாராத வழிபாட்டினைக் குலதெய்வ வழிபாடு, நாட்டார் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு எனப் பல பெயர்களால் மக்கள் அழைக்கின்றனர். இவ்வழிபாடானது கிராமப்புற மக்களின் வழிபாடாகும். இவ்வழிபாடு பிரதேசத்திற்குப் பிரதேசம் இடத்துக்கு இடம் வேறுபட்ட தனிச்சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அந்தவகையில் கரவெட்டிப் பிரதேசத்தில் செவ்வாச்சி வழிபாடு இப்பிரதேசத்தின் தனித்தன்மை வாய்ந்த கிராமிய வழிபாட்டுச் சிறப்பிற்குரியது. செவ்வாச்சி எனும் தெய்வம் ஒரு பெண் தெய்வமாகும். இவ்வழிபாடானது கரவெட்டிப் பிரதேசத்தில் கரையோரத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்களால் பாரம்பரிய முறையில் வழிபடப்படுகின்றது. மேலும் இவ்வழிபாடானது ஆகம மயமாக்கலுக்கு உள்ளாகாமல் தொடர்ந்து பேணப்படுகிறது. எளிமையான வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டது. செவ்வாச்சி எனும் தெய்வத்தின் அடையாளச் சின்னமாக செட்டையில் இரு கண்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சியை ஒத்த வடிவம் கொண்ட பூச்சி இனத்தை உருவகப்படுத்தி வழிபடுகின்றனர். இத்தெய்வத்திற்குப் பெண்களே விளக்கு வைப்பவர்களாகக் காணப்படுகின்றனர். கரையோரத்தை அண்மித்த பிரதேசங்களில் உள்ள மக்கள் இவ்வழிபாட்டை வழிபடுகின்றார்கள். இவ்வழிபாடானது சமரபாகு எனும் பிரிவில் ஆண்டாவளவிலும் கரணவாய் வடமேற்கில் கலாவோடை, கொற்றாவத்தை பகுதிகளிலும் வதிரி பஞ்சுதோட்டப் பகுதியிலும் வியாபாரிமூலை முதலிய இடங்களில் வாழ்கின்ற மக்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு கொழுக்கட்டை அவித்து செவ்வாய்க்கிழமைகளில் விளக்கு வைத்து, சுட்டமீன், நீர்க்கஞ்சி முதலியன படைத்து வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடானது அடுப்புநாச்சி வழிபாட்டினை ஒத்ததாகக் காணப்படுகிறது. அடுப்புநாச்சி வழிபாட்டினையே செவ்வாச்சி வழிபாடாக இடத்துக்கிடம் வேறுபட்ட முறையில் வழிபாடு செய்யப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. அந்தவகையில் இவ்வாய்வின் நோக்கம், இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற இவ்வழிபாட்டின் தனிச்சிறப்பினை ஏனைய பிரதேச மக்களுக்குத் தெரியப்படுத்துதல் ஆகும். இவ்வழிபாடானது இன்றும் இப்பிரதேச மக்களால் எளிமையான முறையில் ஆகமமயமாக்கலுக்கு உட்படாமல் தனித்துவத்துடன் வழிபடப்படுகிறது. செவ்வாச்சி எனும் தெய்வம் உயிருள்ள வண்ணத்துப்பூச்சியை ஒத்த பூச்சி இனத்தையே பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாக அமைந்துள்ளது. இந்த ஆய்வில் வரலாற்றியல் ஆய்வு முறையியல், ஒப்பீட்டு ஆய்வு முறையியல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வழிபாடு தொடர்பான களஆய்வு முதனிலைத் தரவாகவும் மாநாட்டு மலர், பருவ இதழ்கள், ஆய்வுக்கட்டுரை, கும்பாபிஷக மலர்கள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொள்ளப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** சிறுதெய்வ நம்பிக்கைகள், வழிபாடு, கரவெட்டி, செவ்வாச்சி, வண்ணத்துப்பூச்சி

[1] உயர்பட்டபடிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், Nigitha26@gmail.com
[2] இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

கீதாஞ்சலி.த[1]
அபிராமி.சூ[2]

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழ நாடானது பல்வேறுபட்ட கலாசார மரபுரிமைகளையும் பண்பாட்டுச் சிறப்பினையும் கொண்டு விளங்குவதோடு பண்பாட்டுச் சுற்றுலாவில் அதிக வருமானத்தைத் தருகின்ற ஒரு நாடாக விளங்குகின்றது. பண்பாட்டுச் சுற்றுலா எனப்படுவது 'சுற்றுலாப்பயணிகள் விடுமுறை மற்றும் விழாக்காலங்களில் அருகில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்குச் சென்று, தாங்கள் விரும்பும் நண்பர்கள் உறவினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வர். இவ்வகை மகிழ்ச்சி தரும் சுற்றுலாக்கள்' பண்பாட்டுச் சுற்றுலா எனப்படும். ஈழத்தின் பண்பாட்டுச் சுற்றுலாவில் ஒரு மைல்கல்லாக செல்வச்சந்நிதி ஆலயம் காணப்படுகின்றது. செல்வச்சந்நிதி ஆலயமானது இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் பெறுகின்ற முக்கியத்துவம் குறித்த தேடலாகவும் ஆலயத்தின் பண்பாட்டுச் சுற்றுலா வளர்ச்சியில் இருக்கும் தடைகளை இனங்காணும் நோக்குடனும் இத்தலத்தை சுற்றுலாவிற்கான களமாக மேம்படுத்துவதற்கான உபாயங்களை இனங்காணுதல் பற்றியதாகவும் இந்த ஆய்வு அமைகின்றது. வரலாற்று நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நேர்காணல் ஊடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்தலமானது ஐராவசு சாப விமோசனம் பெற்ற தலமாகவும் சிகண்டி முனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற ஆலயமாகவும் தொண்டை மான் கருணாகரன் திருப்பணி செய்த கோவிலாகவும் தொன்மச்சிறப்புகளோடு திகழ்கிறது. செல்வச் சந்நிதி ஆலயத்தை நோக்கி சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்குரிய முக்கிய அம்சங்களாக அவ்வாலயத்தின் தலவிருட்சம், தீர்த்தச்சிறப்பு, சித்தர்மரபு, பாதயாத்திரை, உற்சவங்கள், நிவர்த் திக்கடன் மற்றும் பாரம்பரிய உணவுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்த ஆலயத்தினைப் பண்பாட்டுச் சுற்றுலாத்தளம் என்ற முழுமையான அடையாளப்படுத்துகையைச் செய்வதற்குச் சில மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆலயத்தின் தீர்த்தக் கரையினைப் புனரமைத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் சீரமைத்தல், ஆலய வீதிகளைப் புனரமைத்தல், பாதுகாப்பினைப் பலப்படுத்துதல், தங்குமிடவசதி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பண்பாட்டுச் சுற்றுலாவில் முழுமைத்துவமாக செல்வச்சந்நிதி ஆலயத்தை மேம்படுத்த முடியும். ஆலயத்திற்கு அதிகளவான பயணிகள் வருகை தருவதனால் பொருளாதாரம் மேம்பாடடை வதோடு ஆலயத்தின் ஊடாக சமூகத்திற்கு பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏராளமான ஆன்மீகச் சுற்றுலாத்தலங்கள் இருந்தாலும் செல்வச்சந்நிதி ஆலயத்தின் மகோன்னதம் என்பது தனித்துவமானதாகும். நகரமயமாக்கல் காலங்களில் நகரத்தினை மையப்படுத்தியே சுற்றுலா வளர்ச்சி துரிதப்பட்டிருந்தாலும் செல்வச் சந்நிதி மீதான பார்வை என்பது இன்றும் குறையாமல் உள்ளது. இம்முருகன் ஆலயத்தின் சுற்றுலா வளர்ச்சியில் ஏராளமான சவால்கள் காணப்படுகின்ற போதும் வட பிராந்தியத்தின் வரலாற்று அடையாளமாக இந்த ஆலயம் திகழ்வதுடன் பண்பாட்டுச் சுற்றுலாவில் முக்கியமான தலமாக உள்ளது என்பதை இந்த ஆய்வானது தெளிவுபடுத்துகின்றது.

**திறவுச்சொற்கள்:** இந்துப்பண்பாடு, பண்பாட்டுச்சுற்றுலா, செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், பாரம்பரிய வழிபாடுகள், சுற்றுலா மேம்பாடு.

இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1. keethanaba1@gmail.com
2. sooriyakumarabiramy1999@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பாரம்பரியத்தில் வைரவர் வழிபாடு

அபிஷனா.சி

**ஆய்வுச்சுருக்கம்:**

இலங்கையில் நாட்டார் தெய்வ வழிபாடுகளைக் கொண்டமைந்த முக்கிய பிராந்தியங்களில் ஒன்றாக மட்டக்களப்புப் பிரதேசம் காணப்படுகின்றது. மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்த வகையில் பல்வேறு ஆண், பெண் தெய்வங்கள் அங்கு வழிபடப்படுகின்றன. அவற்றுள் காவல் தெய்வமாகவும் எல்லைத் தெய்வமாகவும் சாதாரணமாக ஒரு மரத்தின் கீழ் திரிசூல வடிவில் இருப்பது முதல், வைரவர் கோயிலில் கர்ப்பக்கிரகமூர்த்தியாகவும் வீடுகளிலும் பயிர்ச்செய்கை நிலங்களிலும் மயானங்களிலும் ஆகமம் சார்ந்தும் சாராததுமான வழிபாட்டுடன் காணப்படுகின்ற ஆண் தெய்வமாக வைரவர் வழிபாடு இடம் பெற்று வருகின்றது. இவ்வகையில் மக்களின் வாழ்க்கையோடும் நம்பிக்கையோடும் இணைந்ததாகக் காணப்படுகின்ற இவ்வழிபாடு ஏனைய பிராந்தியங்களில் நின்றும் மாற்றமும் தனித்துவமும் உடையதாகத் திகழ்கின்றது. குறிப்பாக மாந்திரிக இணைவு, வீடுகளில் சிறப்பாக வைரவர் பந்தல்கள் அமைத்தல், மடை வைத்தலில் மொந்தன் வாழைப்பழ வகைகள், அரிசிமா ரொட்டி, தவிட்டு ரொட்டி, கஞ்சா ரொட்டி என்பன மாலைச்சந்திப் பொழுதில் நடைபெறும் பூசையில் முக்கியமானவை. வைரவருக்கான தனித்துவமான இலக்கிய மரபும் பத்தாசி மரபும் மாந்திரிக மரபும் பாரம்பரியமாக மட்டக்களப்பில் இடம்பெற்று வருகின்றன. இவ்வகையில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் வைரவர் வழிபாடு எத்தகைய முதன்மையைப் பெறுகின்றது, அதன் சமூகப்பெறுமானம் என்ன என்பன இங்கு ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வு மட்டக்களப்புப் பாரம்பரியத்தில் வைரவர் பெறுகின்ற இடத்தினை அறிதலையும் மதிப்பிடுதலையும் நோக்கமாகக் கொண்டது. அத்தோடு கிராமிய வழிபாட்டில் ஆண் தெய்வங்கள் என்ற அடிப்படையில் வைரவருக் குரிய வழிபாட்டில் சடங்குகள் எத்தகையதாக அமைந்துள்ளன என்பதை அறிதல் துணை நோக்கமாக அமைந்துள்ளது. ஈழத்தில் ஏனைய பிராந்தியங்களைப் போன்று மட்டக்களப்பிலும் நீண்ட வரலாற்றை உடையதான இந்த வைரவர் வழிபாடு நாட்டார் வழக்கியல் முறையிலே அதிகம் கைக்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மான்மியத்திலும் இத்தெய்வம் பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன. ஆயினும் சமகாலத்தில் மேனிலையாக்கம் எனும் கருத்தாக்கத்தின் வழி ஏனைய ஆலயங்களைப் போல வைரவர் ஆலயங்களும் வைரவர் வழிபாடுகளும் ஆகம மயமாக்குதலுக்கு உள்ளாகித் தமது செல்வாக்கினை இழக்கத்தொடங்கி உள்ளன. இந்த ஆய்வானது வைரவர் வழிபாடு தொடர்பாக ஆய்வு செய்பவர்களுக்கும் அறிய விரும்புபவர்களுக்கும் முன்னோடியாக அமையும். இங்கு கள ஆய்வுமுறை, விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** வைரவர், மட்டக்களப்பு, வழிபாடு, சடங்கு பாரம்பரியம், நாட்டார் வழக்கியல்

சைவசித்தாந்தத் துறை, இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
sivanantharasaapishana@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் திரௌபதியம்மன் வழிபாட்டுமுறை

கஸ்மிதா.ஜெ

**ஆய்வுச்சுருக்கம்:**

பிரபஞ்ச வரலாற்றில் மனிதர்கள் ஆரம்பத்தில் தாய்வழிச் சமூகமாகவேயிருந்தனர். இயற்கையைத் தாயாகக் கண்டு வழிபட்டனர். இந்திய சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல. அந்த அடிப்படையில் இந்திய இனக்குழுச் சமூகத்திலிருந்து மேலெழுந்த பெண் தெய்வ வழிபாடுகளில் இலங்கையில் இந்துப் பாரம்பரியத்தின் வழி செல்வாக்குப் பெறும் தெய்வங்களில் திரௌபதி அம்மனுக்குத் தனி இடமுண்டு. இது உடப்பு (புத்தளம்), பாண்டிருப்பு (அம்பாறை), பழுகாமம் (மட்டக்களப்பு) ஆகிய இடங்களில் கோயில் வழிபாடாக விளங்கி வருகின்றது. கண்ணகி அம்மன், மாரியம்மன், காளியம்மன் போன்ற பல்வேறு பெண் தெய்வங்களினின்றும் தனித்துவமான தனக்கேயான மகாபாரத இதிகாசப் பாரம்பரியத்தின் வழி கட்டமைக்கப்பட்ட வழிபாடாக இது காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையில் திரௌபதியம்மன் வழிபாடு பெறும் முக்கியத்துவம், அதன் சடங்குமுறை, சமூகப்பெறுமானம் என்பன இங்கு ஆய்வுப் பிரச்சினைகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலுள்ள திரௌபதியம்மன் கோயில்கள் அவற்றின் சடங்கியல்கள், கலைகள், வழிபாட்டு முறைகள் என்பவற்றை ஆராய்ந்தறிதல் ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வில் வரலாற்று முறை, கள ஆய்வுமுறை, விபரண ஆய்வுமுறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலும் இந்துப் பாரம்பரியத்திலும் பெண் தெய்வ வழிபாடுகள் பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் ஆய்வு நிகழ்த்துபவர்களுக்கும் இந்த ஆய்வு உதவியாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** திரௌபதியம்மன், இலங்கை, இந்துப் பாரம்பரியம், மகாபாரதம், சடங்கு

சைவசித்தாந்தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kajcyarasa7@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பண்பாட்டுச் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்கள்: சமூகவியல் நோக்கு

த.விமல்

**ஆய்வுச்சுருக்கம்:**

சமூக மற்றும் பௌதீகச் சுற்றாடலுக்கும் சுற்றுலாத் துறைக்குமான இடைத் தொடர்பானது எதிர்காலத்திலான நிலைபேறான அபிவிருத்திக்கு மிகவும் இன்றியமையாத ஒரு காரணியாகக் கருதப்படுகிறது. உலகமயமாக்கல், நகரமயமாக்கலின் அசுர வளர்ச்சி, நவீன போக்குவரத்து உட்கட்டுமானங்கள், தொடர்பாடல்துறை விருத்தி, பண்பாட்டு எழுச்சி, உலகளாவிய தொடர்பாடல் விருத்தி, சுற்றுலாத்துறை மீதான மானுட ஆர்வத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு முதலானவை சமகாலத்தில் சுற்றுலாத் துறையையும் புதிய பரிமாணத்துக்குள் இட்டுச் செல்வதைச் சுற்றுப்புறச் சூழலியலாளர்களும் சமூகவியலாளர்களும் ஒருசேர எடுத்துரைக்கின்றனர். குறிப்பாக இலங்கை யிலும் இன்று சுற்றுப்புறச் சூழல் சார்பான சுற்றுலாத்துறையானது பல்வேறு வளர்ச்சிப்படிகளை எய்தியுள்ளது. விசேடமாக நீண்ட தசாப்தகால உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்த நிலையில், இத்துறை சார்ந்த அக்கறையும் அவதானமும் இலங்கையின் அரசாங்கம், வணிகத்துறையினர் இதர கொள்கை வகுப்பாளர்களிடம் அதிகரித்து வருகிறது. இத்தகையதொரு பின்புலத்தில் இலங்கையின் இந்துப்பண்பாட்டுச் சுற்றுலாத்துறையின் அண்மைக்காலப் போக்குகள், அத்துறை எதிர்கொள்ளும் சவால்கள், இத்துறையை விருத்தி செய்வதற்கான உபாயங்கள் போன்றவற்றை ஒரு சமூகவியற் பாங்கான சுற்றுப்புறச் சூழலியல் தளத்தில் நின்று கலந்துரையாடுவதே இக்கட்டுரையின் இலக்காக உள்ளது.

**திறவுச்சொற்கள்:** சுற்றுலாத்துறை, சமூக சுற்றாடல், பௌதீகச் சுற்றாடல், நிலைபேறான அபிவிருத்தி, அரசாங்கம்.

வந்தாறுமூலை மஹா வித்தியாலயம்
vimalthambirajah83@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் – சந்திரபுரம் பிரதேசத்தில் அண்ணமார் வழிபாட்டின் சமகாலச் செல்நெறி: கொட்டைப்புலவு அண்ணமார் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டது.

சங்கவி.ப

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துப் பண்பாட்டு மரபில் வழிபாடானது இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. அவை ஆகமம்சார் வழிபாடு, ஆகமம்சாரா வழிபாடு என இருநிலைப்பட்டது. ஆகமம்சார் வழிபாட்டு முறையானது ஆகமம்சார் நெறிமுறைகளுக்கு அமைவாகப் பெருந்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படும் வழிபாட்டு முறையாகும். ஆகமம்சாரா வழிபாட்டு முறையானது ஆகம நெறிமுறைகளுக்குள் அடங்காது சிறு தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படும் வழிபாட்டு முறையாகும். நாட்டார் தெய்வங்களைக் கிராமிய மக்கள் ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என வகைப்படுத்தி வழிபடும் மரபு உள்ளது. இத்தெய்வங்களுள் பொல்லுக் கிழவன், சிவகுடும்பன் என்று அழைக்கப்படும் அண்ணமார், ஆண் தெய்வங்களுள் ஒருவராக வழிபடப் படுகின்றார். கிராமிய மக்களிடையே பண்டுதொட்டு இன்று வரை அண்ணமார் வழிபாடு சிறப்பிடம் பெற்று வருகிறது. தற்காலப்பகுதியில் சமூக வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் நாட்டார் தெய்வ வழிபாடானது ஆகமம்சார் நெறிமுறைகளுக்குள் உள்வாங்கப்படும் தன்மையினை அவதானிக்க முடிகிறது. இதற்கு அண்ணமார் வழிபாடும் விதிவிலக்கல்ல. யாழ்ப்பாணப் பகுதி மக்களிடையே தொன்றுதொட்டுப் பேணப்பட்டுவரும் அண்ணமார் வழிபாடு சாதியப் பகுப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் பல அண்ணமார் வழிபாட்டு இடங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு சமஸ்கிருதமயமாக்கலுக்குள் உள்வாங்கப்படும் நிலையில் இன்றும் நாட்டாரியல் மரபுகளைப் பேணி வழிபாடுகள் இடம்பெற்று வருவதை வெளிக்கொணரும் நோக்கில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து மட்டுவில் சந்திரபுரப் பகுதியில் அமைந்துள்ள கொட்டைப் புலவு அண்ணமார் ஆலயத்தை ஆய்வு எல்லையாகக் கொண்டு ஆலயத்தின் தோற்றம், வளர்ச்சி, சடங்குகள் பற்றி எடுத்துரைப்புச் செய்வதன் ஊடாக, இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டார் வழிபாடுகள் சமஸ்கிருத மயமாக்கலுக்குள் உட்படுத்தப்படுகின்ற நிலையில் இவ்வாலயமானது பழமையைப் பேணிப் பாதுகாத்தும் புதுமையைப் புறக்கணிக்காமல் ஏற்றும் வழிபாடுகள் நடைபெற்று வரும் இடமாகத் திகழ்கிறது. மேலும் இந்த ஆய்வானது கள ஆய்வின் உத்தி முறைகளினூடாகப் பெறப்பட்ட தரவுகளை உள்ளடக்கப் பகுப்பாய்வு முறைமைக்கு உட்படுத்தி விபரண ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு முறையியல்கள் ஊடாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** கிராமியத்தெய்வ வழிபாடு, அண்ணமார், சமகாலச் செல்நெறி, சமஸ்கிருத மயமாதல், சடங்கு

இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vimalthambirajah83@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JUICE - 2024
"Striving for Excellence"

Under the Sphere of
Jaffna University International Research Conference - 2024

# அழைப்பிதழ்

.................................................................
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**"இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் இலங்கையரும்"**

எனும் தொனிப்பொருளில்

**இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு (IHC) – 2023**

காலம்

21.03.2024, வியாழக்கிழமை, பகல், 09.00 மணி முதல்

நிகழிடம்

கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மாநாட்டுக் குழு
IHC 2023
இந்துக் கற்கைகள் பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிரல் - *IHC 2023*

8.00 மு.ப - பதிவுசெய்தல்

8.45 மு.ப - மங்கள விளக்கேற்றல்

8.55 மு.ப - வேத, திருமுறைப் பாராயணம், நந்திக் கொடியேற்றல்

9.10 மு.ப - வரவேற்புரை
பேராசிரியர்(திருமதி).வி.பவநேசன்
மாநாட்டுச் செயலாளர்

9.20 மு.ப - மாநாட்டுத் தலைவர் உரை
திரு.ச.பத்மநாபன்
பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்

9.35 மு.ப - மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் உரை
திரு.சி.ரமணராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை

9.50 மு.ப - பிரதம விருந்தினர் உரை
பேராசிரியர்.சி.சிறிசற்குணராசா
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

10.10 மு.ப - ஆய்வடங்கல் வெளியீடு

10.15 மு.ப - விருது வழங்கல்

10.25 மு.ப - ஆதார சுருதி உரைஞர் அறிமுகம்
கலாநிதி.ம.பாலகைலாசநாதசர்மா
தலைவர், சம்ஸ்கிருதத்துறை

10.30 மு.ப - ஆதார சுருதி உரை
கலாநிதி அங்குரன் தத்தா
செயலாளர்,சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையம்,
இந்திய உயர் ஸ்தானிகராலயம்,
கொழும்பு

11.00 மு.ப - நன்றியுரை
கலாநிதி. (திருமதி).சு.சிறிமுரளிதரன்
மாநாட்டுப் பொருளாளர்

01.00 பி.ப - ஆய்வரங்க அமர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரவன்னியன் அரங்கு

அரங்கத் தலைமை: தகைசால்பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர்
அறிமுகப்படுத்துபவர்: திரு. சி.ரமணராஜா
இணைப்பாளர்: செல்வி வர்ணி சச்சிதானந்தம்
நிகழிடம்: இந்துநாகரிகத்துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| பி.ப.01.30–பி.ப.01.40 | 2023/IHC/066 | மனமும் நடத்தைகளும் - விபுலாநந்தரின் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டது. | வர்ணி.ச |
| பி.ப.01.45-பி.ப.01.55 | 2023/IHC/091 | Rendering Stories in English from *Periya Puranam as a* strategy to promote reading skills through cultural aspects: A study with a group of undergraduates | K.Shriganeshan |
| பி.ப.02.00–பி.ப.02.10 | 2023/IHC/093 | திருகோணமலை கோணேசர் ஆலயத்தின் தீருக்கவுயில் உள்ள இந்துச் சிற்பங்கள் | ம.சிறிசாந்தன் |
| பி.ப.02.15–பி.ப.02.25 | 2023/IHC/075 | இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிற்பிரபந்தங்களின் பொருண்மைகள் | தயாளினி.கு |
| பி.ப.02.30–பி.ப.02.40 | 2023/IHC/047 | காத்தவராயன் கூத்து – மரபும் மாற்றங்களும் | த.றொபேட் அருட்சேகரன் |
| பி.ப.02.45–பி.ப.02.55 | 2023/IHC/100 | யோகர் சுவாமிகளின் பாடல்களில் திருநாவுக்கரசர் தேவாரத்தின் தாக்கம் | பரமேஸ்வரி.க |
| பி.ப.03.00–பி.ப.03.10 | 2023/IHC/013 | மட்டக்களப்புக் கோயில்களும் சமூக வழமைகளும் | குஜானி.நி |
| பி.ப.03.15–பி.ப.03.25 | 2023/IHC/040 | நவராத்திரி விரதத்தில் பிரயோக உளவியல் | சுமித்ரா.செ<br>ந.கோபிராம்<br>சங்கீதவாணி.ச |
| பி.ப.03.30–பி.ப.03.40 | 2023/IHC/092 | Effect of Yoga practices on the anxiety level of Sports players in Jaffna zone compared to stretching exercises | V.Raguvarman<br>K.Ketheeswaran<br>K.Ganeshanathan |

## பரராசசேகரன் அரங்கு

அரங்கத் தலைமை: தகைசால் பேராசிரியர் அ.சண்முகதாஸ்
அறிமுகப்படுத்துபவர்: பேராசிரியர் (திருமதி) வி.பவநேசன்
இணைப்பாளர்: செல்வி பிரேமகலா கேசவன்
நிகழிடம்: தமிழ்த்துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| பி.ப.01.30–பி.ப.01.40 | 2023/IHC/086 | அறிவியல் நோக்கில் மாந்திரீகக் கலை | பிரேமகலா.கே |
| பி.ப.01.45-பி.ப.01.55 | 2023/IHC/102 | கரவெட்டிப் பிரதேசத்தின் செவ்வாச்சி வழிபாடு: ஒரு நோக்கு | நிஜிதா.சி<br>பவனேசன்.வி |
| பி.ப.02.00–பி.ப.02.10 | 2023/IHC/097 | கம்பராமாயணம் கட்டும் அரசுகள் - ஒரு விமரண ஆய்வு | அ.அனுராதமேனன் |
| பி.ப.02.15–பி.ப.02.25 | 2023/IHC/082 | யாழ்ப்பாண இந்துக் கோவில்களில் புத்தாக்க முயற்சிகள்: கிரியை முறைகள் மற்றும் கட்டடக் கலையினூடான நோக்கு | இ.ஜனார்தன் |
| பி.ப.02.30–பி.ப.02.40 | 2023/IHC/007 | மட்டக்களப்பில் பெரியசுவாமி வழிபாட்டு முறைகள் | அ.தனோஜன்<br>வ.குணபாலசிங்கம் |
| பி.ப.02.45–பி.ப.02.55 | 2023/IHC/005 | மட்டக்களப்புப் பிரதேசத்து வதனமார் வழிபாடு: மரபும் மாற்றமும் | உ.ஜீவதர்சன்<br>வ.குணபாலசிங்கம் |
| பி.ப.03.00–பி.ப.03.10 | 2023/IHC/101 | முருகனின் போர் வீரர்கள்: நல்லூர் கோவில் சூரன்போர், ஐதீகம், சமூக முதன்மை பற்றிய மானிடவியல் ஆய்வு | இ.ஶ்ரீரஞ்சன்<br>ச.சிறிகாந்தன் |
| பி.ப.03.15–பி.ப.03.25 | 2023/IHC/012 | ஈழத்துக் கண்ணகியம்மன் சடங்குகளில் பெண்களின் வகிபங்கு | நிரோஷா.கோ |
| பி.ப.03.30–பி.ப.03.40 | 2023/IHC/010 | கதிரைமலைப்பள்ளு இலக்கியத்தில் நாட்டாரியல் கூறுகள்: ஓர் ஆய்வு | கேதீஸ்வரி.ர<br>தனுஷா.நி |
| பி.ப.03.30–பி.ப.03.40 | 2023/IHC/065 | மட்டக்களப்பு கிராமிய இசையில் பயன்படுத்தப்படும் தருக்கள் ஓர் ஆய்வு. | த.கோபிநாத்<br>த.வாகீசன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாளன் அரங்கு

**அரங்கத் தலைமை:** பேராசிரியர் மா.வேதநாதன்
**அறிமுகப்படுத்துபவர்:** செல்வி தி.கிஷாந்தினி
**இணைப்பாளர்:** செல்வி ர.லினுஜா
**நிகழிடம்:** சமூகவியற் துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| பி.ப.01.30-பி.ப.01.40 | 2023/IHC/073 | சைவ வைணவ பின்புலத்தில் பாதவழிபாடு: சிவனொளிபாதமலையை அடிப்படையாகக் கொண்டது | கிஷாந்தினி.தி |
| பி.ப.01.45-பி.ப.01.55 | 2023/IHC/042 | அக்கமாதேவியின் வசனங்களில் சைவசித்தாந்த சிந்தனைகள் | செல்வகுமாரி.சி |
| பி.ப.02.00–பி.ப.02.10 | 2023/IHC/033 | தற்கால சமூகத்தில் கலைகளின் மாற்றமும் நுகர்வோர் சமூகமும்: ஒரு மெய்யியல் நோக்கு | சாருகா.செ<br>தி.திலீபன் |
| பி.ப.02.15–பி.ப.02.25 | 2023/IHC/028 | பிரபந்தியில் வெளிப்பட்டு நிற்கும் உள உணர்வு வெளிப்பாடுகள்: ஆழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறப்பாய்வு | கஸ்தூரி.ச |
| பி.ப.02.30–பி.ப.02.40 | 2023/IHC/039 | மனஅழுத்தம் மற்றும் பதகளிப்பைக் கையாள்வதில் யோக சிகிச்சை | ச.சஜீபன்<br>க.கஜவிந்தன் |
| பி.ப.02.45–பி.ப.02.55 | 2023/IHC/058 | ஈழத்து சித்தர் குடைச்சுவாமியின் புலன்கடந்த புலக்காட்சியின் தொடர்புகள் | பாத்திமா அஸ்கியா.ஜு<br>தட்சாயினி.யோ |
| பி.ப.03.00–பி.ப.03.10 | 2023/IHC/016 | சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆளுமை வெளிப்பாடுகள் | விதுர்சிகா.த |
| பி.ப.03.15–பி.ப.03.25 | 2023/IHC/090 | சமகாலத்தில் தீவிரமடையும் மதமாற்ற முயற்சிகளும் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்களும் | லினுஜா.ர |
| பி.ப.03.30–பி.ப.03.40 | 2023/IHC/006 | சைவசித்தாந்த மரபில் சிவசின்னங்கள் பெறும் முக்கியத்துவம்: சைவபூஷண சந்திரிகையின் ஊடான நோக்கு | கீர்த்தனா.கு |

## உலகநாச்சியார் அரங்கு

**அரங்கத் தலைமை:** பேராசிரியர் (திருமதி) ஜெ.இராசநாயகம்
**அறிமுகப்படுத்துபவர்:** செல்வி பே.துஹாயா
**இணைப்பாளர்:** செல்வி கை.நிவேதா
**நிகழிடம்:** அரசறிவியற் துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| பி.ப.01.30–பி.ப.01.40 | 2023/IHC/070 | ஈழத்துச்சிதம்பர புராணம் வெளிப்படுத்தி நிற்கும் விருந்தோம்பல் சிந்தனைகள் | துஹாயா.பே |
| பி.ப.01.45-பி.ப.01.55 | 2023/IHC/003 | பரராசசேகரத்தில் உணவும் ஆரோக்கியமும்: ஓர் ஆய்வு | தனுஷா.நீ |
| பி.ப.02.00–பி.ப.02.10 | 2023/IHC/004 | திருமந்திரம், ஆசாரக்கோவை வெளிப்படுத்தும் உணவு முறைகள் | பேபிசாலினி.இ |
| பி.ப.02.15–பி.ப.02.25 | 2023/IHC/088 | கந்தசஷ்டி விரத கால வாழ்வியலில் உளவியல் | நிவேதா.கை |
| பி.ப.02.30–பி.ப.02.40 | 2023/IHC/048 | இந்துப்பண்பாட்டில் உணவியலும் ஆரோக்கியமும் | இரா.பன்னிருகைவடிவேலன் |
| பி.ப.02.45–பி.ப.02.55 | 2023/IHC/060 | வேதாத்திரிய யோகவியலும் உடற்கல்வியும் | ஜோதிலட்சுமி.மு |
| பி.ப.03.00–பி.ப.03.10 | 2023/IHC/105 | சிலப்பதிகாரம் காட்டும் சமூகத்தில் அறம் | தனிஸ்ரா.ஆ<br>சாந்தினி.அ |
| பி.ப.03.15–பி.ப.03.25 | 2023/IHC/052 | ஈழத்து இந்துக்களின் வாழ்வியலில் புதைந்துள்ள அறிவியல் | றஜிதா.அ |
| பி.ப.03.30–பி.ப.03.40 | 2023/IHC/025 | இலங்கையில் பண்பாட்டுச் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்கள்: சமூகவியல் நோக்கு | த.விமல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் அரங்கு: சங்கிலியன் அரங்கு

**அரங்கத் தலைமை:** கலாநிதி த.குணபாலசிங்கம்
**அறிமுகப்படுத்துபவர்:** கலாநிதி ச.முகுந்தன்
**இணைப்பாளர்:** செல்வி ர.கவஸ்திகா
**நிகழிடம்:** கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| **பி.ப.01.30–பி.ப.01.40** | 2023/IHC/055 | ஆரம்பப் பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனையும் இந்துப் பண்பாடும | டிஜானா.ற<br>பவித்ரா.கோ<br>இதர்சினி.இ |
| **பி.ப.01.45-பி.ப.01.55** | 2023/IHC/054 | காமன் கூத்தும் மலையக பண்பாடும் | லோகேஸ்வரி.பா<br>கோவிந்தனி.க<br>சமீதா.பா |
| **பி.ப.02.00–பி.ப.02.10** | 2023/IHC/023 | சைவசமயவளர்ச்சியில் சமயநிறுவனங்களின் பங்களிப்பு: அளவெட்டிப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது | நி.சிவாஜன் |
| **பி.ப.02.15–பி.ப.02.25** | 2023/IHC/069 | இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு: வலம்புரி நாளிதழ்களை முன்னிறுத்தியது | குவிதா.ஜ |
| **பி.ப.02.30–பி.ப.02.40** | 2023/IHC/029 | அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் சைவசமயத்தின் சமகாலப் போக்குகள் | சந்தோசா.தி |
| **பி.ப.02.45–பி.ப.02.55** | 2023/IHC/031 | இலங்கையில் இந்துசமய வழிபாட்டுச் செல்நெறியில் பாதயாத்திரை: உகந்தை கதிர்காம யாத்திரையை அடிப்படையாகக் கொண்டது | கிர்த்தனா.ஜெ |
| **பி.ப.03.00–பி.ப.03.10** | 2023/IHC/043 | திருக்கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் கோபுரக் கட்டுமானம்: உருத்திரபுரீஸ்வரர் சிவன்கோயிலை அடிப்படையாகக் கொண்டது | தமிழ்ச்செல்வி.ப |
| **பி.ப.03.15–பி.ப.03.25** | 2023/IHC/046 | இலங்கையில் இந்துசமயம் எதிர்நோக்கும் சவால்கள் | சுலக்சி.வி<br>சனிசியா.செ<br>கிறிஸ்ரினா<br>இவாஞ்சலின்.து |

## மாணவர் அரங்கு: செகராசசேகரன் அரங்கு

**அரங்கத் தலைமை:** பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
**அறிமுகப்படுத்துபவர்:** கலாநிதி (திருமதி)சு.சிறிமுரளிதரன்
**இணைப்பாளர்:** செல்வி ச.நிவேரகா
**நிகழிடம்:** சம்ஸ்கிருதத்துறை விரிவுரை மண்டபம்

| நேரம் | கட்டுரை இல | ஆய்வுத்தலைப்பு | கட்டுரையாளர் |
|---|---|---|---|
| **பி.ப.01.30–பி.ப.01.40** | 2023/IHC/051 | அறிகை நடத்தை சிகிச்சையில் ஆலய வழிபாட்டின் பங்களிப்பு | பிரியங்கா.கு<br>ச.சஜூபன்<br>லோ.லோகேஸ்வரன் |
| **பி.ப.01.45-பி.ப.01.55** | 2023/IHC/076 | இந்துசமயப் பண்பாட்டில் மாஸ்லோவின் தேவைக்கொள்கை | பிரவினா.பு<br>பிரவீணா.இ<br>பி.அன்றூஜவன்<br>றொசாந்தன் |
| **பி.ப.02.00–பி.ப.02.10** | 2023/IHC/064 | சிவயோக சுவாமிகளின் 'நற்சிந்தனை'யில் ஒழுக்கவியல் சிந்தனைகள் | அபிராமி.செ |
| **பி.ப.02.15–பி.ப.02.25** | 2023/IHC/072 | வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் சிற்றின்ப வெளிப்பாடு | திலுஷிகா.ரி |
| **பி.ப.02.30–பி.ப.02.40** | 2023/IHC/099 | மனிதவாழ்வில் மந்திரச் சடங்குகளும் உளவியலின் தாற்பரியமும். | இதயகுமாரி.சி<br>சஜானா.எ |
| **பி.ப.02.45–பி.ப.02.55** | 2023/IHC/079 | இந்துப் பண்பாட்டுச் சுற்றுலாவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் | கீதாஞ்சலி.த<br>அபிராமி.சூ |
| **பி.ப.03.00–பி.ப.03.10** | 2023/IHC/036 | மட்டுவில் - சந்திரபுரம் பிரதேசத்தில் அண்ணமார் வழிபாட்டின் சமகாலச் செல்நெறி: கொட்டைப்புலவு அண்ணமார் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டது. | சங்கவி.ப |
| **பி.ப.03.15–பி.ப.03.25** | 2023/IHC/081 | மட்டக்களப்புப் பாரம்பரியத்தில் வைரவர் வழிபாடு | அபிஷைனா.சி |
| **பி.ப.03.30–பி.ப.03.40** | 2023/IHC/030 | இலங்கையில் திரௌபதியம்மன் வழிபாட்டுமுறை | கஸ்மிதா.ஜெ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு:
இந்துக்கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

9 786245 901241
ISBN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org